# கத்தோலிக்க திருமறை

# தரம் - 7

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2015
இரண்டாம் பதிப்பு - 2016
மூன்றாம் பதிப்பு - 2017
நான்காம் பதிப்பு - 2018
ஐந்தாம் பதிப்பு - 2019

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

ISBN 978-955-25-0095-4

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
இல. 77, நுங்கமுகொட வீதி, களனியில் அமைந்துள்ள
ப்ரின்ட்கெயார் யுனிவர்சல் பிரைவேட் லிமிட்டட்
அச்சகத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல -
அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம் நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.

***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

## முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க - கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

திடபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி - ஆணையாளர் (அபிவிருத்தி) கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## ஆலோசனை

மேதகு கலாநிதி ஒக்ஸ்வெல்ட் கோமிஸ் ஆண்டகை (ஓய்வு நிலை).
மேதகு கலாநிதி மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை.
அருட்பணி தயா ஷெல்ட்டன் வெலிகட ஆராச்சி

## இணைப்பாளர்

அ. குலரத்தினம் - உதவி ஆணையாளர் கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## பதிப்பாசிரியர் குழு

அருட்பணி பியால் ஜானக பர்ணாந்து - தேசிய இயக்குனர், தேசிய கத்தோலிக்க திருவிவிலிய மறைக்கல்வி மத்திய நிலையம், கொழும்பு - 08.

அருட்பணி எஸ். அந்திரியாஸ் ஏபிரகாம் பர்ணாந்து - விரிவுரையாளர், சமய விழுமியப் பிரிவு தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

அருட்பணி எம்.ஜீ.எல். பர்ணாந்து - உதவிக் கல்விப் பணிப்பாளர் சமய விழுமியப் பிரிவு

அருட்பணி டீ.எம்.டீ.எ.யூட் தசாநாயக்க - வெளிவாரி விரிவுரையாளர், வடமேல் மாகாண கல்வியியற் கல்லூரி பிங்கிரிய.

அருட்பணி காமினி பெரேரோ - உதவி விரிவுரையாளர், சமய விழுமியப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

## எழுத்தாளர் குழு

| | | |
|---|---|---|
| அருட்சகோதரி. ரஞ்சி போல்துரை | - | பொறுப்பாளர் தமிழ்ப் பிரிவு<br>தேசிய மறைக் கல்வி மத்திய நிலையம்<br>கொழும்பு 08. |
| மொரின் பெட்ரிக் ஜோன் | - | ஆசிரியர்<br>புனித அந்ரோனியார் மகளிர் வித்தியாலயம்<br>கண்டி |
| தி.ஜெ.போ. அன்ரனி | - | அதிபர் (ஓய்வு நிலை) |
| துஸ்யந்தி தயாகுமாரி<br>த சில்வா | - | ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி<br>பணிமனை, மினுவாங்கொடை |
| ஆன் நிஷாந்தி ரத்ன சிங்க | - | ஆசிரியர், மேமா / பிலி/ தூய யோசேப்பு<br>மகளிர் வித்தியாலயம், நுகேகொட. |
| ஆன் பிரான்சிஸ்கா<br>இராஜயோகினி | - | ஆசிரியர்,<br>புனிதர்களின் மகளிர் வித்தியாலயம்<br>பொறள்ள. |
| அருட்சகோதரி டிமறி லோவ் | - | ஆசிரியர், மேமா / பிலி/ தூய யோசேப்பு<br>மகளிர் வித்தியாலயம், நுகேகொட. |

## பதிப்பாசிரியர் (மொழி)

| | | |
|---|---|---|
| சுரேந்தினி மணிவண்ணன் | . | ஆசிரியர்<br>தூய யோசேப்பு தேசிய பாடசாலை<br>திருகோணமலை. |

## சரவைப் பார்த்தல்

| | | |
|---|---|---|
| அருட்சகோதரி மேரி டொனேடா | - | பிரதி அதிபர் (ஓய்வு நிலை) |

## சித்திரம்

| | | |
|---|---|---|
| எம்.டீ.சர்மிளா பிரியதர்ஷனி | - | ஆசிரியர், சகல புனிதர்கள் மகளிர் ம.வி<br>பொறள்ள. |

## கணினி வடிவமைப்பு

தேவராஜா நிரோஷனி தோமஸ் - கணினி வடிவமைப்பாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## அட்டைப் படம்

சஜித் ஹெட்டியாராச்சி

# உள்ளடக்கம்

பக்க எண்


## திருவிவிலியம்

1. இஸ்ரயேல் இறைவாக்கினர் 1
2. இறைவாக்குரைப்போர் 5
3. பெரிய இறைவாக்கினர் 9
4. சிறிய இறைவாக்கினர் 14

## விசுவாசம்

5. குலமுதுவர் ஆபிரகாமின் அழைப்பு 18
6. இறைவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கை 23
7. குலமுதுவர் ஈசாக் 28
8. குலமுதுவர் யாக்கோபு 33
9. திருத்தூதர்களின் அழைப்பு 38

## அருளடையாளங்கள்

10. திருமுழுக்கு 45
11. குருத்துவம் 50
12. துறவற வாழ்வு 55
13. பொது நிலையினரின் அழைப்பு 61
14. திருமணம் 66

## பத்துக் கட்டளைகள்

15. பெற்றோருக்கு மதிப்பளிப்போம் 72
16. பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக 77
17. களவு செய்யாதிருப்பாயாக 82
18. பிறர் உடைமையை விரும்பாதிருப்பாயாக 86

## செப வாழ்வு

19. செபமாலைப் பக்தி 90
20. நவநாட்களும் திருவிழாவும் 96
21. மாலை ஆராதனையும் நற்கருணை ஆசீரும் 101
22. சிலுவைப் பாதை 105
23. திருமணித்தியாலம் 111
24. நற்கருணை ஆண்டவரை சந்தித்தலும் நற்கருணைப் பவனியும் 114
25. திருயாத்திரை 117

# அறிமுகம்

*திருமறையானது இறைவார்த்தை, திருச்சபையின் பாரம்பரியங்கள் ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளதாகும். அதாவது திருவிவிலியமும் திருச்சபையின் படிப்பினைகளும் அதன் அத்திவரமாகும். திருவிவிலியத்தையும் கத்தோலிக்க திருச்சபையின் மறைக் கல்வி நூலையும் மூலமாகக் கொண்டு இப்பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்க திருச்சபையின் உத்தியோகபூர்வமான படிப்பினைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.*

*இப்பாடநூலானது ஐந்து அலகுகளில் 25 பாடங்களைக் கொண்டதாகும். முதலாவது அலகில் திருவிவிலியம் தொடர்பான விளக்கமும், இரண்டாவது அலகில் இறை வெளிப்பாட்டுக்கு பதில் அளிப்பதோடு நம்பிக்கையில் வாழ்வதையும், மூன்றாவது அலகில் அருளடையாளங்கள் வழியாக இயேசுக் கிறிஸ்துவோடு உறவு கொண்டு புது வாழ்வொன்றுக்குச் சான்று பகர்வதும், நான்காவது அலகின் வழியாக இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்போடு வாழ்வதையும், ஐந்தாவது அலகின் வழியாக செபத்தினால் ஊட்டம் பெற்று இறைவனோடும் மனிதரோடும் உறவினைக் கட்டியெழுப்புவது தொடர்பான செழுமையான கருத்துக்களும் விளக்கப்பட்டுள்ளன.*

*உங்களது திருமுழுக்கின் அழைப்பினூடாக ஆரம்பிக்கப்பட்ட நம்பிக்கை வாழ்வுக்குச் சான்று பகர்வதற்கான ஆன்மீக ஊட்டத்தினைப் பெறுகின்ற கற்றல் கற்பித்தலில் நீங்கள் ஈடுபட வேண்டுமென வேண்டுதல் செய்கிறேன். நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுள்ள, பண்பு நிறைந்த சிறந்த, உயரிய மனித கிறிஸ்தவ மதிப்பீடுகள் உங்களுள் உருவாகக்கடவதாக!*

*இறை ஆசீர்*

*அருட்பணி பியால் ஜானக பர்ணாந்து*
*தேசிய இயக்குனர்*
*தேசிய திருவிவிலிய மறைக்கல்வி மத்திய நிலையம்*


# 1 இஸ்ரயேல் இறைவாக்கினர்

ஒரு கண்ணாடியைச் சூரிய ஒளி படும் வண்ணம் பிடிக்கும்போது தேவையான இடத்துக்கு அவ்வொளியைத் தெறிக்கச் செய்கின்ற ஆற்றல் அதற்கு உள்ளது. இதன்படி, கண்ணாடியிலிருந்து தெறிக்கப்படுவது கண்ணாடியில் பரவியுள்ள ஒளிக்கதிர்களேயாகும். ஒரு கண்ணாடி செய்கின்ற வேலையைப்போல செய்ய தனி ஆட் குழுவினர் பழைய ஏற்பாட்டில் இருந்தனர். ''இஸ்ரயேல் இறைவாக்கினர்'' என்பவர்களே இவர்களாவர். இறைவனின் செய்தி இவர்களை நோக்கி வந்தபோது இஸ்ரயேல் மக்களுக்கு இவர்கள் அதனை வெளிப்படுத்தினர். கீழே உள்ள படத்தில் இதன் பிரதிபலிப்பைக் காணலாம்.



படம் 1.1 - இறைவாக்கினரின் அழைப்பு

இறைவாக்கினரை எபிரேய மொழியில் ''நபி'' எனவும் கிரேக்க மொழியில் ''பிறொவ்படெஸ்ட்'' எனவும் அழைப்பர். ''இறைவனுக்காகப் பேசுபவர்கள்'' என்பதே இதன் அர்த்தமாகும்.




பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள் இரு முக்கிய பிரிவினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர்.

1. **இறைவாக்குரைப்போர் (எழுத்து வடிவம் பெறாதோர்)** : பழைய ஏற்பாட்டில் இவர்களின் பெயரில் நூல்கள் இருக்கவில்லை. இவர்கள் சாமுவேல், அரசர்கள் ஆகிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். நாத்தான், எலியா, எலிசா போன்றோர்.

2. **எழுத்து வடிவம் பெற்றோர்** : பழைய ஏற்பாட்டில் இவர்களின் பெயரில் நூல்கள் உள்ளன. இந்த இறைவாக்கினரை இரு பிரிவினராகப் பிரிக்கலாம்.

   i. பெரிய இறைவாக்கினர்

   ii. சிறிய இறைவாக்கினர்

i. **பெரிய இறைவாக்கினர் :**

- ★ எசாயா
- ★ எரேமியா
- ★ எசேக்கியேல்

ii. ***சிறிய இறைவாக்கினர் :***

* ஓசேயா
* யோவேல்
* ஆமோஸ்
* ஒபதியா
* யோனா
* மீக்கா
* நாகூம்
* அபக்கூக்கு
* செப்பனியா
* ஆகாய்
* செக்கரியா
* மலாக்கி

இறைவனுக்காகப் பேசுகின்ற இறைவாக்கினர்கள் முதலில் இறைவனின் குரலுக்குச் செவிமடுக்க வேண்டும். இறைமக்களுக்குச் சொல்ல வேண்டியதைச்சரியாக விளங்கிக் கொள்ள வேண்டுமெனில் எப்பொழுதும் இறைவனின் குரலுக்குச் செவிமடுக்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

தற்கால சமூகத்திலே இறைவனின் குரலை எம் மத்தியில் கொண்டு வரு கின்ற முக்கிய ஊடகமாகத் திகழ்வது இறைவார்த்தை ஆகும். இதனைப் போன்று இறைவனின் குரலை நாம் இனங்காண்பதற்குப் பல்வேறு நபர்கள் எமக்கு உதவுகின்றனர். குருக்கள், துறவிகள், பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோர் முக்கியமானவர்களாவர். அத்தோடு காலத்தின் அடையாளங்கள் இறைவனின் குரலைத் தேடுவதற்கு எமக்கு உதவுகின்றன.

இறைவாக்கினர் இறைவனுக்காகப் பேசுகின்றவர் என்பதால், தாம் விரும்பியதையன்றி இறைவனுக்குத் தேவையானதையே மக்களுக்கு வெளிப்படுத்தும் பொறுப்புள்ளவராவர். ஆகவே இறைவனின் திட் டத்தை மக்களுக்குக் கொண்டு செல்லுவதற்கு இறைவாக்கினர் அழைக்கப்பட்டுள்ளனர். (எரே 1 : 4 - 10)

நாமும் திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபைக்குள் இறைவாக்கினர்களாக அருட்பொழிவு செய்யப்பட்டுள்ளோம். இந்த அழைப்பிற்குச் சான்று பகர்வது மிகவும் கடினமான செயலாகும். எனினும் நாம் இறைவல்ல மையால் ஊட்டம் பெற்றுச் செயலாற்ற வேண்டும். இதற்கமைய கீழே தரப்பட்டுள்ள கடமைகள் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

★ உண்மையுள்ளவர்களாகச் செயலாற்றுதல்.
★ தவறான வழியில் இட்டுச் செல்லப்படுகின்றவர்களைச் சரியான வழியில் கொண்டு வரல்.
★ உண்மையை மறைக்கின்றவர்களுக்குச் சவாலாக இருத்தல்.
★ சரியானதைச் செய்வதற்குப் பிறருக்கு வழிகாட்டுதல்.
★ திருவிவிலியத்தில் உள்ள செய்தியினைப் பிறருக்கு அறிவித்தல்.

காலத்துக்குரிய இறைவாக்கினர்களாக இறைவனின் திட்டத்தை இன்றைய சமூகத்திலே உண்மையாக்குவதற்கு அர்ப்பணத்தோடு உழைப்போம். வழிகாட்டுதல், நல்வழிப்படுத்துதல், சவால் விடுதல், வாழ்க்கையில் சான்று பகர்தல் ஆகியவற்றின் வழியாக உண்மையான இறைவாக்கினர்களாவோம்.

## செயற்பாடு

1. ''இறைவாக்கினர்'' என்பவர் யார்?
2. இறைவாக்கினர்களின் வகைகளை எழுதுக.
3. ஓர் இறைவாக்கினராக நீர் செய்யக்கூடிய மூன்று செயல்களை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

எங்களுடைய சொல்லாலும் செயலாலும் முன்மாதிரிகையாலும் காலத்திற்குரிய இறைவாக்கினராகத் திகழ்வோம்.

# 2 இறைவாக்குரைப்போர்

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் உண்மைக்குச் சான்று பகர்வதன் வழியாக இறைவனுக்காகப் பேசும் நபர்கள் இறைவாக்கினர் என அழைக்கப்பட்டனர். இறைவாக்குரைப்போர் இப்பணியை மிக நன்றாக நிறைவேற்றினர்.

இறைவாக்குரைப்போர் மூவர் பற்றி எமது கவனத்தைச் செலுத்துவோம்.

1. நாத்தான்
2. எலியா
3. எலிசா

### இறைவாக்கினர் நாத்தான்



படம் 2.1 - இறைவாக்கினர் நாத்தான்

தாவீது அரசன் உரியாவின் மனைவி பத்சேபாவுடன் தவறான முறையில் உறவு கொண்டிருந்தான். தாவீது அரசனின் பிழையான இச்செயலை ஒரு உவமையின் வழியாக இறைவாக்கினர் நாத்தான் எடுத்துரைத்தார். இறைவாக்கினர் நாத்தானின் இச்செயலை உணர்ந்து கொண்ட தாவீது அரசன் தனது பிழைக்காக மனம் வருந்தினார்.
(2 சாமு 12 : 1 - 15)

இறைவாக்கினர் நாத்தான் தனது மதிநுட்பத்தினால் தாவீது அரசன் செய்த பிழையை எடுத்துக்காட்டியதோடு அவரை நல்வழிக்குத் திருப்பினார். மாணவர்களாகிய நாமும் ஒருவர் தவறு செய்யும்போது அவரது உள்ளத்தைப் புண்படுத்தாது அவர் அத்தவறை உணரும்படி செய்து நல்வழிப்படுத்துவோம்.

## இறைவாக்கினர் எலியா



படம் 2.2 - இறைவாக்கினர் எலியா

ஒரு பஞ்சகாலத்தில் இறைவாக்கினர் எலியா கெரீத்து ஓடையருகில் வாழ்ந்து வந்தார். அங்கே காகங்கள் அவருக்கு அப்பமும் இறைச்சியும் கொண்டு வந்து கொடுத்தன. பின்னர் அவர் சரிபாத்து என்னும் ஊரில் வாழ்ந்த கைம்பெண்ணின் வீட்டிற்குச் சென்றார். அவளுடைய வீட்டில் கையளவு மாவும் கலயத்தில் சிறிதளவு எண்ணெயும் மட்டுமே இருந்தன. எனினும் பஞ்சம் முடியும்வரை அந்த மாவும் எண்ணெயும் குறையாமல் இருந்தன. (1 அர 17:1 - 16)

நாமும் ஆதரவின்றி வாழும் சந்தர்ப்பங்களில் இறைவனின் பல்வேறு அருள்களினால் ஆசீர்வதிக்கப்பட்டு, எமது வாழ்க்கை பாதுகாக்கப்படுவதை ''இறை பராமரிப்பு'' என அழைக்கின்றோம். இவ்வாறாகப் பஞ்சம் உண்டானபோது இறைவாக்கினர் எலியாவும் இறைபராமரிப்பை அனுபவித்தார்.

## கார்மேல் மலைமீது பலி



படம் 2.3 - கார்மேல் மலைமீது பலி

கார்மேல் மலையின் மேல் இறைவாக்கினர் எலியாவும் பாகாலின் பொய் வாக்கினரும் இரு பலிகளை ஆயத்தம் செய்தனர். உண்மையான கடவுள் பலியின் மேல் நெருப்பு மூழச் செய்து எரிபலியை ஏற்றுக் கொண்டார். பாகாலின் பொய்வாக்கினர் உரத்த குரலில் கத்தியும் அவர்களின் பலியில் நெருப்பு மூட்டப்படவில்லை. இறைவாக்கினர் எலியா பலியின்மேல் தண்ணீர் ஊற்றி செபித்தபோது அதில் நெருப்பு மூண்டது. இதனால் உண்மையான இறைவன் யாரென்பது நிரூபிக்கப் பட்டது. (1 அர 18:21 - 39)

கார்மேல் மலைமீது எரிபலி நிறைவுற்றதும் பஞ்சம் முடிவடைந் ததுடன் மழை பெய்யத் தொடங்கியது. இறைவன் தன்னில் நம்பிக்கை வைப்பவர்களைப் பாதுகாக்கின்றார். அவ்வாறே அவர்களின் தேவைகளின்போது உதவியும் செய்கின்றார். எனவே நாமும் எமது அன்றாட வாழ்க்கையில் இறைவனில் நம்பிக்கை வைத்து இறை பராமரிப்புக்காகச் செபிக்க வேண்டும்.


## இறைவாக்கினர் எலிசா



படம் 2.4 – இறைவாக்கினர் எலிசா

இறைவாக்கினர் எலிசா பன்னிரண்டு ஏர் மாடுகளைப் பூட்டி உழுது கொண்டிருந்தபோது எலியா அவரிடம் வந்து தனது மேலாடையை அவர் மீது தூக்கிப் போட்டு அவரை அழைத்தார். எலிசா எலியாவைப் பின்பற்றி இறைவாக்கினராகப் பணியாற்றினார். (1 அர 19:19 - 21)

## நாமானின் தொழுநோய் குணமாதல்



படம் 2.5 - தொழுநோய் குணமாதல்

சிரியா மன்னனின் படைத் தலைவனான நாமானின் தொழுநோயை எலிசா குணப்படுத்தினார். இதன்மூலம் உலகில் வேறு எந்த கடவுளும் இல்லை என்பதை எடுத்துக்காட்டியதோடு நாமானின் ஆணவத்தையும் அழித்தார். நாம் ஒருவருக்கு பிரதிபலனை எதிர்பார்த்து உதவிசெய்யக் கூடாது என்பதைக் காட்டவே அவர் இக்குணமாக்குதலைச் செய்தார்.

செபிப்பதனால் நாம் குணம் பெறுவதை அனுபவிக்கலாம். எமது வாழ்க்கைக்குச் செபம் ஒரு பலம் வாய்ந்த சக்தியாகும். செபமின்றி வாழ்க்கையில் வெற்றியீட்ட இயலாது. அத்தோடு ஒரே இறைவனை மட்டும் ஆராதனை செய்ய வேண்டும். பத்துக் கட்டளைகளில் முதலாம் கட்டளையைக் கடைப்பிடித்தல் எமது கடமையாகும்.

### செயற்பாடு

1. 2 சாமுவேல் 12: 1-7 ஐ வாசித்து அதில் உள்ள உவமையை எழுதவும்.
2. நீங்கள் இறைபராமரிப்பை அனுபவித்த ஒரு சந்தர்ப்பத்தை எழுதவும்.



**வாழ்க்கைக்கு...**
இடத்துக்குப் பொருந்தும் வகையில் செயற்படுவோம்.




இலவச விநியோகத்திற்காக

# 3 பெரிய இறைவாக்கினர்

எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினரை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம் என்பதை முதலாம் பாடத்தில் கற்றமை நினைவிலிருக்கும். அவர்கள் பெரிய, சிறிய இறைவாக்கினர்களாவர். இப்பாடத்தின் வழியாக பெரிய இறைவாக்கினர் மூவரைப் பற்றி நீங்கள் கற்று அறிந்து கொள்ளலாம். அவர்கள்,

1. எசாயா
2. எரேமியா
3. எசேக்கியேல் என்பவர்கள் ஆவர்.

## இறைவாக்கினர் எசாயா



படம் 3.1 - இறைவாக்கினர் எசாயா

எசாயா என்ற பெயரின் அர்த்தம் ''இறைவன் மீட்கிறார்'' என்பதாகும். இவர் கி.மு. 8 ஆவது நூற்றாண்டில் வாழ்ந்தவர். எசாயா இறைவாக்கினரின் தந்தையின் பெயர் ஆமோஸ் ஆகும்.

## இறைவாக்கினர் எரேமியா





படம் 3.2 இறைவாக்கினர் எரேமியா

''இறைவன் உயர்த்தியுள்ளார்'' என்பதே எரேமியா என்ற பெயரின் அர்த்தமாகும். இவர் கி.மு. 7 - 6 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவராவார். இறைவாக்கினர் எரேமியாவின் தந்தையின் பெயர் ஹில்கியா. இவர் ஒரு குரு ஆவார்.

## இறைவாக்கினர் எசேக்கியேல்



படம் 3.3 இறைவாக்கினர் எசேக்கியல்

''ஆண்டவர் ஆற்றல் அளிப்பார்'' என்பதே எசேக்கியேல் என்ற பெயரின் அர்த்தமாகும். இவர் கி.மு. 6 ஆவது நூற்றாண்டில் வாழ்ந்துள்ளார். அவரது தந்தையின் பெயர் பூசி ஆகும். இவர் பாபிலோனியாவிலிருந்து இஸ்ரயேல் மக்களுக்கு இறைவனின் செய்தியை வெளிப்படுத்தியுள்ளார்.



இலவச விநியோகத்திற்காக

## இறைவாக்கினர் எசாயாவின் அழைப்பு

உசியா அரசர் மறைந்த ஆண்டில், மிகவும் உயரமானதோர் அரியணையில் ஆண்டவர் அமர்ந்திருப்பதை நான் கண்டேன்; அவரது தொங்கலாடை கோவிலை நிரப்பி நின்றது. அவருக்கு மேல் சேராபீன்கள் சூழ்ந்து நின்றனர்; ஒவ்வொருவருக்கும் ஆறு இறக்கைகள் இருந்தன; ஒவ்வொருவரும் இரண்டு இறக்கைகளால் தம் முகத்தை மூடிக் கொண்டனர்; இரண்டு இறக்கைகளால் தம் கால்களை மூடி மறைத்தனர்; மற்ற இரண்டால் பறந்தனர். அவர்களுள் ஒருவர் மற்றவரைப் பார்த்து ‘‘ படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர், தூயவர்; மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது’’ என்று உரத்த குரலில் கூறிக் கொண்டிருந்தார். கூறியவரின் குரல் ஒலியால் வாயில் நிலைகளின் அடித்தளங்கள் அசைந்தன; கோயில் முழுவதும் புகையால் நிறைந்தது. அப்பொழுது நான் : ‘‘ஐயோ, நான் அழிந்தேன். ஏனெனில் தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான்; தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான்; படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே.’’ என்றேன். அப்பொழுது சேராபீன்களுள் ஒருவர் பலிபீடத்திலிருந்து நெருப்புப் பொறி ஒன்றைக் குறட்டால் எடுத்து அதைத் தம் கையில் வைத்துக் கொண்டு என்னை நோக்கிப் பறந்து வந்தார். அதனால் என் வாயைத் தொட்டு ‘‘இதோ இந்நெருப்புப் பொறி உன் உதடுகளைத் தொட்டது. உன் குற்றப்பழி உன்னை விட்டு அகன்றது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது’’ என்றார். மேலும் ‘‘யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?’’ என வினவும் என் தலைவரின் குரலை நான் கேட்டேன். அதற்கு ‘‘இதோ நானிருக்கின்றேன். அடியேனை அனுப்பும்’’ என்றேன்.

(**எசா** 6: 1 - 8)

இவ்வாறாக இறைவாக்கினர் எசாயா இறைவனின் செய்தியை இஸ்ரயேலருக்கு எடுத்துச் செல்லும் அழைப்பைப் பெற்றார்.

இறைவாக்கினர் எசாயாவின் அழைப்பைப் பார்க்கும்போது, ஆலயம் எனப்படுவது இறைவனின் பிரசன்னம் உள்ள தூய்மையான மாளிகை என்பது தெளிவாகின்றது. ஆகவே ஆலயத்தை ஆராதனைக்குரிய ஓர் இடமாகப் பாதுகாக்க வேண்டும். அதே போன்று ஆலயப் பணிகளில் ஈடுபட்டிருக்கும்போது ஆலயத்தின் புனிதத்துவம் பாதுகாக்கப்படும் விதத்தில் செயலாற்ற வேண்டும். எனவே

- ஆலயத்தினுள் நுழையும்போது இரு முழங்கால்களையும் மடித்து சிரம் தாழ்த்தி நற்கருணைநாதரை ஆராதிக்க வேண்டும்.
- ஆலயத்துள் இங்குமங்கும் ஓடித் திரியக் கூடாது.
- ஆலயத்துள் சத்தம் செய்தல், கதைத்தல் கூடாது.
- ஆலயத்துள் உணவு உண்ணல், பானங்களை அருந்துதல் கூடாது.
- ஆலயத்துக்குச் சுத்தமாக வர வேண்டும்.

இறைவாக்கினர்கள் தாம் வெளிப்படுத்த வேண்டிய இறை செய்தியை அறிவிக்கும்போது தலைமைத்துவத்துடன் செயற்பட வேண்டியவர்களாக இருந்தனர். இன்று திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்களாகிய உங்களிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக தலைமைத்துவத்துடன் செயற்படும்போது எமக்குள் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது,

- ஆன்மீகச் செயல்களில் வளர்தல்.
- சவால்களை எதிர்கொள்ளல்
- பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளல்
- குழுவாகச் செயலாற்றுதல்
- இயேசுவுக்காகச் சாட்சி பகர்தல்
- பணிவாழ்வுக்கு அர்ப்பணித்தல் என்பனவாகும்.

## செயற்பாடு

1. பெரிய இறைவாக்கினர்கள் மூவரின் பெயர்களை எழுதி, அவற்றின் அர்த்தத்தையும் அவர்கள் வாழ்ந்த காலத்தையும் அவர்களின் தந்தையர்களின் பெயர்களையும் பட்டியறப்படுத்துக.
2. ஆலயத்தின் புனிதத்துவத்தைப் பாதுகாப்பதற்கு உங்களால் செய்யக் கூடிய 5 செயற்பாடுகளை எழுதுக.
3. தலைமைத்துவப் பண்புகள் 5 எழுதுக.
4. உங்கள் பங்கில் உங்களால் செய்யக்கூடிய 5 பணிகளை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

பொறுப்புகளை ஏற்றுச் செயற்படுவோம்.


# 4 சிறிய இறைவாக்கினர்




படம் 4.1 - சிறிய இறைவாக்கினர்

இப்படத்தில் சிறிய இறைவாக்கினர் சிலரை நீங்கள் காணலாம். இறைவனின் செய்தியை மக்களிடம் கொண்டு செல்வது இவர்களின் கடமையாகும். இதன்படி சமூகத்தில் இடம்பெறுகின்ற அநியாயங்கள், ஊழல் நிறைந்த ஆட்சி, ஒழுக்கத்துக்கு மாறான செயல்கள், மக்களின் பாவ வாழ்க்கையினால் வரப்போகின்ற அழிவு, உண்மையான மனமாற்றத்தின் அவசியம், இறைவனுடன் ஒன்றிணைதலின் அவசியம், அறநெறி வாழ்வின் முக்கியத்துவம் என்பனவற்றை இவர்கள் மக்களுக்கு எடுத்துக் கூறினர். இறைவாக்கினர்கள் வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களில் தவறான வழிகளில் சென்ற இஸ்ரயேல் மக்களை இறைவன் பக்கம் திருப்புவதன் வழியாக சரியான வழியில் செல்வதற்கு வழிகாட்டினார்கள்.


## இறைவாக்கினர் ஆமோஸ்



படம் 4.2 - இறைவாக்கினர் ஆமோஸ்

இவர் கி.மு. 8 ஆம் நூற்றாண்டிலே இஸ்ரயேலில் வாழ்ந்த இறைவாக்கினராவார். யூதேயாவில் தெக்கோவா இவரது ஊராகும். இவர் ஒரு மேய்ப்பர் மட்டுமல்லாது அத்திமரம் பயிர் செய்த ஒரு விவசாயியாகவும் இருந்தார். இறைவாக்கினர் ஆமோஸ் வாழ்ந்த கால கட்டத்தில் இஸ்ரயேல் நாடு அநீதி, நேர்மையின்மை, தந்திரம் என்பவற்றால் நிறைந்து விளங்கியது. மக்களைத் துன்பங்களுக்கு உள்ளாக்கி, அடித்துத் துன்புறுத்தி அநீதியாகப் பணம் உழைத்தனர். இவ்வாறான கால கட்டத்தில் இறைவாக்கினர் அழைப்பினைப் பெற்ற ஆமோஸ், எல்லோருக்கும் பொதுவான நியாயமான இறைவன், நீதியற்ற செயல்களை அருவருக்கின்றார் எனப் பயமின்றி வெளிப்படுத்தினார். ஆகையால் ''சமூக நீதியின்'' இறைவாக்கினர் என ஆமோஸ் அழைக்கப்படுகின்றார். நாமும் நீதியாக வாழ்ந்து, சமூக அநீதிகளுக்கு எதிராகச் செயற்பட்டு இறைவாக்கினர் ஆமோசைப் போன்று செயற்படுவோமாக.

## இறைவாக்கினர் ஓசேயா




படம் 4.3 - இறைவாக்கினர் ஓசேயா

இவர் கி.மு. 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இன்னுமொரு இறைவாக்கினராவார். இவர் தமது இறைவாக்குப் பணியை இஸ்ரயேலில் ஆற்றினார். இறைவாக்கினர் ஓசேயாவின் திருமண வாழ்வும் குறிப்பிட்ட ஒரு விதத்தில் இறைவாக்குச் செய்தியாக இருந்தது. இவர் கோமேர் என்னும் பெண்ணைத் திருமணம் முடித்தார். அவள் வேறு ஆடவனின் பின் சென்றாள். இறுதியாகக் கோமேரை மனமாற்றத்திற்கு அழைத்த ஓசேயா அவரை மன்னித்தார். இறைவாக்கினர் ஓசேயாவை கோமேர் புறக்கணித்ததைப் போன்று, இஸ்ரயேல் மக்களும் தம்மை அதிகமாக

அன்பு செய்த இறைவனைப் புறக்கணித்து வேறு தெய்வங்களின் பின்னே சென் றனர். அவற்றை வழிபட்டனர். இங்கு இறைவாக்கினர் ஓசேயா தனது மனைவியை மனமாற்றத்திற்கு அழைத்ததைப் போன்று, இறைவனைப் புறக்கணித்துச் சென்று பாவ இருளில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களை மனமாற்றத்திற்கு அழைத்தார். அவர்கள் மீண்டும் இறைவனைத் தேடிச் சென்று இறைவனுக்குரிய கௌரவத்தையும் அன்பையும் செலுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கினார். இறைவாக்கினர் ஓசேயா காட்டியதைப் போன்று நாமும் ஒரே இறைவனை மட்டும் ஆராதனையும் அன்பும் செய்து அவருக்குப் பணியாற்ற வேண்டும்.

## இறைவாக்கினர் யோனா

இறைவாக்கினர் யோனாவும் கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இன்னு மொரு இறைவாக்கினராவார். இஸ்ரயேலுக்கு எதிரானவர்கள் வாழ்ந்த நினிவேக்குச் சென்று அங்குள்ள மக்களை மனமாற்றத்துக்கு அழைப்பதே இறைவாக்கினர் யோனாவின் அழைப்பாகும். இறைவனுடைய அழைப்பை ஏற்காத இறைவாக்கினர் யோனா தர்சீசு நகருக்குப் புறப்படக் கப்பலேறினார். அவர் சென்ற கப்பல் பெரும் கடல் கொந்தளிப்புக்கு உள்ளாகியது. யாரால் இவ்வாறு நிகழ்ந்தது என்பதை அறிய கப்ப லில் உள்ள அதிகாரிகள் சீட்டுப் போட்டார்கள். அப்போது சீட்டு யோனாவின் பெயருக்கு விழுந்தது. இறைவனின் வாக்கை மீறி தாம் இவ்வாறு பயணிப்பதாக யோனா அவர்களிடம் கூறினார். ''கொந்தளிப்புக்குக் காரணமானவன் நான்தான் எனவே என்னைத் தூக்கிக் கடலில் எறிந்து விடுங்கள்'' என்று யோனா கூறினார். கப்பலில் இருந்தவர்கள் தாம் விரும்பாவிடினும் இறைவாக்கினர் யோனாவினது கட்டாயத்தின் பேரில் அவரைத் தூக்கி கடலில் எறிந்தனர். அப்பொழுது கடல் கொந்தளிப்பும் தணிந்தது. இறைவாக்கினர் யோனாவை ஒரு பெரிய மீன் விழுங்கியது. அந்த மீன் மூன்று நாட்கள் வயிற்றில் வைத்திருந்து யோனாவை வெளியே கரையிலே கக்கியது. அப்போது அவர் நினிவேயை அடைந்துள்ளதை உணர்ந்தார். அங்கு



படம் 4.4 - இறைவாக்கினர் யோனா

அவர் நினிவே மக்களை மனம் திரும்பும்படிப் போதித்தார். நினிவே மக்கள் தமது பாவங்களுக்கு மனம் வருந்தி நோன்பிருந்து செபித்தார்கள். இறுதியாக அம்மக்கள் இறைவாக்கினர் யோனாவின் வழிகாட்டலுக்கு இணங்கியதால் கடவுளின் இரக்கத்திற்கு உட்பட்டனர். தீமையில் வாழ்கின்றவர்களை நேர் வழியில் இட்டுச் செல்வதற்கு இறைவாக்கினர் யோனாவைப் போன்று நாமும் செயற்படுவோம்.

## செயற்பாடு

1. கீழே காணப்படும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான இறை வாக்கினரின் பெயர்களைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

- தனது திருமண வாழ்வையே இறைவாக்குப் பணியாக்கிக் கொண்டவர் ..............................................................................
- மனம் வருந்தலின் மூலம் இறைவனின் இரக்கத்துக்கு மக்களைத் தூண்டியவர் ........................................................
- ''சமூக நீதியின் இறைவாக்கினர்'' என்னும் பெயரைப் பெற்றவர் ..........................................................................

2. கீழே தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் உங்களால் செய்யக் கூடிய இறைவாக்கினர் பணியை எழுதுங்கள்.

| சந்தர்ப்பம் | இறைவாக்கினர் பணி |
|---|---|
| • உங்கள் வகுப்பிலுள்ள ஒரு ஆதரவற்ற பிள்ளைக் குத் துன்பம் ஏற்பட் டுள்ளபோது | ..................................................<br>.................................................. |
| • உங்கள் சகோதரர் அல்லது சகோதரி இறைவனை விட்டுத் தூர விலகி வாழும்போது | ..................................................<br>..................................................<br>.................................................. |
| • உங்கள் நண்பர் நெறி தவறி வாழும்போது | ..................................................<br>.................................................. |



**வாழ்க்கைக்கு...**

காலத்தின் அடையாளங்களை இனங்கண்டு
இறைவாக்கினர் பணியைப் புரிவோம்

# 5 குலமுதுவர் ஆபிரகாமின் அழைப்பு



படம் 5.1 - ஆபிரகாம்

ஆதாம், ஏவாள் பாவம் செய்தபின், ஒரு மீட்பரை அனுப்பி மனித இனத்தைப்பாவத்திலிருந்துவிடுவிப்பதாகஆண்டவர்வாக்குறுதியளித்தார். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக ஆண்டவர் தேர்ந்து கொண்ட முதலாவது நபர் ஆபிரகாம் ஆவார். இவர் குலமுதுவர் என அழைக் கப்பட்டார். இவ்வாறு ஆண்டவர் ஆபிரகாமைத் தேர்ந்து கொண்டமை, அவருக்களித்த சிறப்பான அழைப்பின் ஆரம்பமாகும். அந்த அழைப்பு திருவிவிலியத்திலே இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது.


ஆண்டவர் ஆபிராமை நோக்கி, ''உன் நாட்டிலிருந்தும் உன் இனத் தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன். நீயே ஆசியாக விளங்குவாய்...'' ஆண்டவர் ஆபிராமிற்குக் கூறியபடியே அவர் புறப்பட்டுச் சென்றார். அவரு டன் லோத்தும் சென்றார். ஆபிராம் ஆரானை விட்டுச் சென்ற பொழுது அவருக்கு வயது எழுபத்தைந்து. ஆபிராம் தன் மனைவி சாராளையும் தம் சகோதரன் லோத்தையும் உடனழைத்துச் சென்றார். அவர்கள் ஆரானில் சேர்த்திருந்த செல்வத்துடனும் வைத்திருந்த ஆள்களுடனும் கானான் நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்று அந் நாட்டைச் சென்றடைந்தனர்... ஆண்டவர் ஆபிராமிற்குத் தோன்றி, '' உன் வழிமரபினர்க்கு இந்நாட்டைக் கொடுப்பேன்'' என்றார்.

தொ. நூ. 12 : 1-2, 4- 5, 7




இலவச விநியோகத்திற்காக

ஆபிரகாமின் பிறந்த இடம் ஊர் என்ற நகரமாகும். அவர் தனது தந்தை மற்றும் உறவினருடன் ஆரானில் வாழ்ந்தார். அங்கு வாழும்போது ஆண்டவரிடமிருந்து அவர் ஒரு விசேட அழைப்பைப் பெற்றார். அவ்வழைப்புக்கேற்ப அவருக்கு கானான் என்ற நாட்டிற்குச் செல்ல நேர்ந்தது. அது வாக்களிக்கப்பட்ட நாடாகும். கீழே காணும் படத்தில் ஊர், ஆரான், கானான் ஆகிய இடங்களை அறிந்து கொள்ளுங்கள்.





ஆபிரகாமின் அழைப்பில் இரு தன்மைகள்

1. தியாகம்
2. சவால்



ஆபிரகாமுக்கு அவரது தாய்நாடு, உறவினர், தந்தையின் இல்லம் அனைத்தையும் கைவிட்டு ஆண்டவர் காட்டிய கானான் நாட்டிற்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. தனது துன்பம், சுகபோகம், வேதனை, மகிழ்ச்சி ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்ளுவதற்கு உறவினர்களுடனான உறவு அவசியமாயினும் அவையனைத்தையும் கைவிட்டு ஆண்டவரில் முழு நம்பிக்கையையும் வைத்து இப்பயணத்தை மேற்கொள்ள வேண்டியதாயிருந்தது. ஆபிரகாம் ஆண்டவரிடமிருந்து பெற்ற அழைப்பை முழுமையாக விசுவசித்தார். அதனால் ஆபிரகாம் ''விசுவாசத்தின் தந்தை'' என அறிமுகப்படுத்தப்படுகிறார். ஆண்டவரில் முழு நம்பிக்கையையும் வைத்துச் செயற்படுவதற்கு இந்நிகழ்வு எமக்கொரு உதாரணமாக இருக் கின்றது.




பிள்ளையில்லாது, முதுமையில் ஆபிரகாமின் மூலம் மாபெரும் இனத்தை ஏற்படுத்துவதாக ஆண்டவர் அளித்த வாக்குறுதியை மறுக்காமல் ஆபிரகாம் ஏற்றுக் கொண்டார். ஆரான் நாட்டில் சேகரித்த அனைத்து வளங்களையும் ஆள்களையும் சேர்த்து 800 மைல் (1300 கிலோ மீற்றர்) தூரத்திலிருந்த ஒருபோதும் அறிந்திராத கானான் நாட்டிற்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. இவையனைத்தும் ஆபிரகாம் முகங்கொடுத்த சவால்களாகும்.

## ஆபிரகாம் பெற்ற வாக்குறுதி

ஆண்டவரின் குரலுக்குச் செவிசாய்த்து அதன்படி வாழும்போது சில தியா கங்களைச் செய்ய வேண்டி ஏற்படும். சில சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். ஆயினும் அனைத்துமே தியாகங்கள், சவால்களினால் மட்டும் நிறைவுபெற்று விடாது. இறைசித்தத்தை நிறைவேற்றுபவர்களுக்கு ஆண் டவரின் ஆசீர்வாதம் கிடைக்கின்றது. ஆபிரகாம் ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ள இருக்கும் அருள், அவர் ஆண்டவரிடமிருந்து பெற்றுக் கொண்ட வாக்குறுதிகள் இரண்டு விடயங்களில் காட்டப்படுகிறது. அவை யாவன :-

1. ஆபிரகாமிலிருந்து ஒரு பெரிய இனம் தோன்றுதல்
2. ஆபிரகாமின் வழி மரபினருக்கு ஒரு நாட்டை அளித்தல்

ஆபிரகாமிற்கு வயது 75, அவர் மனைவி சாராவுக்கு வயது 65. வயதான அவர்களுக்கு ஒரு மகனைப் பெற்றுக் கொடுப்பதன் வழியாக ஒரு பெரிய இனத்தை உருவாக்குவதே இறைவனின் நோக்கமாக இருந்தது. அந்த வாக்குறுதிக்கேற்பத் தோன்றிய மாபெரும் இனம்தான் இஸ்ரயேல் மக்களாவர். அவர்களுக்கு அளித்த வாக்குறுதிக்கேற்பக் கிடைக்கப் பெற்ற நாடு ''வாக்களிக்கப்பட்ட நாடு'' ஆகும்.

### ஆபிரகாமின் அழைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய முன் மாதிரிகைகள்

- மாணவர்களாகிய உங்களை ஆண்டவர், பலவித பணிகளுக்காக அழைக்கின்றார். அவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளுவதற்கு நீங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

- பெற்றுக்கொண்ட அழைப்புக்கேற்ப இயலுமானவரை ஆண்டவ ருக்குப் பணியாற்ற வேண்டும்.

- ஆண்டவரில் முழு நம்பிக்கை வைத்து இறைவார்த்தையை ஏற்று அதற்கேற்ப வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும்.

- எமது வாழ்க்கைப் பயணத்திலே பலவித தியாகங்களைச் செய்ய வேண்டி ஏற்படும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

- எமது வாழ்க்கையிலே தீர்மானம் எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் இறைசித்தத்தை ஏற்று வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

- வாழ்வில் சந்திக்கும் சவால்களுக்கு வெற்றியாக முகங்கொடுப்பதற்காக அடிக்கடி செபிக்க வேண்டும்.

## செயற்பாடு

1. ஆபிரகாமின் அழைப்பின் இரு பிரிவுகளையும் எழுதுக.
2. நம்பிக்கை குறைந்த உமது நண்பனுக்கு அல்லது நண்பிக்கு ஆண்டவரில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு எவ்வாறு வழிகாட்டுவீர் என்பதை மூன்று விடயங்களைக் குறிப்பிட்டு எழுதுக.
3. கீழ்க்காணும் சந்தர்ப்பங்களின்போது இச்சவால்களை வெற்றி கொள்வதற்கு எவ்வாறு செயற்படுவீர் என்பதை எழுதிக் காட்டுக.
   i. உமது நல்ல நண்பன் உம்முடன் மனத்தாங்கலாக இருக்கும்போது
   ii. விளையாட்டுப் போட்டியில் நீர் தோல்வியடையும்போது
   iii. உல்லாசப் பயணம் செல்வதற்குப் பெற்றோர் அனுமதி கிடைக்காதபோது
   iv. உமது தாய் சுகயீனமாக இருக்கும்போது
   v. உமது வாழ்விலே துன்பம், பிரச்சினை ஏற்படும்போது
4. ஆபிரகாமுக்கு ஆண்டவர் அளித்த வாக்குறுதிகள் இரண்டை எழுதுக.
5. ஆபிரகாமின் வாழ்விலிருந்து நீர் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகைகள் மூன்றை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

- அன்றாடம் வாழ்வில் பெற்றுக் கொள்ளும் அழைப்புக் களை ஏற்றுக் கொள்வோம்.
- வாழ்வின் அன்றாட தேவைகளின்போது நம்பிக் கையுடன் ஆண்டவரிடம் திரும்புவோம்.




இலவச விநியோகத்திற்காக

# 6 இறைவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கை

உடன்படிக்கை என்பது இரு நபர்களுக்கிடையில் அல்லது இரு குழுக் களுக்கிடையில் ஏற்படுத்தப்படும் இணக்கப்பாடாகும். இன்றைய சமூகத்திலே பலவித உடன்படிக்கைகள் உள. திருமண உடன்படிக்கை, சமாதான உடன்படிக்கை, வியாபார உடன்படிக்கை என்பன அவற்றுள் சில. இதில் ஏதாவதொரு உடன்படிக்கை செய்து கொண்ட பின் அதனை உறுதிப்படுத்த இரு சாராரும் கைச்சாத்திட வேண்டும். மனிதருக்கிடையே ஏற்படுத்தப்படும் உடன்படிக்கைகளுக்கு மேலாக இறைவனுக்கும் மனித னுக்குமிடையில் ஏற்படும் உடன்படிக்கையில் ஒரு சிறப்பம்சம் உண்டு. உடன்படிக்கையினை முன்மொழிபவரும் முன்வைப்பவரும் நிறைவேற்று பவரும் இறைவனே ஆவார். உடன்படிக்கைக்கு முன்வருபவர் இறை வனாவார். உடன்படிக்கையிலுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுபவரும் இறைவனேயாவார்.

ஆண்டவர் ஆபிரகாமுடன் உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தினார்.




### மாபெரும் வழிமரபினர்

அப்பொழுது ஆண்டவர் ஆபிராமை வெளியே அழைத்து வந்து, ''வானத்தை நிமிர்ந்து பார். முடியுமானால், விண்மீன்களை எண்ணிப் பார். இவற்றைப் போலவே உன் வழி மரபினரும் இருப்பர்'' என்றார்.

தொ. நூ. 15 : 5

> மிகப் பெருமளவில் உன்னைப் பலுகச் செய்வேன். உன்னிடமிருந்து நாடுகளை உண்டாக்குவேன். உன் னிடமிருந்து அரசர்கள் தோன்றுவர்.
>
> தொ.நூ. 17 : 6

ஆபிரகாம் மாபெரும் வழிமரபினரின் தந்தை என்பதை மேற்குறிப் பிடப்பட்ட திருவிவிலியப் பகுதிகள் எமக்குக் காட்டுகின்றன. ஆண்டவர் ஆபிரகாமுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி வழி மரபினரை உருவாக்குவதற்கு ஒரு மகனை அளித்தார். ஆபிரகாம் வயதானவராய் இருக்கும்போது அவரினால் சாரா ஒரு மகனைப் பெற்றாள். அந்த மகனின் பெயர் ஈசாக்.

**என்றென்றும் உரிமையாகும் நாடு**

> கானானியர் வாழும் இந்நாட்டை உன் வழி மரபினர்க்கு வழங்குவேன்.
>
> தொ. நூ. 15: 21

> நீ தங்கியிருக்கும் நாட்டையும் கானான் நாடு முழுவதையும் என்றுமுள்ள உரிமைச் சொத்தாக உனக்கும் உனக்குப்பின் உன் வழி மரபினருக்கும் வழங்குவேன்.
>
> தொ. நூ. 17:8

கானான் நாட்டை ஆண்டவர் ஆபிரகாமின் வழிமரபினருக்கு அளிக்க இருப்பதை மேற்கண்ட திருவிவிலியப் பகுதிகள் காட்டுகின்றன. ஆபிரகாமின் வாழ்விலே, அவரது எதிர்காலம் முழுமையாக ஆண்டவரின் அருளிலும் இரக்கத்திலுமே தங்கியிருந்தது. ஆண்டவர் ஆபிரகாமிற்கு அளித்த வாக்குறுதியை அவ்வாறே நிறைவேற்றியதாகத் திருவிவிலியம் எமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது. வயது முதிர்ந்த காலத்திலே ஆபிரகாமிற்கும் சாராவிற்கும் ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை வழியாக உருவான இனத்தினருக்கு கானான் நாட்டை உரிமையாக்கினார்.

### உடன்படிக்கை செய்த விதம்

ஆண்டவர் ஆபிராமிடம் ''இந்நாட்டை உனக்கு உரிமைச் சொத்தாக அளிக்க உன்னைக் கல்தேயரின் ஊர் என்ற நகரிலிருந்து இங்கு அழைத்து வந்த ஆண்டவர் நானே'' என்றார். அதற்கு ஆபிராம் ''என் தலைவராகிய ஆண்டவரே, இதை நான் உரிமையாக்கிக் கொள்வேன் என்பதை எப்படி தெரிந்து கொள்வேன்?'' என்றார். ஆண்டவர் ஆபிராமிடம் ''மூன்று வயதுள்ள இளம் பசு, மூன்று வயதுள்ள வெள்ளாடு, மூன்று வயதுள்ள செம்மறியாடு, ஒரு காட்டுப் புறா, ஒரு மாடப் புறா ஆகியவற்றை என்னிடம் கொண்டு வா'' என்றார். ஆபிரகாம் இவற்றை எல்லாம் அவரிடம் கொண்டுவந்து, அவைகளை இரண்டிரண்டு கூறுகளாக வெட்டி ஒவ்வொரு பகுதியையும் அததற்கு இணையான பகுதிக்கு எதிரெதிரே வைத்தார். ஆனால் பறவைகளை அவர் வெட்டவில்லை. கதிரவன் மறைந்ததும் இருள் படர்ந்தது. அப்பொழுது புகைந்து கொண்டிருந்த தீச் சட்டி ஒன்றும் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தம் ஒன்றும் அந்த கூறுகளுக்கிடையே சென்றன.

தொ. நூ. 15 : 7 - 10, 17

ஆண்டவர் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்த விதத்தை மேற்கூறிய திருவிவிலியப் பகுதி எமக்குக் காட்டுகின்றது. ஆண்டவரை அடையாளப் படுத்தி இரண்டு கூறுகளாக வெட்டி உயிரினங்களின் நடுவே பயணிப்பது, எரிந்துகொண்டிருந்த தீச்சட்டியும், எரிந்து கொண்டிருந்த தீப்பந்தமும் ஆபிரகாமை அல்ல இறைவனையே அடையாளப்படுத்துகின்றன. அதன் படி இரண்டு கூறுகளாக வெட்டிய விலங்குகளின் மத்தியில் ஆண்டவரே பயணிக்கின்றார். மேலும் ஆபிரகாமின் வாழ்வில் உண்டான பலவித தடைகள், துன்பங்கள், வேதனைகள், பிரச்சினைகள் அனைத்தையும் நீக்கியதோடு ஆண்டவர், அவரது வாழ்வை ஒளியுள்ளதாக்கினார்.

## உடன்படிக்கையின் அடையாளம் (விருத்தசேதனம்)

உங்களுள் ஒவ்வொரு ஆணும் விருத்தசேதனம் செய்து கொள்ள வேண்டும். இதுவே உங்களுக்கும் எனக்கு மிடையே உள்ள உடன்படிக்கையின் அடையாளம். தலைமுறை தலைமுறையாக எட்டு நாள் ஆன உங்கள் ஆண் குழந்தை ஒவ்வொன்றுக்கும் நீங்கள் விருத்த சேதனம் செய்ய வேண்டும்.

தொ. நூ. 17 : 10 - 12

ஆண்டவர் ஆபிரகாமுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் வெளி அடையாளம் விருத்தசேதனம் ஆகும். அது இஸ்ரயேல் மக்கள் ஆண்டவருக்குத் தம்மை அர்ப்பணிப்பதன் அடையாளமாகவும் இறை அழைப்பின் அடையாளமாகவும் இருந்தது. ஆபிரகாமின் வழிமரபினர் விருத்தசேதனம் செய்ததைப் போன்று இன்று எமக்குத் திருமுழுக்கு அளிக்கப்படுகின்றது. அதன் வழியாக நாம் புதிய உடன்படிக்கையின் மக்களாகி ஆண்டவருக்கு எம்மை அர்ப்பணிப்போம்.

## ஆபிரகாமின் பெயர் மாற்றமும் பெயரின் கருத்தும்

இனி உன் பெயர் ஆபிராம் அன்று; 'ஆபிரகாம்' என்ற பெயரால் நீ அழைக்கப்படுவாய். ஏனெனில் எண்ணற்ற நாடுகளுக்கு உன்னை நான் மூதாதையாக்குகிறேன்.

தொ. நூ. 17 : 5

ஆபிரகாமின் இயற்பெயர் ஆபிராம் ஆகும். அதன் கருத்து ''மேன்மையான தந்தை'' என்பதாகும். ஆண்டவர் ஆபிரகாமின் பெயரை மாற்றி ''இனங்களின் தந்தை'' என்ற பொருள்படும் ''ஆபிரகாம்'' என்ற பெயரை அவருக்கு அளித்தார்.

ஒருவரின் பெயர் அவரது ஆளுமையை வெளிப்படுத்துகின்றது. பெயரை மாற்றுதலால் அவரின் வாழ்க்கை முறையையும் நிலையையும் கடமைகளையும் எடுத்துக்காட்டுகிறது. எமக்குத் திருமுழுக்கின்போது கிறிஸ்தவப் பெயர் தரப்பட்டுள்ளது. உங்களின் கிறிஸ்தவப் பெயருக்குரிய தூயவரின் வாழ்க்கைச் சரிதையைத் தேடி வாசியுங்கள். அத்தூயவரின் வாழ்க்கை மாதிரிகையைப் பின்பற்றுகின்றீர்களா என்பதைப் பற்றிச்


இலவச விநியோகத்திற்காக

சிந்தியுங்கள். கிறிஸ்தவப் பெயர் உங்களுக்கு இல்லாவிட்டாலும் திருமுழுக்கின்போது நீங்கள் கிறிஸ்துவுக்குள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். அதற்கேற்ப வாழ்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

திருமுழுக்கின் மூலம் நாம் ஓர் உடன்படிக்கை வாழ்விற்குள் பிரவே சித்துள்ளோம். அதனால் திருமுழுக்கு வாக்குறுதிக்கேற்ப நாம் வாழ வேண்டும். தீய செயல்கள், சாத்தானின் வல்லமைக்கு இடமளிக்காது ஆண்ட வருக்கு பிரமாணிக்கமாக வாழ வேண்டும். திருமுழுக்கின் மூலம் பிள்ளைகளாகிய நீங்களும் ஓர் அழைப்பைப் பெற்றுள்ளீர்கள் என்பதை புரிந்து அதற்காகப் பல செயற்பாடுகளில் நீங்கள் ஈடுபடலாம்.

திருச்சபையில் செயற்பாடுடைய ஓர் அங்கத்தவராகுதல்.

- ★ தமது கிறிஸ்தவ வாழ்க்கைச் சான்று மூலம் மற்றவர்களும் கிறிஸ்துவை அறியச் செய்தல்.
- ★ மற்றவர்களின் முன்னிலையில் கிறிஸ்தவ நம்பிக்கைக்குச் சான்று பகர்தல்.
- ★ பத்துக் கட்டளைகளுக்கேற்ப வாழுதல்.
- ★ பிறருக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுதல்.
- ★ மறைத் தூதுப் பணி மூலம் உயிருள்ள கிறிஸ்துவுக்குச் சான்றுபகர்தல்.
- ★ வாழ்க்கை அனுபவம் மூலம் உம்மோடு பேசுகின்ற ஆண்டவருக்குச் செவிசாய்த்தல்.

**செயற்பாடு**

1. ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் முக்கிய விடயங்கள் இரண்டை எழுதுக.
2. ''ஆபிரகாம்'' என்ற பெயரின் பொருள் என்ன?
3. திருமுழுக்கு மூலம் உடன்படிக்கை வாழ்விலே பிரவேசித்த உம்மால் பங்கில் ஆற்றக்கூடிய பணிகள் மூன்றை எழுதுக.
4. உமது பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதங்கள் மூன்றை வெவ்வேறாக எழுதிக் காட்டுக.



**வாழ்க்கைக்கு...**

நாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவோம்
திருமுழுக்கு வாக்குறுதிகளுக்கேற்ப வாழுவோம்

# 7 குலமுதுவர் ஈசாக்



படம் 7.1 - ஈசாக்கின் பிறப்பு

### ஈசாக்கின் பிறப்பு

ஆண்டவர் தாம் கூறியிருந்தபடி சாராவைக் கண்ணோக்கினார். ஆண்டவர் தம் வாக்குறுதிக்கேற்ப சாராவுக்குச் செய்தருளினார். கடவுள் வாக்களித்தபடி குறிப்பிட்ட அதே காலத்தில் சாரா கருத்தாங்கி ஆபிரகாமுக்கு அவரது முதிர்ந்த வயதில் ஒரு மகனைப் பெற்றெடுத்தார். ஆபிரகாம் தமக்குப் பிறந்த, சாரா தமக்குப் பெற்றுக் கொடுத்த மகனுக்கு ''ஈசாக்கு'' எனப் பெயரிட்டார். கடவுள் கட்டளையிட்டபடி ஆபிரகாம் தம் மகன் ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளன்று அவனுக்கு விருத்த சேதனம் செய்தார். அவருடைய மகன் ஈசாக்கு அவருக்குப் பிறந்த பொழுது அவருடைய வயதோ நூறு. அப்பொழுது சாரா ''கடவுள் என்னைச் சிரிக்க வைத்தார் என்றும் இதைக் கேட்கும் அனைவரும் என்னோடு சேர்ந்து சிரிப்பர்'' என்றும் சொன்னார்.

தொ. நூ. 21 : 1 - 6



இலவச விநியோகத்திற்காக

ஆபிரகாம் - சாராவுக்கு ஈசாக் பிறந்தபோது ஆபிரகாமின் வயது 100. சாராவுக்கு 90 வயது(தொ. நூ 17 : 17). ஆண்டவரால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை என்பது இதன் மூலம் காட்டப்படுகிறது. அதனால் நாம் ஆண்டவரில் முழு நம்பிக்கை வைக்க வேண்டும். நம்பிக்கையுடன் செபிக்க வேண்டும். ஈசாக் என்ற பெயரின் கருத்து ''சிரித்தல்'' என்பதாகும். ஈசாக்கும் ஒரு குலமுதுவராவார்.



**படம் 7.2 – ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிடுதல்**
**(தொ.நூ 22 :1 -19)**

ஆண்டவர் :- ஆபிரகாம், உனது ஒரே மகன் ஈசாக்கை அழைத்துக் கொண்டு மோரியா நிலப்பகுதிக்குச் செல். அங்கு நான் உனக்குக் காட்டும் மலைகளில் ஒன்றின் மேல் எரி பலியாக அவனை எனக்குப் பலியிடு.

ஆபிரகாம் :- மகனே ஈசாக், எரிபலி ஒப்புக் கொடுப்பதற்காக விறகு களை எடுத்துக் கொண்டு மோரியாவுக்குச் செல்வோம்.

ஈசாக் :- சரி அப்பா, நான் விரைவாகச் சென்று ஆயத்தமாகிக் கொண்டு வருகின்றேன்.

ஆபிரகாம் :- நல்லது, மகனே - வா நாம் செல்வோம். (ஆபிரகாம் தகனப் பலிக்காக ஆயத்தம் செய்த விறகை ஈசாக்கின் கையில் கொடுத்தார். தமது கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக் கொண்டார். இருவரும் புறப் பட்டுச் சென்றனர்.)

ஈசாக் :- அப்பா! இங்கே விறகு உண்டு. நெருப்பும் உண்டு. ஆனால் பலிக்கான ஆட்டுக் குட்டி எங்கே?

ஆபிரகாம் :- மகனே! அதனை ஆண்டவர் தருவார். (ஆண்டவர் கூறிய இடத்திற்கு வந்ததும் ஆபிரகாம் ஒரு பலிபீடம் அமைத்து விறகுக் கட்டைகளை அதன்மேல் அடுக்கி வைத்தார். பின் தம் மகன் ஈசாக்கை கட்டிப் பீடத்தின் மீதிருந்த விறகுக் கட்டைகளின் மேல் கிடத்தினார். பின் தன் மகனைக் கொல்வதற்காகக் கத்தியைக் கையில் எடுத்தார்.)

வானதூதர் :- ஆபிரகாம், பையன் மேல் கை வைக்காதே. உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என் பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று அறிந்து கொண்டேன்.

(ஆபிரகாம் முட்செடியில் கொம்பு மாட்டிக் கொண்டு நின்ற ஓர் ஆட்டுக் கிடாயைக் கொண்டு வந்து தன் மகனுக்குப் பதிலாக எரிபலியாக ஒப்புக் கொடுத்தார்.)

கானான் நாட்டிலே மக்கள் தம் தலைச்சன் பிள்ளைகளை இறைபலியாக வேறு தேவர்களுக்கு ஒப்புக் கொடுத்தார்கள். ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட ஆயத்தமாகும்போது ஆண்டவர் அதனைத் தடுத்தார். அதற்காக ஆட்டுக் கிடாயை அவருக்குக் கொடுத்தார். இதன் மூலம் அன்று நடைமுறையிலிருந்த பிள்ளைகளைப் பலியாக ஒப்புக் கொடுக்கும் சம்பிரதாயத்தை இஸ்ரயேலர் செய்யக் கூடாது என ஆண்டவர் காட்டுகின்றார். இறை வாக்குறுதிக்கேற்ப ஓர் இனத்தைக் கட்டியெழுப்புவதற்கிருந்த தமது ஒரே மகனைப் பலியாக ஒப்புக் கொடுக்குமளவுக்கு ஆபிரகாம் கீழ்ப்படிவதற்குக் காரணம் ஆண்டவரில் அவருக்கிருந்த அன்பும் நம்பிக்கையுமாகும்.

ஈசாக்கும் தன் தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இறை சித்தத்தை நிறைவேற்றுவதற்காகத் தன்னைக் கையளித்தார் என்பது தெளிவாகின்றது. நாமும் ஈசாக்கைப் போல் பெற்றோருக்குக் கீழ்படிந்து நல்ல பிள்ளைகளாக இருக்க வேண்டும். ஆண்டவரில் நம்பிக்கை வைத்து நல்ல பிள்ளைகளாக நாம் வாழ வேண்டும் என்பதையே ஆண்டவர் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். அன்று ஆபிரகாமிடம் எதிர்ப்பார்த்ததைப் போல் இன்று கிறிஸ்தவர்களாகிய எம்மிடமும் அர்ப்பணத்துடன்கூடிய வாழ்வையே எதிர்பார்க்கின்றார்.

### ஈசாக் மூலம் உடன்படிக்கையைப் புதுப்பித்தல்

ஈசாக்கின் வேலைக்காரர் நீர்ப்படுகையில் தோண்ட, அங்கே பொங்கியெழும் நீருற்றைக் கண்டனர். ஆனால் கெராரில் இருந்த மேய்ப்பர்கள் ஈசாக்கின் மேய்ப்பர்களோடு, ''இந்தத் தண்ணீர் எங்களதே'' என்று வாதாடினர். மீண்டும் அவர்கள் வேறொரு கிணறு தோண்டினர். முன்புபோல் அதைப் பற்றியும் வாக்குவாதம் ஏற்பட்டது. அவர் அவ்விடத்தை விட்டகன்று வேறொரு கிணற்றைத் தோண்டினார். இம்முறை வாக்குவாதம் ஒன்றும் ஏற்படாததால் ''ஆண்டவர் நம் எல்லையை விரிவுப்படுத்தியுள்ளார். நாட்டில் நாம் வளர்ச்சியுறுவோம்'' என்று சொல்லி அதற்கு ''இரகபோத்து'' என்று பெயரிட்டார். பின் அவர் அவ்விடத்திலிருந்து பெயேர்செபாவுக்குப் போனார். அன்றிரவு ஆண்டவர் அவருக்குத் தோன்றி, ''உன் தந்தை ஆபிரகாமின் கடவுள் நானே. அஞ்சாதே. ஏனெனில் நான் உன்னோடு இருக்கின்றேன். உனக்கு ஆசி வழங்கி, என் ஊழியன் ஆபிரகாமின் பொருட்டு உனது வழிமரபைப் பெருகச் செய்வேன்'' என்றார். எனவே ஈசாக்கு அங்கே ஒரு பலிபீடம் எழுப்பி, ஆண்டவரது திருப்பெயரைப் போற்றினார்.

(தொ.நூ. 26 : 19 - 25)

ஈசாக்கின் மேய்ப்பர்கள் கிணறு தோண்டும்போது கெராரில் இருந்த மேய்ப்பர்கள் ''இந்தத் தண்ணீர் எங்களதே'' என்று ஈசாக்கின் மேய்ப்பர்களோடு வாதாடினர். அதற்கு ஈசாக் காட்டிய பதிலளிப்பு முக்கியமானது. ஈசாக் அவர்களோடு சண்டையிடவில்லை. மாறாகத் தனது மேய்ப்பர்களிடம், வேறு இடத்தில் கிணறு தோண்டுமாறு கூறினார். அதன்படி நாமும் பிறரோடு சண்டையிடக் கூடாது என்பதற்கு ஈசாக் எமக்கு முன்மாதிரிகையாக இருக்கின்றார்.

ஆண்டவர் ஈசாக்கை வலிமைப்படுத்தி ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை மீண்டும் புதுப்பிக்கின்றார். அஞ்சாதே நான் உன்னோடு இருக்கிறேன். உனக்கு ஆசி வழங்கி, என் ஊழியன் ஆபிரகாமின் பொருட்டு உனது வழி மரபைப் பெருகச் செய்வேன்'' எனக் கூறி ஆண்டவர் ஈசாக்கை வலிமைப்படுத்தினார்.

ஈசாக்கின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்பவை

- ஆண்டவரில் உறுதியான நம்பிக்கை கொள்ளல்
- பெற்றோரின் அறிவுரைகளுக்கு செவிசாய்த்தல்
- வாழ்வில் சந்திக்கும் துன்ப வேதனைகளைப் பொறுமையோடு சகித்தல்
- ஆண்டவரிடம் செபித்தல்
- பிறருடன் பிரச்சினைப் படாதிருத்தல்
- பெற்றோருக்குக் கீழ்ப்படியும் நல்ல பிள்ளைகளாகுதல்

இன்று நாம் வாழுகின்ற குடும்பத்தில், பாடசாலையில், சமூகத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குப் பதிலாய் அமைவது, சமாதானத்துடன் கூடிய வாழ்க்கை முறையே என்பதை ஈசாக் எமக்கு நினைவுறுத்துகின்றார்.

## செயற்பாடு

1. ஈசாக் என்பதன் கருத்து யாது ?
2. வீட்டிலே உமது பெற்றோருக்குக் கீழ்படியும் நல்ல பிள்ளையாக செயற்படும் மூன்று சந்தர்ப்பங்களை எழுதுக.
3. வாழ்வின் பிரச்சினைகளின்போது சமாதானத்துடன் செயற்படுவதற்கு உம்மில் இருக்கவேண்டிய நற்பண்புகள் மூன்றை எழுதுக.
4. ஈசாக்கிடம் காணப்பட்ட நற்பண்புகள் இரண்டை எழுதுக.
5. ஈசாக்கின் வாழ்விலிருந்து நீர் பெறக்கூடிய மாதிரிகைகள் மூன்றை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

- பெற்றோருக்குக் கீழ்படியும் நல்ல பிள்ளைகளாக வாழுவோம்.
- பிறரோடு ஒத்துழைத்துச் செயலாற்றுவோம்.
- வாழ்க்கையில் ஏற்படும் துன்ப வேதனைகளைப் பொறுமையுடன் சகித்து வாழப் பழகுவோம்.

# 8 குலமுதுவர் யாக்கோபு



படம் 8.1 - யாக்கோபுவின் பிறப்பு

## குலமுதுவர் யாக்கோபுவின் பிறப்பு

ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றார். ஈசாக்கிற்கு நாற்பது வயதானபோது பதான் அராமைச் சார்ந்த அரமேயன் பெத்துவேலின் மகளும் அரமேயன் லாபானின் சகோதரியுமான ரெபேக்காவை மணந்து கொண்டார். ஈசாக்கு மலடியாய் இருந்த தன் மனைவிக்காக ஆண்டவரிடம் மன்றாடினார். ஆண்டவரும் அவர் மன்றாட்டைக் கேட்டருளினார். அவர் மனைவி ரெபேக்கா கருத்தரித்தார். ஆனால் அவருடைய கருப்பையில் இருந்த புதல்வர்கள் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டனர். அதை உணர்ந்த அவர் எனக்கு இப்படி நடப்பது ஏன்? என்று ஆண்டவரிடம் கேட்கச் சென்றார். ஆண்டவர் அவரை நோக்கி ''உன் கருப்பையில் இரு இனங்கள் உள்ளன. உன் வயிற்றிலிருந்தே ஈரினத்தார் பிரிந்திருப்பர். ஓர் இனம் மற்றதை விட வலிமைமிக்கதாய் இருக்கும். மூத்தவன் இளையவனுக்குப் பணிந்திருப்பான்.'' என்றார். அவருக்குப் பேறுகாலம் நிறைவுற்றபோது, இரட்டைப் பிள்ளைகள் கருப்பையில் இருந்தன. முதலாவது வெளிவந்த பிள்ளை செந்நிறமாகவும் அவன் உடல் முழுவதும் முடிமயமாகவும் இருந்தது. எனவே அவனுக்கு 'ஏசா' என்று பெயரிட்டனர். இரண்டாவது பிள்ளை தன் சகோதரன் ஏசாவின் குதிங்காலைக் கையால் பற்றிக் கொண்டு வெளிவந்தான். எனவே அவனுக்கு 'யாக்கோபு' என்று பெயரிடப்பட்டது. அவர்கள் பிறந்தபோது ஈசாக்கிற்கு வயது அறுபது.

(தொ.நூ. 25 : 19 - 26)



படம் 8.2 - பெத்தேலில் கனவு

## பெத்தேலில் கனவு (உடன்படிக்கையைப் புதுப்பித்தல்)

யாக்கோபு பெயேர்செபாவிலிருந்து புறப்பட்டு, கரானை நோக்கிச் சென்றான். அவன் ஓரிடத்திற்கு வந்தபோது கதிரவன் மறைந்து விட்டான். எனவே அங்கே இரவைக் கழிப்பதற்காக அவ்விடத்தில் கிடந்த கற்களில் ஒன்றை எடுத்துத் தலைக்கு வைத்துக் கொண்டு அங்கேயே படுத்துறங்கினான். அப்போது அவன் கண்ட கனவு இதுவே : நிலத்தில் ஊன்றியிருந்த ஓர் ஏணியின் நுனி மேலே வானத்தைத் தொட்டுக் கொண்டு இருந்தது. அதில் கடவுளின் தூதர் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்தனர். ஆண்டவர் அதற்கு மேல் நின்று கொண்டு,''உன் மூதாதையராகிய ஆபிரகாம், ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே. நீ படுத்திருக்கும் இந்த நிலத்தை உனக்கும் உன் வழிமரபிற்கும் தந்தருளுவேன். உன் வழிமரபோ நிலத்தின் மணலுக்கு ஒப்பாகும். நீ மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்குத் திசைகளில் பரவிச் செல்வாய். உன்னிலும் உன் வழிமரபிலும் மண்ணுலகின் எல்லா இனங்களும் ஆசிபெறுவன. நான் உன்னோடு இருப்பேன். நீ எங்கு சென்றாலும் உனக்கு நான் காவலாயிருந்து இந்நாட்டிற்கு உன்னைத் திரும்பி வரச் செய்வேன். ஏனெனில் நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிட மாட்டேன்'' என்றார். யாக்கோபு தூக்கம் தெளிந்து 'உண்மையாகவே ஆண்டவர் இவ்விடத்தில் இருக்கிறார். நானோ இதை அறியாதிருந்தேன்'' என்றார்.


இலவச விநியோகத்திற்காக

பின் யாக்கோபு அதிகாலையில் எழுந்து தலைக்கு வைத்திருந்த கல்லை எடுத்து நினைவுத் தூணாக'அதை நாட்டி அதன்மேல் எண்ணெய் வார்த்து ''லூசு'' என்று வழங்கிய அந்த நகருக்குப் பெத்தேல் என்று பெயரிட்டார். அந்த இடத்திற்கு ''ஆண்டவரின் இல்லம்'' என்று பொருள்படும்.

(தொ.நூ. 28 : 10-16,18-19)

ஆண்டவர் ஆபிரகாமுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை யாக்கோபு வுடன் மீண்டும் புதுப்பித்தார். நீ படுத்திருக்கும் இந்த நிலத்தை உனக்கும் உன் வழிமரபினர்க்கும் தந்தருளுவேன். உன் வழிமரபோ நிலத்தின் மணலுக்கு ஒப்பாகும். நீ மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்கு திசைகளில் பரவிச் செல்வாய். யாக்கோபு இங்கே இறை அழைப்பைப் பெற்றார். நித்திரையிலிருந்து எழுந்த யாக்கோபு அந்த இடத்திற்கு, ''ஆண்டவரின் இல்லம்'' என்று பொருள்படும் பெத்தேல் என்று பெயரிட்டார்.

### பெனியேலில் காட்சி (தொ.நூ 32:24-32)



8.3 படம் - பெனியேலில் காட்சி

யாக்கோபு ஆரானில் வாழ்ந்து, மீண்டும் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு வந்தார். அவ்வாறு வரும்போது ஓர் ஆடவர் பொழுது விடியுமட்டும் அவரோடு மற்போரிட்டார். யாக்கோபுவை வெற்றி கொள்ள முடியாது என்று கண்ட அந்த ஆடவர் அவரது தொடைச் சந்தைத் தொட்டார். அப்போது யாக்கோபுவின் தொடைச் சந்து விலகியது. பொழுது புலரப்போவதால் தன்னைப் போக விடுமாறு அந்த ஆடவர் யாக்கோபுவிடம் கூற, '' நீர் எனக்கு ஆசி வழங்கினாலொழிய உம்மைப் போக விடேன்'' என்று கூறினார். ''உன் பெயர் என்ன?'' என்று அந்த ஆடவர் கேட்க, அவர் ''நான் யாக்கோபு'' என்றார். அப்போது அவர், '' உன் பெயர் இனி யாக்கோபு எனப்படாது. ''இஸ்ரயேல்'' எனப்படும். ஏனெனில் நீ

கடவுளோடும் மனிதனோடும் போராடி வெற்றி கொண்டாய்'' என்றார். ''உன் பெயரைச் சொல்லும்'' என யாக்கோபு அவரைக் கேட்க, ''என் பெயரை நீ கேட்பதேன்'' எனக் கூறி யாக்கோபுக்கு ஆசீர் வழங்கினார். இக்கதையிலே யாக்கோபு அனுபவித்த ஆன்மீகப் போராட்டம் பற்றி தெளிவாகக் காட்டப்படுகிறது.

**யாக்கோபு, ஏசா ஒப்புரவாகுதல்**



படம் 8.4 யாக்கோபு ஏசாவை வணங்குதல்



படம் 8.5 ஏசாவுடன் ஒப்புரவாகுதல்

*யாக்கோபு கண்களை உயர்த்திப் பார்க்க, ஏசா நானூறு ஆள்களோடு வருவதைக் கண்டார்... யாக்கோபு... முன் சென்று தன் சகோதரரை நெருங்கி... ஏழு முறை தரையில் வீழ்ந்து வணங்கினார்.*

தொ.நூ. 33 : 1 - 3

மேற்கூறப்பட்ட திருவிவிலியப் பகுதியில் யாக்கோபு தன் சகோதரன் ஏசாவுடன் ஒப்புரவானதைப் பார்க்கின்றோம். சகோதரன் ஏசா, தன்னை நோக்கி வருவதைக் கண்ட யாக்கோபு ஏசா முன்னிலையில் ஏழுமுறை தரையில் வீழ்ந்து வணங்கியதன் வழியாக இது காட்டப்படுகின்றது. யாக்கோபுவின் இச்செயலுக்குப் பதிலளிக்கும் விதத்தில் ஏசா அவரை அரவணைத்துக் கட்டித் தழுவி மகிழ்ச்சிக் கண்ணீர் சிந்தியதாகத் திருவிவிலியத்தில் குறிப்பிடப்படுகின்றது. வார்த்தையால் மட்டுமல்ல செயலாலும் அவர்கள் ஒப்புரவானவர்கள். பிறரை மன்னிப்பவர்களை ஆண்டவரும் மன்னிக்கின்றார்.



இலவச விநியோகத்திற்காக

**ஏசாவோடு யாக்கோபு செய்த ஒப்புரவிலிருந்து பெறப்படும் முன் மாதிரிகை**

★ (யாருக்காவது தீங்கிழைத்திருந்தால்) தனது பிழையை ஏற்று மன்னிப்புப் பெற வேண்டும்.
★ எமக்குத் தவறிழைப்போரை மன்னிக்க வேண்டும்.
★ வார்த்தையால் மன்னிப்பளிப்பதைச் செயலில் நிரூபிக்க வேண்டும்.
★ சகோதரருடன் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

**செயற்பாடு**

1. யாக்கோபுவின் பெற்றோரின் பெயரை எழுதுக.
2. ரெபேக்காவுக்குப் பிறந்த இரட்டைப் பிள்ளைகளின் பெயர்களை எழுதுக.
3. ஆண்டவர் ரெபேக்காவின் வயிற்றிலிருந்த பிள்ளைகளைப் பற்றி என்ன கூறினார்?
4. ஏசா, யாக்கோபு ஆகிய பெயர்களின் கருத்து என்ன?
5. யாக்கோபு பெத்தேலில் கண்ட காட்சியைச் சுருக்கமாக எழுதுக?
6. ‘‘பெத்தேல்’’ என்பதன் பொருள் என்ன?
7. யாக்கோபுவுக்கு ‘‘இஸ்ரயேல்’’ எனப் பெயர் வரக் காரணம் யாது?
8. யாக்கோபு ஏசாவுடன் ஒப்புரவான நிகழ்விலிருந்து நீர் பெறக்கூடிய முன்மாதிரிகைகள் இரண்டை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

- அனைவருடனும் ஒற்றுமையாக வாழ்வோம்.
- எம்மோடு கோபமாயிருப்பவர்களுடன் நண்பராவோம்.
- இறை குரலுக்குப் பதிலளிப்போம்.

# 9 திருத்தூதர்களின் அழைப்பு



படம் 9.1 - இயேசுவைப் பின்பற்றிச் சென்ற முதல் திருத்தூதர்கள்
(மத் 4:18-22)

(இயேசு ஒரு நாள் கலிலேயக் கடலோரம் நடந்து கொண்டிருக்கின்றார்.)

அந்திரேயா :- பேதுரு, இந்தப் பக்கம் நடந்து கொண்டு வருகிறவர் யார்?

பேதுரு :- அவர்... இயேசு அல்லவா? (இயேசு அவர்கள் இருந்த இடத்திற்கு வருகிறார்.)

இயேசு :- என் பின்னே வாருங்கள். நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர்கள் ஆக்குவேன்.

பேதுரு,
அந்திரேயா :- ஆண்டவரே நாங்கள் உம்மோடு வருகின்றோம்.

(இயேசு அவர்களோடு நடந்து செல்லும்போது செபதேயுவின் மகன் யாக்கோபும் அவர் சகோதரனான யோவானும் தமது தந்தையான செபதேயுவுடன் படகில் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தார்கள்.)

இயேசு :- என் பின்னே வாருங்கள்

யாக்கோபு,
யோவான் :-ஆண்டவரே, நாங்கள் உம்முடன் வருகிறோம். அப்பா, நாங்கள் இயேசுவோடு போகிறோம். பேதுருவும் அந்திரேயாவும் எமது நண்பர்கள். அவர்களும் இயேசுவுடன் இருக்கின்றார்கள்.



இலவச விநியோகத்திற்காக

## இயேசுவைப் பின்சென்ற முதலாவது திருத்தூதர்கள்

இயேசு ''என் பின்னே வாருங்கள்'' எனப் பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகியோரை அழைத்தபோது அவர்கள் அவரது அழைப்பை ஏற்று அவரின் பின் சென்றதை மேல்கண்ட உரையாடல் காட்டுகின்றது. (மத். 4 : 18 - 22) அவர்கள் இயேசுவின் முதல் திருத்தூதர்கள்.
அவர்கள்,

- ★ இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தார்கள்.
- ★ அனைத்தையும் விட்டுவிட்டு இயேசுவின் பின் சென்றார்கள்.
- ★ இயேசுவுக்குத் தம் வாழ்வில் முதலிடம் அளித்தார்கள்.
- ★ இயேசுவின் பின் சென்று நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவித் தார்கள்.

திருமுழுக்கின் மூலம் எம் அனைவருக்கும் ''என் பின்னே வாருங்கள். நான் உங்களை மனிதரைப் பிடிப்பவராக்குவேன்.'' என்ற அழைப்பு தரப்பட்டுள்ளது. பலவித பணிகளுக்காக இயேசு எம்மை அழைக்கிறார். அந்த அழைப்புகளுக்கு நாம் பதிலளிக்க வேண்டும்.

கிறிஸ்தவ அழைப்பிற்குப் பதிலளிப்பதற்கு நாம் செய்ய வேண்டியவை :-


- ★ முதல் சீடர்களின் கீழ்ப்படிதலை எம் வாழ்வில் முன்மாதிரிகையாகக் கொண்டு வாழ வேண்டும்.
- ★ நாம் பெறும் அழைப்புகளுக்கு வாழ்வின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சரியான பதிலளிக்க வேண்டும்.
- ★ இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து எமக்குத் தரப்படும் பொறுப் புக்கள், கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.
- ★ இறைவார்த்தையை வாசித்துத் தியானிக்க வேண்டும்.
- ★ இறைவார்த்தைக்குச் செவிசாய்த்து மற்றவர்களுக்கு அதனை விளக்க வேண்டும்.

## மத்தேயுவின் அழைப்பு

> இயேசு அங்கிருந்து சென்றபோது மத்தேயு என்பவர் சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்ததைக் கண்டார். அவரிடம் ''என்னைப் பின்பற்றி வா'' என்றார். அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார்.
>
> (மத்தேயு . 9 : 9)

இயேசுவின் காலத்திலே வரி தண்டுவோர், உரோமைப் பேரரசிற்கு அளிக்க வேண்டிய வரியைத் தமது யூத மக்களிடம் அவர்கள் செலுத்த வேண்டிய தொகைக்கும் அதிகமாக அறவிட்டதால் சமூகத்தார் அவர்களை ஒதுக்கி வைத்திருந்தார்கள். அவர்களைப் பாவிகள் என்று எண்ணியிருந்தார்கள். ஆயினும் இயேசு சுங்கச்சாவடியிலிருந்த மத்தேயுவை ''என்னைப் பின்பற்றி வா'' என்று அழைத்தபோது அவர் அனைத்தையும் விட்டுவிட்டு எழுந்து இயேசுவைப் பின்சென்றார். இவ்வாறு பலவித தொழில் துறைகளில் ஈடுபட்டிருந்தோர், பல்வேறு பின்னணிகளில் இருந்தோர், மற்றும் பலதரப்பட்டோர் அவரது சீடர்களாயினர். நாம் எந்நிலையிலிருந்தாலும் ஆண்டவரின் அழைப்பைப் பெறும்போது அவையனைத்தையும் பின் தள்ளிவிட்டு அவரைப் பின்பற்ற வேண்டியது எமது கடமையாகும்.

## பன்னிரு திருத்தூதர்



படம் 9.2 இயேசுவும் பன்னிரு திருத்தூதர்களும்

திருத்தூதர் பன்னிருவரின் பெயர்கள் பின்வருமாறு :

முதலாவது பேதுரு என்னும் சீமோன், அடுத்து அவருடைய சகோதரர் அந்திரேயா, செபதேயுவின் மகன் யாக்கோபு, அவருடைய சகோதரர் யோவான், பிலிப்பு, பர்த்தலமேயு, தோமா, வரிதண்டினவராகிய மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோபு, ததேயு, தீவிரவாதியாயிருந்த சீமோன், இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாசு இஸ்காரியோத்து.

(மத் - 10 : 2 - 4)

இயேசு பன்னிருவரைத் தெரிவுசெய்து அவர்களுக்கு ''சீடர்கள்'' அல்லது ''திருத்தூதர்கள்'' என பெயரிட்டார். தன்னுடன் இருக்கவும் நற்செய்தியைப் போதிக்க அனுப்பவும் அவர் திருத்தூதரைத் தேர்ந்தெடுத்தார். அவர்கள் :

1. புனித பேதுரு
2. புனித அந்திரேயா
3. புனித பெரிய யாக்கோபு (சந்தியாகு)
4. புனித யோவான்
5. புனித பிலிப்பு
6. புனித பர்த்தலமேயு
7. புனித தோமா
8. புனித மத்தேயு
9. புனித சின்ன யாக்கோபு
10. புனித ததேயு
11. புனித தீவிரவாதி சீமோன்
12. இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசு இஸ்காரியோத்து

இயேசுவை யூதரிடம் காட்டிக் கொடுத்த யூதாசு, இறந்தபின் இயேசுவின் திருத் தூதர்களுள் ஒருவர் குறைந்ததால் மத்தியா என்பவரைத் திருச்சபையில் திருத்தூதராகத் தேர்ந்தெடுத்தனர். இதனால் ஆரம்பத் திருச்சபையில் பன்னிரண்டாவது திருத்தூதராகத் புனித மத்தியா விளங்குகின்றார். (திப 1:12-26)

## மறைத்தூதுப் பணியைப் பொறுப்பளித்தல்

இயேசு விண்ணேற்றமடைய முன் கீழ்க் கண்ட, வார்த்தைகளைக் கூறித் திருத்தூதருக்கு மறைத் தூதுப் பணியைப் பொறுப்பளித்தார்.

எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்.

மத் - 28 : 19 - 20

இயேசு இவ்வுலகிலிருந்து விடைபெறும் முன் தம் சீடர்களுக்கு மறைத் தூதுப் பணியை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை அளித்தார். ''எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்'' என்ற அழைப்புக்கேற்ப திருமுழுக்குப் பெற்றுள்ள நாம் அனைவரும் கிறிஸ்துவைப் பிறர் அறியும் வண்ணம் செயலாற்ற வேண்டும். கிறிஸ்து தாமே ''தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்'' என்று பணித்தார். திருமுழுக்கு அளித்தலானது கிறிஸ்துவிடமிருந்து திருச்சபை பெற்றுக் கொண்ட ஒரு பொறுப்பாகும். '' நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்'' என்ற கட்டளையினால் நாம் திருமுழுக்குப் பெற்றிருப்பது மட்டும் போதாது. அவர் கற்பித்த மறையைத் தினமும் நாம் வாழவும் பாதுகாக்கவும் வேண்டும். அதனைப் பிறர்க்கும் வெளிப்படுத்த வேண்டும்.

**கிறிஸ்துவை உலகில் அறிமுகம் செய்வதற்குச் செய்ய வேண்டியவை**

- ⋆ திருவிவிலியத்தை நன்கு கற்றல்.
- ⋆ அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
- ⋆ திருவழிபாடுகளில் தவறாது பங்கு கொள்ளுதல்.
- ⋆ இறைவார்த்தையை வாசித்தல், தியானித்தல், அதன்படி வாழுதல்.
- ⋆ மறைபரப்புப் பணியில் ஈடுபடுதல்.
- ⋆ பங்கின் பக்திச் சபைகளில் இணைந்து பணியாற்றுதல்.



இலவச விநியோகத்திற்காக

## செயற்பாடு

1. இயேசுவின் முதல் சீடர்கள் நால்வரின் பெயர்களை எழுதுக.
2. இயேசு முதல் சீடருக்கு அளித்த அழைப்பிற்கேற்ப பாட சாலையில் நீர் பணியாற்றும் மூன்று முறைகளை எழுதுக.
3. திப 1:12 - 26 ஐ வாசித்து யூதாசுக்குப் பதிலாக மத்தியா நியமிக்கப்பட்ட சம்பவத்தைப் பற்றிய ஆக்கம் ஒன்றை எழுதுக.
4. கிறிஸ்து இவ்வுலகிலிருந்து விடைபெறுமுன் தம் சீடருக்கு அளித்த கட்டளைகள் மூன்று எழுதுக.
5. மற்றவர்களை இறைவன்பால் திருப்புவதற்கு நீர் செயற்படும் மூன்று முறைகளை எழுதுக.
6. கீழே காணப்படும் கட்டங்களில் இயேசுவின் திருத்தூதர் களது பெயர்கள் மறைந்துள்ளன. இந்தக் கட்டங்களை உங்கள் பயிற்சிப் புத்தகத்தில் பிரதிசெய்து திருத்தூதர் பன்னிருவரின் பெயர்களுக்கும் வர்ணம் தீட்டுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | பே | து | ரு | சீ | மோ | ன் | க | ம | தீ |
| ப | த | ம | ர | யா | க் | கோ | பு | சி | வி |
| யோ | கை | அ | ந் | தி | ரே | யா | ப | ந | ர |
| வா | மு | ழ | ல | ச | ய | வ | ர் | தி | வா |
| ன் | சீ | பி | ரு | ம | மா | யா | த் | ட் | தி |
| தி | ரை | லி | ள | த் | இ | க் | த | ரோ | சீ |
| தோ | வை | ப் | மை | தே | ஸ் | கோ | ல | மா | மோ |
| மா | கா | பு | தா | யு | ரே | பு | மே | ரி | ன் |
| சு | யே | தா | த | தே | யு | ஜ | யு | பு | ன |
| யூ | தா | சு | இ | ஸ் | கா | ரி | யோ | த் | து |

7. இறைபணிக்கான அழைப்பை நீர் பெற்றிருந்தால் எவ்வாறு செயற்படுவீர் என்பதை ஐந்து வரிகளில் எழுதிக் காட்டுக.
8. ‘‘இறைவார்த்தைக்குச் செவிசாய்த்தலின் முக்கியத்துவம்’’ என்ற தலைப்பின் கீழ் மறைப்பாடசாலையில் ஆற்றப் போகும் உரையை 100 சொற்களில் எழுதிக் காட்டுக.



**வாழ்க்கைக்கு...**

- ★ இறைவார்த்தையானது வாழ்வின் முழுமைக்கு இட்டுச் செல்லும் ஞானத்தின் ஊற்றாக இருப்பதால் தினமும் இறைவார்த்தையை வாசித்துத் தியானிப்போம்.
- ★ இறைவார்த்தையை மற்றவர்களும் பெற்றுக் கொள்வதற்கு ஆவன செய்வோம்.
- ★ இயேசுவை மற்றவர்களுக்கு அறிவிப்போம்.

# 10 திருமுழுக்கு

நிர்மலா :- மணி அடிக்கின்றது. இப்போது எங்களுக்கு சமய பாடம் அல்லவா?

ஜசிந்தா :- ஆமாம், அதோ ஆசிரியரும் வருகின்றார்.

ஆசிரியர் :- வணக்கம் பிள்ளைகளே!

பிள்ளைகள் :- வணக்கம் டீச்சர்!

ஆசிரியர் :- பிள்ளைகளே (பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன்), தூய ஆவிக்கு பாடலொன்றைப் பாடுவோம்.

(மாணவர்களும் ஆசிரியரும் ''தூய ஆவியே, உம்மை... '' என்ற பாடலைப் பாடுகின்றார்கள். பாடல் முடிந்ததும்.)

ஆசிரியர் :- நாம் எவ்வாறு கத்தோலிக்கர் ஆனோம் என்பதை யாரால் கூற முடியும்?

நிர்மலா :- டீச்சர், நான் கூறுகின்றேன்... நாம் ஆறாம் தரத்தில் அதைப் பற்றிப் படித்தோம். நாம் அனைவரும் குழந்தையாக இருந்தபோது திருமுழுக்குப் பெற்றோம். அதனால்தான் கத்தோலிக்கரானோம்.

ஜசிந்தா :- டீச்சர், எனக்கும் நான் குழந்தையாக இருந்தபோதுதான் திருமுழுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அன்றைய தினம் எடுத்த படங்கள் எல்லாம் எங்கள் வீட்டில் இருக்கின்றன.

ஆசிரியர் :- மிகவும் நல்லது. நாம் அனைவரும் திருமுழுக்குப் பெற்றதால்தான் கத்தோலிக்கரானோம். இன்று உங்களுக்கு நான் திருமுழுக்கு அளிக்கும் விதம் பற்றிக் கற்பிக்கப் போகின்றேன்.

ஜசிந்தா :- டீச்சர், எனது தங்கைக்குத் திருமுழுக்கு அளிக்கும்போது அவளின் தலையிலே பாதர் நீர் ஊற்றுவதை நான் கண்டேன்.

ஆசிரியர் :- நல்லது. நன்றாக ஞாபகத்தில் வைத்துள்ளீர். இன்று நான் அதனை விளக்குகின்றேன். திருமுழுக்கு அளிக்கும்போது நீர், பாஸ்கா மெழுகுவர்த்தி, வெள்ளை ஆடை, திருத்தைலம் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன. நீங்கள் ஆறாம் தரத்திலே பத்தாம் பாடத்தில் அந்தப் படங்களைப் பார்த்திருப்பீர்கள்.

நிர்மலா :- ஆமாம் டீச்சர், நாங்கள் பார்த்தோம்.

ஆசிரியர் :- திருமுழுக்கு அளிப்பதற்கு சில படிமுறைகள் உள்ளன.

பெற்றிக் :- டீச்சர் அந்தப் படிமுறைகள் எந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன?

ஆசிரியர் :- இப்படிமுறைகள் ''திருவாழ்வு'' என்ற புத்தகத்தில் உள்ளன.

## திருமுழுக்குச் சடங்கு



படம் 10.1 திருமுழுக்கின் மூலம் வரவேற்கப்படல்

- திரித்துவப் புகழ். செபத்தோடு ஆரம்பித்தல்.
- பிள்ளைக்கு அளிக்க இருக்கும் கிறிஸ்தவப் பெயரைக் கேட்டல்.
- பெற்றோர், ஞானப் பெற்றோர் ஆகியோரிடம் அவர்களின் பொறுப்பு களை விசாரித்து ஒப்படைத்தல்.
- பிள்ளையின் நெற்றியில் குருவானவர், பெற்றோர், ஞானப் பெற்றோர் சிலுவை அடையாளம் வரைதல். இது சிலுவை வழியாக கிறிஸ்து பெற்றுத் தந்த மீட்பின் அடையாளமாயிருக்கின்றது.
- இறைவாக்கு வழிபாடு, விசுவாசிகளின் மன்றாட்டு. கிறிஸ்தவ நம்பிக்கைக்குப் பதிலளிப்பதற்காக - இறைவார்த்தையை விளக்குவார்.
- தூயவர்களின் துணை வேண்டுதல்.
- அசுத்த ஆவியை ஓட்டும் செபம் : பாவமும் சாத்தானும் தோல்வியுறு வதை அடையாளப்படுத்துகின்றது.
- திருமுழுக்கு ஆயத்த எண்ணெய் பூசுதல் (oc)
- பிள்ளையின் தலை மீது கை வைத்துச் செபித்தல்.
- திருமுழுக்கு வார்த்தைப்பாடு அளித்தல் : சாத்தானை விட்டுவிட்டு மூவொரு இறைவனை விசுவசிப்பதாகப் பிள்ளைக்காக பெற்றோரும் ஞானப் பெற்றோரும் வாக்களிப்பர்.
- தலைமீது நீரை ஊற்றித் திருமுழுக்களித்தல் : திருமுழுக்கின்போது அவசியமானதும் கட்டாயமானதுமான படிமுறையாய் அமைவது... ‘‘(பெயர்) தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் நான் உன்னைக் கழுவுகிறேன்’’ இவ்வாறு கூறி அருட்பணியாளர் பிள்ளையின் தலைமீது மும்முறை நீரை ஊற்றுவார். இச்சடங்கின் வழியாக திருமுழுக்குப் பெறுபவர் நீரினாலும் தூய ஆவியாலும் திருமுழுக்குப் பெறுவார்.

- திருத்தைலம் (கிறிஸ்மா SC) பூசுதல், குரு, இறைவாக்கினர், அரச ராக திருமுழுக்கு கிறிஸ்மா எண்ணெயினால் திருப்பொழிவு செய்யப்படுவார்.

- வெண்ணிற ஆடை அணிவித்தல் : திருமுழுக்குப் பெறும் பிள்ளை கிறிஸ்துவை அணிந்து கொள்வதன் அடையாளமாக இது இருக் கின்றது.

- பாஸ்காத் திரியிலிருந்து மெழுகுவர்த்தியை ஒளியேற்றுதல் : கிறிஸ்து வினால் ஒளியேற்றப்படுவதை இது அடையாளப்படுத்துகிறது. இதனால் பிள்ளை உலகில் ஒளியின் பிள்ளையாய் வாழ வேண்டும்.

- இயேசு கற்பித்த செபம்.
- பெற்றோர், ஞானப் பெற்றோரை ஆசீர்வதித்தல்.
- இறுதி ஆசீர்

**திருமுழுக்குப் பற்றிய திருச்சபையின் சட்டங்கள் :-**

திருமுழுக்குத் தொடர்பான சட்டதிட்டங்கள் திருப்பீடச் சட்டத் தொகுப் பில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி,

- பிள்ளைக்கு, அதற்குரிய பங்கு ஆலயத்தில் திருமுழுக்குக் கொடுக்கப் பட வேண்டும்.
- பங்கிற்கு வெளியில் திருமுழுக்கு அளிப்பதாயின் தகுந்த காரணம் இருக்க வேண்டும்.
- பிள்ளை பிறந்து சில வாரங்களுக்குள் திருமுழுக்குக் கொடுக்க வேண்டும்.
- பிள்ளைக்குத் திருமுழுக்கு அளிப்பதற்குப் பெற்றோர் தகுந்த முறையில் ஆயத்தம் செய்ய வேண்டும். உதாரணம் : பங்கு தந்தைக்கு முன்கூட்டியே அறிவித்து அவரின் அறிவுரையைப் பெற்றுக் கொள்ளல். அவர்களும் ஆன்மீக ரீதியாக அதற்கு ஆயத்தம் செய்ய வேண்டும்.
- மரணத்தருவாயில் உள்ள பிள்ளைக்குக் கூடிய விரைவில் திருமுழுக்குக் கொடுக்க வேண்டும்.
- குழந்தைத் திருமுழுக்கின்போது பெற்றோர் இருவரில் ஒருவர் அல்லது


இலவச விநியோகத்திற்காக

பாதுகாவலர் தம் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். அத்துடன் அப்பிள்ளையைக் கத்தோலிக்க விசுவாசத்தில் அவர்கள் வளர்ப்பார்கள் என்ற உறுதிமொழியை பங்குத் தந்தைக்கு வழங்க வேண்டும்.

- மரணத் தருவாயில் உள்ள ஒருவர் திருமுழுக்குப் பெறுவதாயின் கிறிஸ்தவ மறையின் எதிர்பார்ப்பின்படி வாழ்வதாக வாக்குறுதியளிக்க வேண்டும்.

**செயற்பாடு**

1. திருமுழுக்குப் படிமுறையில் முக்கியமான சந்தர்ப்பம் எது?
2. பாஸ்காத் திரியிலிருந்து மற்ற மெழுகுவர்த்தியை ஒளியேற்று வதன் கருத்து யாது?
3. திருமுழுக்கின் முக்கிய சந்தர்ப்பங்களை வரைந்து அவற்றை முறையாக ஒட்டி சிறு கைந்நூல் ஒன்றைத் தயாரிக்குக.



**வாழ்க்கைக்கு...**

திருமுழுக்கு வழங்கப்படும் படிமுறைகளை நன்கு அவதானித்து அது பற்றிப் பங்குத் தந்தையிடம் கேட்டு அறிந்து கொள்வோம்.

# 11 குருத்துவம்



படம் 11-1 - குருத்துவ வார்த்தைப்பாடு அளித்தல்



படம் 11.2 - முகங்குப்புற விழுந்து செபித்தல்



படம் 11-3 - தலையில் கை வைத்துச் செபித்தல்



படம் 11.4 - அர்ப்பண செபம்



படம் 11.5 - திருப்பலி உடை அணிவித்தல்



படம் 11.6 - கிறிஸ்மா தைலத்தால் கைகளை அருட்பொழிவு செய்தல்



படம் 11.7 - அப்பத்துடன் கிண்ணமும் இரசத்துடன் கலமும் அளித்தல்

மேல் காணும் படங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள். குருத்துவ அருளடையாளங்களை வழங்கும் சடங்கின் முக்கிய நிகழ்வுகள் இவற்றில் காட்டப்படுகின்றன. குருத்துவத்தை அளிப்பவர் ஆயர் ஆவார். அவர் திருத்தொண்டரின் தலை மேல் கைகளை வைத்துச் செபித்து குருத்துவத்தை அளிப்பார்.

குருத்துவம் இறைதந்தையிடமிருந்து கிடைக்கும் மேலான அழைப்பா கும். கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களுக்கு உலகின் இறுதிவரை செயற்படும்படி மறைபரப்புப் பணியினை அளித்தார். இப்பணியினை இடைவிடாது



இலவச விநியோகத்திற்காக

முன்னெடுத்துச் செல்வது குருத்துவம் என்னும் அருளடையாளமாகும். பெரிய வியாழனன்று இறுதி இராவுணவின்போது கிறிஸ்துவினால் இவ்வருளடையாளம் ஏற்படுத்தப்பட்டது. இதனால் பெரிய வியாழன், அருட்பணியாளர்களின் திருநாள் எனக் கணிக்கப்படுகின்றது. அன்றைய தினம் இறைமக்கள் அவர்களுக்காகச் செபிக்க அழைக்கப்படுகின்றனர். குருத்துவமானது ஆன்மாவிலே அழியாத முத்திரையைப் பதிக்கின்றது. இது வாழ்வில் ஒரேயொரு முறை மட்டும் பெறக்கூடிய அருளடையாளமாகும். இவ்வருளடையாளத்தைப் பெற்ற அருட்பணியாளர்கள் இறைவனுக்கும் இறைமக்களுக்குமிடையே நடுநிலையாளராகப் பணியாற்றுகின்றார்கள். குருத்துவத்திலே மூன்று நிலைகள் உண்டு. அவை :- திருத்தொண்டர், அருட்பணியாளர் (குருவானவர்), ஆயர் ஆகிய நிலைகளாகும். அந்நிலையினரின் பொறுப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

**திருத்தொண்டரின் பொறுப்புகள்**



படம் 11.8 - திருத்தொண்டர்

- ஆயர்கள், குருக்களுக்கு வழிபாடுகளில் துணை புரிதல்.
- திருப்பலியின்போது நற்செய்தி வாசித்தல், மறையுரை ஆற்றுதல்.
- சடங்கிற்கேற்ப திருமுழுக்கு அளித்தல்.
- நற்கருணை ஆசீர்வாதம் அளித்தல்.
- திருமணச் சடங்கை நிறைவேற்றுதல்.
- இறந்தோர் சடங்கை நிறைவேற்றுதல்.


**அருட்பணியாளர்களின் பொறுப்புகள்**

- திருப்பலி நிறைவேற்றுதல்.
- நற்செய்தியைப் போதித்தல்.
- உண்மையான மேய்ப்பனாகப் பங்கை நிருவகித்தல்.


படம் 11.9 - அருட் பணியாளர்

- அருளடையாளங்களை வழங்குதல். (குருத்துவம் தவிர )
- பங்கில் முதன்மை மறையாசிரியராகப் பணியாற்றுதல்.
- பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆசீர்வாதம் வழங்குதல்.

**ஆயரின் பொறுப்புகள்**


படம் 11.10 ஆயர்

- மறைமாவட்டத்தை நிருவகித்தல்
- இறைமக்களுக்கு அறிவூட்டுதல்.
- இறைமக்களைத் தூய்மைப்படுத்தல்
- இறைமக்களின் நம்பிக்கையைப் பாதுகாத்தல்.
- திருவழிபாடு நடாத்துதல்.
- அருளடையாளங்களை அளித்தல்.

கத்தோலிக்க அருட்பணியாளர்களை இரு பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

**அருட்பணியாளர்கள்**

| **மறைமாவட்ட அருட் பணியாளர்கள்** | **துறவற அருட்பணியாளர்கள்** |
|---|---|
| ஆயரின் கீழ் தமது மறை மாவட்டத்தில் பணியாற்றுபவர்கள் | துறவற சபையின் பிராந்தியத் தலைமைக்குருவின் கீழ் தமது துறவற சபையின் நிறுவுனரின் இறைத் தூண்டலுக்கேற்ப பணியாற்றுபவர்கள். |


இலவச விநியோகத்திற்காக

## அருட்பணியாளரின் வாக்குறுதியும் வார்த்தைப்பாடும்

அருட்பணியாளர்கள் வாக்குறுதி அல்லது வார்த்தைப்பாடு அளிக்க வேண்டும்.

- மறைமாவட்ட அருட்பணியாளர்கள் இரண்டு வாக்குறுதிகள் அளிக்கிறார்கள். அவை,

  1. கீழ்ப்படிவு - மறைமாவட்ட ஆயருக்குக் கீழ்ப்படிதல்
  2. மணத் துறவு - திருமணம் செய்யாது விண்ணரசுக்காக தம்மை அர்ப்பணித்தல்.

துறவற சபை அருட்பணியாளர்கள் மூன்று வார்த்தைப்பாடுகளை அளிக்கிறார்கள். அவை,

1. கீழ்ப்படிவு - தமது துறவற சபையின் மேலாளருக்குத் தலைமை அருட்பணியாளருக்குக் கீழ்ப்படிதல்.

2. மணத்துறப்பு - திருமணம் செய்யாது கற்பு வாழ்வின் மூலம் விண்ணரசுக்காகத் தம்மை அர்ப்பணித்தல்.

3. ஏழ்மை - வங்கிக் கணக்கு, வாகனங்கள், நிலபுலன்கள் ஆகியவற்றைத் தனக்கென சொந்தமாக வைத்துக் கொள்ளாமை.

   உதாரணம் : விண்ணகத்திற்காக உலக சொத்துக்கள், உரிமையை துறப்பதன் மூலம் அவற்றைப் பொதுவாகக் கொண்டு இறைப்பணியாற்றுதல்.

விண்ணரசை நோக்கி எம்மைக் கொண்டு செல்வதற்காகத் தமது வாழ்வை அர்ப்பணித்துள்ள எமது அருட்பணியாளர்கள் மட்டில் எமக்கும் சில கடமைகள் உள்ளன. அவற்றிற் சில :-

- அவர்களுக்காகச் செபித்தல்.
- திருவழிபாட்டுப் பணிகளில் உதவி புரிதல்.
- திருச்சபையின் கட்டளையான, ''திருச்சபையின் பராமரிப்பிற்காகக் காணிக்கை செலுத்துதல்'' என்பதற்கேற்ப இயலுமானவரை ஞான மேய்ப்பர்களுக்கு (அருட்பணியாளர்களுக்கு) உதவுதல்.
- விண்ணரசைப் பரப்பும் பணிகளில் துணை புரிதல்.

## செயற்பாடு

1. திருத்தொண்டர், அருட்பணியாளர், ஆயர் ஆகிய மூன்று நிலைகளிலும் உள்ளவர்களில் ஒவ்வொருவரினதும் பணிகள் மூன்றினை வெவ்வேறாக அட்டவணைப்படுத்துக.
2. மறைமாவட்ட/ துறவற சபை அருட்பணியாளர்கள் என்பவர்களுக்கு இடையிலுள்ள வேறுபாடு ஒன்றை எழுதுக.
3. அருட்பணியாளருக்காகச் செபம் ஒன்று எழுதுக.
4. உங்கள் பங்கு அருட்பணியாளர் பற்றிய விபரங்களைச் சேகரித்து அவற்றை முன்வைக்குக.
5. அருட்பணியாளர்கள் மட்டில் கடமைகள் இரண்டை எழுதுக.
6. அருட்பணியாளர்களின் சேவையைப் பாராட்டி கவிதை ஒன்று எழுதுக
7. துறவற சபை அருட்பணியாளர்கள் அளிக்கும் வார்த்தைப் பாடுகள் மூன்றையும் எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

எங்களுக்காகப் பணியாற்றும் அருட்பணியாளர்களுக்காகத் தினமும் செபிப்போம்.




இலவச விநியோகத்திற்காக

# 12 துறவற வாழ்வு



படம் 12.1 - துறவறத்தார்

துறவற வாழ்வு என்பது முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வாகும். இது ஒரு விசேட இறை அழைப்பாகும். துறவறத்தார் தூய ஆவியினால் வழிநடத்தப்பட்டு இயேசுவைப் பின்பற்றவும் அனைத்திற்கும் மேலாக இறைவனை அன்பு செய்யவும் இறையரசையும் வரவிருக்கும் வாழ்வின் மகிமையையும் இவ்வுலக வாழ்வில் வெளிப்படுத்தும் ஓர் அடையாளமாகவும் வாழ்வர்.



## துறவற அருட்பணியாளர்களின் சபைகள்

அருட்பணியாளர் ஒருவர் ஏதேனும் ஒரு துறவற சபையைச் சார்ந்தவராயின் அவர் துறவற அருட்பணியாளர் ஆவார். பொதுவாக அருட்பணியாளர்கள் குருத்துவம் என்னும் அருளடையாளத்தைப் பெற்றிருப்பதனால் திருப்பலி நிறைவேற்றும் கடமையையும் உரிமையையும் பெறுகிறார்கள். இவர்கள் தமது துறவற சபை பிராந்தியத் தலைமைத்துவ அருட்பணியாளரின் கீழ் தமது துறவற சபைச் சட்டங்களைப் பின்பற்றி வாழ்வதோடு விண்ணக வாழ்வை இவ்வுலகில் அனுபவிப்பதற்கு முயற்சிப்பர்.

**துறவற அருட்பணியாளர்கள் சபைகள் சில :-**

- அமலமரித் தியாகிகள் சபை
- இயேசு சபை
- ஆசீர்வாதப்பர் சபை
- நற்கருணைநாதர் சபை
- பிரான்சிஸ்கன் மூன்றாம் நிலைச் சபை
- கிளரேசியன் சபை

## குருத்துவம் அல்லாத துறவற சபைகள்

இவர்கள் துறவற சகோதரர்கள், துறவற சகோதரிகள் என இரு வகைப் படுவர். இவர்கள் நற்கருணையைப் பகிர்ந்தளிக்கும் பணியை நிறைவேற் றலாம்.

**துறவற அருட்சகோதரர்களின் சபைகள் சில :-**

- மாறிஸ்ட் சகோதரர்கள்
- பிரான்சிஸ்கன் மறைத்தூதுச் சகோதரர்கள்
- டிலாசால் சகோதரர்கள்
- அன்பின் சகோதரர்கள்

**அருட் சகோதரிகளின் சபைகள் சில :-**

- திருக்குடும்பக் கன்னியர் சபை
- அப்போஸ்தலிக்க கார்மேல் சபை

- நல்லாயன் கன்னியர் சபை
- தூய தூதர்கள் கன்னியர் சபை
- இரட்சகர் கன்னியர் சபை
- சிலுவையின் கன்னியர் சபை
- டொமினிக்கன் கன்னியர் சபை

துறவற சபைகளைச் சேர்ந்த துறவறத்தார் யாவரும் தம் வாழ்வை இறைவனுக்காக அர்ப்பணிக்கின்றனர். அவர்கள்,

1. ஏழ்மை
2. கீழ்ப்படிவு
3. மணத்துறப்பு

ஆகிய மூன்று வார்த்தைப்பாடுகளை அளிக்கின்றனர். முதல் வார்த்தைப் பாடு அளித்து சில வருடங்களின் பின்னர் இறுதி வார்த்தைப்பாட்டை அளிக்கின்றனர். இவ்வுலக செல்வங்களைத் துறந்து இறையாட்சியைக் கட்டியெழுப்புவதே துறவறத்தாரின் முக்கிய பணியாகும்.

துறவறத்தார் அனைவருமே விண்ணரசை இவ்வுலகில் கட்டியெழுப்பும் பணியில் பங்காற்றுகின்றனர். அவர்கள் கல்வி, சமூகப்பணி போன்ற துறைகளில் பணியாற்றுகின்றனர். அவ்வாறே பங்குகளிலும் பணி யாற்றுகின்றனர். துறவற வாழ்வில் இணைய விரும்புவோர் அதற்கான ஆழமான பயிற்சிகளைப் பெற வேண்டும். இவர்கள் தமது இவ்வுலக - வாழ்வின் ஆசைகளைத் துறந்து இறையாட்சியைப் பறைசாற்றும் பணியில் பங்கேற்கின்றனர். தமது வாழ்க்கை மாதிரிகையின் மூலம் அவர்கள் இறையாட்சியைப் பற்றிப் போதிக்கின்றனர்.

ஒவ்வொரு துறவற சபையும் அதன் நிறுவுனரின் நோக்கத்திற்கேற்ப பணியாற்றுகின்றன. அந்தப் பணியை நிறைவேற்றுவதன் வழியாக கிறிஸ்துவின் மறைபரப்புப் பணியில் அவர்கள் பங்கு கொள்கின்றனர்.

| துறவற சபை | தூதுப் பணிகள் |
|---|---|
| • அமலமரித் தியாகிகள் சபை  | ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பு, தியானம், ஞான ஒடுக்கம், வழி நடத்துதல், பங்குப் பணி, ஆன்மீக ஆலோசனை, கல்விப் பணி, நோயாளர் பணி. |
| • ஆசீர்வாதப்பர் சபை  | செபம், சகோதரத்துவம், கல்விப் பணி, மேய்ப்புப் பணி வழியாக இறைவனை மகிமைப்படுத்தல். |
| • மாறிஸ்ட் சகோதரர்கள்  | கல்விப் பணி, இளையோருக்கு சுயதொழில் கல்விப் பயிற்சி, கிறிஸ் துவைப் பறைசாற்றுதல். |
| • டிலாசால் சகோதரர்கள்  | கல்விப் பணி, இளைஞர்களுக்கான பல்வேறு பணிகள், தொழிற் பயிற்சி |
| • திருக்குடும்பக் கன்னியர் சபை  | கல்வி, சமூகப் பணி, மறைத்தூதுப் பணி, மறைக்கல்விப் பணி |
| • அப்போஸ்தலிக்க கார்மேல் சபை  | கல்வி, சமூகப் பணி, முதியோர் பராமரிப்பு, பங்குப் பணி. |

| | |
|---|---|
| • நல்லாயன் கன்னியர் சபை  | கல்விப் பணி, இளம் பெண்களுக்கான பலவித பணிகள், அவர்களின் வாழ்வைக் கட்டியெழுப்ப உதவுதல், பங்குப் பணி, கைவிடப்பட்டோரைப் பராமரித்தல். |
| • தூய தூதர்கள் கன்னியர் சபை  | கல்வி, மறைக்கல்வி, சமூகப் பணி, ஆதரவற்ற சிறுவர் விடுதிகளை நடத்துதல், சிறுவர் மற்றும் இளைஞர்களுக்காற்றும் பணிகள். |
| • இரட்சகர் கன்னியர் சபை  | கல்வி, மறைக் கல்வி, ஆதரவற்றோர் இல்லம், இளம் பெண்களுக்கான பணி, பங்குப் பணி. |
| • திருச்சிலுவைக் கன்னியர் சபை  | மறை பணி, சமூகப் பணி, பங்குப் பணி, சுகாதார சேவை, தோட்டத் தொழிலாளராக பணியாற்றல். |
| • டொமினிக்கன் கன்னியர் சபை (மால்டா)  | மறைபணி, சமூகப் பணி, முன்பள்ளி, பங்குப் பணி, கல்விப் பணி |

இவ்வாறு, பொதுநிலையினருக்காகப் பணியாற்றும் துறவறத்தாருக்கு உதவி செய்ய வேண்டியது பொது நிலையினரின் கடமையாகும், பொது நிலையினர், கீழ்க்கண்ட விதத்தில் துறவறத்தாரின் பணிகளின்போது அவர்களுக்குத் துணை புரியலாம்.

- அவர்களுடன் இணைந்து இரக்கப் பணி ஆற்றுதல்.
- அவர்களுக்காகச் செபித்தல்.
- அவர்களுக்கு மதிப்பளித்தல்.
- இறையாட்சியைப் பரப்பும் பணிகளில் அவர்களுடன் பணியாற்றுதல்.
- இறை அழைத்தலை ஊக்குவித்தல், செபித்தல்.

சில வேளைகளில் நீங்களும் துறவற வாழ்வுக்கான அழைப்பினைப் பெறலாம். இவ்வாறான அழைத்தலைப் பெற நீங்களும் செபியுங்கள்.

**செயற்பாடு**

1. கீழ்க்காணும் விடயங்களை உள்ளடக்கி 100 சொற்கள் அடங்கிய ஆக்கம் ஒன்று எழுதுக.
   - துறவற வாழ்க்கை
   - துறவற வாழ்வு ஓர் இறை அழைப்பு
   - துறவற வாழ்வின் மேன்மை
2. துறவறத்தாரின் பணிகளிலே துணைபுரியும் நான்கு முறைகளை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

குருத்துவ, துறவற வாழ்விற்கு இறை அழைப்பை வேண்டிச் செபிப்போம்.



இலவச விநியோகத்திற்காக

# 13 பொதுநிலையினரின் அழைப்பு



படம் 13.1 - எங்களுக்கு உதவி செய்பவர்கள்

இந்தப் படத்தில் இருப்பவர்கள், மக்களுக்குச் சேவை செய்வதற்காகத் தமது திறமைக்கேற்பத் தொழிலைத் தேர்ந்து கொண்டவர்களாவர். இவர்கள் தமது பணியைத் தமது தொழிலாகச் செய்கிறார்கள். ஆனால் நாம் கிறிஸ்தவர்கள் என்ற ரீதியில் அர்ப்பணிப்புடன் மற்றவர்களின் நன்மைக்காகப் பணியாற்றுவதற்கு அழைப்பைப் பெற்றுள்ளோம். இது, திருமுழுக்கின் வழியாக நாம் பெற்ற அழைப்பாகும்.

திருமுழுக்கின்போது நாம் கிறிஸ்மா எண்ணெயினால் அரச, குருத்துவ, இறைவாக்கினராக அருட்பொழிவு செய்யப்படுகின்றோம். அந்த அருட்பொழிவினால் நாம்,

1. அரச பணி
2. குருத்துவப் பணி
3. இறைவாக்கினர் பணி

ஆகிய மூவிதப் பணியாற்ற அழைக்கப்படுகின்றோம். ஆகவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் திருமுழுக்குப் பெற்றதன் வழியாகக் கிறிஸ்துவின் மீட்பளிக்கும் அன்பைக் கிறிஸ்தவ ஒன்றியத்திற்குக் கொண்டு செல்லும் பொதுக் குருத்துவ அழைப்பைப் பெற்றவராவர்.

ஆகவே பொதுக் குருத்துவ அழைப்பைப் பெற்றுள்ளவர்கள் கிறிஸ்துவின் அரச, குருத்துவ, இறைவாக்குப் பணியில் பங்குதாரராகின்றனர். ஆயர்கள், அருட்பணியாளர்கள், திருத்தொண்டர், துறவறத்தோர் தவிர திருமுழுக்குப் பெற்றுள்ள மற்ற அனைவரும் பொதுநிலையினராவர். பொது நிலையினர் தமது அன்றாட பணிகளின் வழியாக இறையாட்சியை இவ்வுலகில் பரப்புவதற்கு உழைக்கின்றனர். குருத்துவம் என்னும் அருளடையாளத்தைப் பெற்றவர்கள் பணிக்குருத்துவம் பெற்றவர்களாவர்.

ஏழாம் தர மாணவர்கள் என்ற ரீதியில் பொதுக் குருத்துவத்துவம் என்றும் அழைப்பின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சில பணிகள் கீழே காட்டப்படுகின்றன.

| அரசர் | குருத்துவ | இறைவாக்கு |
|---|---|---|
| • இறைவார்த்தைக்குச் சான்றுபகர்தல்<br>• உண்மையை வெளிப் படுத்தல்<br>• தினமும் திருவிவிலி யத்தை வாசித்தல்<br>• இறைவார்த்தைக்கு மதிப்பளித்தல்.<br>• சமூகத்தில் நீதி, நியா யங்களுக்கு சாட்சிய ளித்தல், நீதியோடு வாழ்தல் | • மற்றவர்களுக்காக செபித்தல்.<br>• பீடப் பணியாளராக பணியாற்றுதல்.<br>• திருவழிபாட்டுச் சடங் குகளில் பக்தியாய் பங்கு கொள்ளுதல்.<br>• திருவழிபாட்டை கருத் துள்ளதாக்குவதில் அருட்தந்தைக்குத் துணை புரிதல்.<br>• பாடகர் குழாமில் செயற்பாட்டுடன் கூடிய அங்கத்தவராதல். | • பக்தி சபைகளில், பல் வேறு பணிகளை அதிகார உரிமையுடன் பொறுப் பேற்றுப் பணியாற்றுதல்<br>• பாடசாலைகளிலும் தலைமைத்துவத்தை ஏற்றுப் பணியாற்றுதல்.<br>• மறைப் பாடசாலை பணி களில் துணைபுரிதல்<br>• கைவிடப்பட்டவர் களின் நலன்கருதி சிரமதான பணிகளை ஒழுங்கு செய்பவர்க ளுக்கு தானாக முன் வந்து உதவுதல். |

## பொதுக் குருத்துவத்துக்குரிய சில ஒன்றியங்களும் அவற்றின் பணிகளும்

மற்றவர்களுக்காகச் செபித்தல்

இயேசுவின் அன்பை மற்றவர்களுக்குப் பகிர்ந்து அளித்தல்

முன்மாதிரியாக வாழுதல்

**திருப்பாலத்துவ சபை**

குழு வாழ்விற்குச் சான்று பகர்தல்

ஆலயத்தைத் தூய்மையாக வைத்திருத்தல்

திருப்பலியில் பக்தியுடன் உதவுதல்



**பீடப் பணியாளர்கள் குழு**

தூய்மையான உடையுடன் திருப்பலியில் உதவுதல்

அருளடையாளங்களை வழங்கும்போது அருட்தந்தைக்கு உதவுதல்

ஆ ளு ை ம ை ய க்
கட்டியெழுப்புதல்

இறையாட்சிப்
பணிக்காகத் தமது
திறமைகளை
வளர்த்துக்
கொள்ளுதல்

சிரமதானப் பணிகளில்
உதவுதல்

**செயற்பாடுடைய**
**வீர சிறுவர் இயக்கம்**
Lakiri - vi

சமய வேறுபாடின்றி
ஒற்றுமையுடன்
பணியாற்றுதல்

திருவழிபாட்டை
அர்த்தமுள்ளதாக்குவதற்காக
பாடல், இசையில் பங்கு
கொள்ளல்

நன்கு பயிற்சி பெற்று
பாடுதல்



பாடல் குழு

இறைவார்த்தையை
வாசிப்பதில் பங்கு
கொள்ளுதல்

தமது திறமைகள்,
ஆற்றல்களை இறை
மகிமைக்காகப்
பயன்படுத்தல்

இந்தப் பாடலை மனனஞ் செய்யுங்கள்.

*பாலரை என்னிடத்தில் வரவிடுங்களே*
*என்று சொல்லியே எம்மையே*
*மறைபரப்ப மறை உரைக்க பல்திசை செல்வோம்*
*என்று சொல்கிறார் இயேசுவே*

*விசுவாசத்தில் தீபமாகுவோம் நாம்*
*உலகின் இருளினைப் போக்கியே*
*பகிர்ந்து கொள்ளவே பகிர்ந்து வாழவே*
*எம்மை அழைக்கிறார் இயேசுவே*

(வண்ண மலர் இறுவெட்டு பாடல் எண் 09)

**செயற்பாடு**

1. பொதுக் குருத்துவத்தின் பொறுப்புக்களை எழுதி அதனை நிறைவேற்றுவதற்காக நீர் தெரிவு செய்யும் - பங்கில் செயற்படும் ஒன்றியங்களின் பெயர்களை எழுதுக.
2. பொதுக் குருத்துவத்தில் அளிக்கப்படும் பொறுப்புகளை நிறை வேற்றும் ஆறு விதங்களை எழுதுக.
3. பங்கில் செயற்படும் ஒன்றியங்களில் நீர் இணைய விரும்பும் ஒன்றியத்தின் பெயரை எழுதி அதனை விரும்புவதற்கான காரணத்தையும் எழுதுக.



**வாழ்க்கைக்கு...**
பங்கில் உள்ள பாலர், சிறுவர் சபைகளில் இணைந்து பணியாற்றுங்கள்.

# 14 திருமணம்



படம் 14.1. திருமண அருளடையாளத்தை வழங்குதல்

மேலே காணப்படுகின்ற படங்களில் திருமண அருளடையாளம் வழங்கப்படும் முறையினைக் காண்கின்றீர்கள். திருமணம் எனப்படும் அருளடையாளம் ஆலயத்திலேயே வழங்கப்படுகின்றது. திருமணம் மக்கள் பணியின் அருளடையாளமாகும். இது உலகத்தின் தொடக்கத்திலேயே நிறுவப்பட்ட தூய்மையான இணைப்பாகும். இதனை இத்திருவிவிலிய வசனம் விளக்குகின்றது. ஆண்டவராகிய கடவுள் ''மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று; அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்'' என்றார். (தொ.நூ 2 : 18) இது இறைவன் முன்னிலையில், கிறிஸ்தவ மக்களின் முன்னிலையில் வழங்கப்படும் அருளடையாளமாகும். இறைவன் திருமணத்தில் இணையும் தம்பதியினரை ஆசீர்வதிக்கின்றார்.

திருமணம் ஒரு உடன்படிக்கையாகும். அன்பின் இணைப்பே இவ்வுடன் படிக்கையாகும். எனவே தம்பதியர் அன்புடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும். ஓர் உடன்படிக்கைக்கு இருசாரார் இருக்க வேண்டும். திருமணத்தில் ஆணும் பெண்ணுமே இந்த இருசாராருமாவர். உடன் படிக்கைக்குச் சாட்சியாளர்கள் இருப்பார்கள். திருமணத்தில்,

குருவானவர் ⟶ திருச்சபையின் பதவி நிலையில் சாட்சியளிக்கின்றார்.

கூடியிருக்கும் உறவினர் நண்பர்கள் ⟶ சமூகத்தின் சார்பில் சாட்சியளிக் கின்றனர்.

(இத்தோடு பொறுப்புக் கூறக்கூடிய இருவர் கையெழுத்து வைக்கின்றனர்.)



இலவச விநியோகத்திற்காக

## கிறிஸ்தவத் திருமணத்தின் பண்புகள்

1. **ஒருமை**

   ஒரு கணவனுக்கு ஒரு மனைவியும் ஒரு மனைவிக்கு ஒரு கணவனும் அதாவது ஒருவனுக்கு ஒருத்தி மட்டும் என்பது அர்த்தமாகும். திருமணம் முடிக்கும் தம்பதியர் தமது இன்ப துன்பங்களை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்வதோடு, வாழ்நாள் முழுவதும் அன்பில் ஒன்றித்து ஒத்துழைப்புடன் வாழ்வர். இவர்கள் திருமண மெனும் அருளடையாளத்திற்கேற்பத் தமது அந்நியோன்னிய அன்புடனும் அர்ப்பணிப்புடனும் சான்று பகர்வர்.

2. **கட்டவிழாமை**

   திருமணத் தம்பதியர் தமது வாழ்நாள் முழுவதும் அதாவது மரணம் வரையும் ஒன்றாக வாழ்தலே கட்டவிழாமை எனப்படும். இது திருமணத்தின் அழைப்பிற்கும் வாழ்வின் உறுதிப்பாட்டிற்கும் அடிப்படையாவதோடு அதன் அழகையும் எடுத்துக் காட்டுகின்றது. கிறிஸ்தவத் திருமணத்தில் விவாகரத்துக்கு அனுமதி இல்லை. கீழுள்ள திருவிவிலியப் பகுதி இதனை மேலும் உறுதிப்படுத்து கின்றது.

> இனி அவர்கள் இருவர் அல்ல; ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்.
>
> (மத் 19 : 6)

## பெற்றோர் பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகள்



படம் 14.3 - கல்வியைப் பெற்றுக் கொடுத்தல்

- பிள்ளைகளுக்குத் தேவையான அன்பு, பாதுகாப்பு, வழிகாட்டலையும் ஊட்டத்தினையும் பெற்றுக் கொடுத்தல்.
- பிள்ளைகளின் உடல், உள, ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்தல்.
- குறிக்கப்பட்ட வயதில் பிள்ளைகளுக்கு அருளடையாளங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- பிள்ளைகளைக் கத்தோலிக்க நம்பிக்கையில் வளர்த்தல்.
- பிள்ளைகளுக்கு முழுமையான கல்வியைப் பெற்றுக் கொடுத்தல்.
- கத்தோலிக்கத் திருமறையை ஒரு பாடமாகக் கற்பிக்கும் பாடசாலை களில் பிள்ளைகளைச் சேர்த்தல்.
- கத்தோலிக்க சூழலில் பிள்ளைகளுக்கு கல்வியையும் வாழ்வை ஒழுங் கமைக்கவும் ஆவன செய்தல்.
- தமது கடமைகளை நல்ல முறையில் நிறைவேற்றும் பிள்ளைகளாக வளர்த்தல்.
- நற்பிரஜையாக வாழும் பிள்ளையாக உருவாக்குதல்.

### பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்யும் கடமைகள்



- பெற்றோரை மதித்தலும் கீழ்ப்படிதலும்.
- பெற்றோரின் வேலைகளில் உதவி செய்தல்.
- துன்ப துயரங்களில் நோய்களின்போது பெற்றோரைக் கவனித்தல்.
- வயதான பெற்றோரைப் பராமரித்தல்.
- தமது இளைய சகோதரர்களைப் பாதுகாத்தல்.
- நல்ல முறையில் கல்வி கற்றல்.

- எப்பொழுதும் பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்துதல்.
- சகோதர சகோதரிகளோடு ஒற்றுமையாக வாழுதல்.
- பெற்றோருக்காகவும் சகோதர சகோதரிக்காகவும் செபித்தல்.

**திருக்குடும்பத்திலிருந்து ஒரு கிறிஸ்தவக் குடும்பம் பெறக்கூடிய முன் மாதிரிகைகள்.**



படம் 14.4 - திருக்குடும்பம்

1. மரியாவுக்கு மங்களவார்த்தை கூறப்பட்ட சந்தர்ப்பத்தில் '' உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்'' (லூக் 1 : 38) என மரியா கூறியதைப் போன்று, குடும்பத்தில் அனைவரும் இறைவனின் விருப்பத்துக்குப் பணிய வேண்டும்.

2. மரியா இறைவனின் தாயாக இருந்த போதிலும் தனது உறவினரான எலிசபெத்தைச் சந்திக்கச் சென்றது போல நாமும் பிறருக்கு உதவ வேண்டும்.

3. குடும்பத்தின் தலைவராக யோசேப்பு தனது மனைவியையும் பிள்ளையையும் பாதுகாப்பதற்குத் தனது ஓய்வையும் உறக்கத்தையும் கூடப் பாராது, அவர்களைப் பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் சென்ற தந்தையின் அர்ப்பணம் கிறிஸ்தவக் குடும்பங்களில் மிளிர வேண்டும்.

4. திருக்குடும்பம் இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கத் தேவாலயத்துக்குச் சென்றதன் மூலம் சட்டங்களுக்கு மதிப்பளித்து முன்மாதிரிகையாக கிறிஸ்தவ வாழ்வு வாழ்ந்தமையை நாமும் பின்பற்றுவோம்.

5. தேவாலயத்தில் காணாமல் போன இயேசுவைத் தேடியதன் மூலம் தாய்க்கும் தந்தைக்கும் பிள்ளையின்மேல் உள்ள அன்பு வெளிப்படுத்தப்படுகின்றது. பெற்றோர் தம் பிள்ளைகள் மட்டில் அக்கறை கொள்ள வேண்டும்.
6. இயேசு இறைமகனாக இருந்த போதிலும் தாய்க்கும் தந்தைக்கும் கீழ்ப்படிந்ததைப் போன்று நாமும் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.
7. இயேசு வளர்ந்து வலிமை பெற்று, ஞானத்தால் நிறைந்து வளர்ந்ததைப் போன்று இன்று பிள்ளைகள் தமது பெற்றோரின் விருப்பங்களையும் நோக்கங்களையும் நிறைவேற்ற வேண்டுமென்பது தெளிவு. நன்றாகக் கற்று, நல்ல பிள்ளையாக வாழ்வதன் வழியாக சமூகத்தினால் விரும்பக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
8. இயேசு கானாவூர் திருமண வீட்டில் தனது தாய்க்குக் கீழ்ப்படிந்து மதிப்பளித்தது போல நாமும் வாழ வேண்டும்.
9. இயேசுவின் சிலுவையடியில் இறைவனின் அன்னை இருந்ததைப் போன்று குடும்பத்தில் ஒருவர் துன்பத்திற்குள்ளாகும் சந்தர்ப்பத்தில் குடும்பத்தில் உள்ளவர்கள் அவரைக் கைவிடாமல் அவருக்கு ஆறுதலாக இருக்க வேண்டும்.
10. சிலுவை மரத்திலே இயேசு தான் அன்பு செய்த சீடனைத் தனது அன்னையாகிய மரியாவிடம் ஒப்படைத்தார். தாம் இவ்வுலகை விட்டு விடைபெற்ற போதிலும் தனது தாய் தனிமையிலிருக்கக் கூடாது என நினைத்து இயேசு தாய்க்கு உகந்த பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கின்றார். இதனைப் போன்று வயோதிபமடையும் பெற்றோருக்கு பாதுகாப்பினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாமும் திருக்குடும்பத்தை முன்மாதிரிகையாகக் கொண்டு இறைவனின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்து இறைவனின் திட்டத்திற்கேற்ப எமது குடும்பப் பின்னணியில் வாழ வேண்டும்.

## செயற்பாடு

1. திருமணம் தொடர்பான கருத்துக்களைத் திரட்டி சுவரொட்டி ஒன்றுக்குக் கடிதமொன்றை ஆயத்தம் செய்யுங்கள்.
2. திருக்குடும்பத்திலிருந்து ஒரு கிறிஸ்தவ குடும்பம் பெறக்கூடிய முன்மாதிரிகைகள் நான்கு எழுதுக.
3. திருக்குடும்பத்திலிருந்து பெறப்படுகின்ற முன்மாதிரிகையாக வாழக்கூடிய வழிமுறைகள் ஐந்தினை எழுதுக.
4. பெற்றோரின் செயற்பாடுகளில் நீங்கள் உதவக்கூடிய ஐந்து வழிமுறைகளை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

திருக்குடும்பத்தின் பண்புகளை எம்மில் வளர்த்துக் கொள்வோம்.

# 15 பெற்றோருக்கு மதிப்பளிப்போம்



படம் 15.1 பெற்றோரை வணங்குவோம்

தந்தையே இறை அன்பே
என் அன்பு அம்மாவை
உமது அரவணைப்பில் நிதமும் காத்திடுவீர்

பத்து மாதம் என்னை தம் வயிற்றில் வைத்தே
காத்திட்ட அன்பு அம்மா
இரத்தத்தைப் பாலாக்கி அன்பையும் சேர்த்தூட்டி
என்னை போசித்த அம்மா
(தந்தையே இறை அன்பே)

தியாகங்கள் எனக்காகப் பல செய்தே
என்னை காக்கும் என் அப்பா
வியர்வை சிந்தியே சீராட்டி பாராட்டி
வளர்க்கும் என் அன்பு அப்பா
(தந்தையே இறை அன்பே)

எனக்காக தம் வாழ்வை அர்ப்பணிக்கும்
என் அன்புப் பெற்றோர்
அன்பின் மறு உரு தியாகத்தின் திருவுரு
குரு பெரு அரும் பெற்றோர்.
(தந்தையே இறை அன்பே)


இலவச விநியோகத்திற்காக

ஆசிரியர் :- இந்தப் பாடலைப் பாடும்போது, உங்களுக்குள் ஏற்பட்ட உணர்வு என்ன?

கொட்வின் :- எமது பெற்றோருக்காக இறைவனிடம் செபிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகின்றது.

ரெபேக்கா :- எமது பெற்றோர் எம்மை மிகவும் அன்பு செய் கின்றார்கள், பாதுகாத்துக்கொள்கின்றார்கள், எனவே நாமும் எமது பெற்றோரை அன்பு செய்ய வேண்டும், அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்படித் தானே டீச்சர்?

ஆசிரியர் :- சரி பிள்ளைகளே, இறைவனிடமிருந்து எமக்குக் கிடைத்த வாழ்க்கை, நம்பிக்கை ஆகிய இரண்டு பரிசு களும் எமது பெற்றோரின் வழியாகக் கிடைத்தன. எனவே இறைவனுக்கு அடுத்தபடியாக எமது பெற் றோரை அன்பு செய்து மதிப்பளிக்க வேண்டும்.

ரெபேக்கா :- பத்துக் கட்டளைகளில் நான்காவது கட்டளையில் பெற்றோரை மதிக்க வேண்டுமென்று தானே கூறப் படுகிறது?

ஆசிரியர் :- ஆம் ரெபேக்கா பத்துக் கட்டளைகளை இரண்டு பிரதான பிரிவுகளாகப் பிரிக்க முடியும். முதலாவது ஒரே இறைவனை முழுமனதுடன் விசுவசித்தல், இரண்டாவது பிரிவில் அயலவரை அன்பு செய் யும் முறை கூறப்படுகின்றது. இதன்படி இரண் டாவது பகுதியில் முதலாவதாக எமக்குக் கூறுவது பெற்றோரை மதிக்க வேண்டும் என்பதாகும். எனவே இக்கட்டளை மிகவும் முக்கியமானது என இப்போது உங்களுக்கு நன்றாக விளங்கியிருக்கும் அல்லவா?

கொட்வின் :- டீச்சர், ஒரு நாள் எமது குருவானவர் மறையுரையின் போது நான்காம் கட்டளையின்படி பெற்றோரைப்

போன்றே எமது சமயத் தலைவர்கள், ஆசிரியர்கள், முதியோர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோருக்கும் மரியாதை செலுத்த வேண்டும் என்று கூறினார்.

ஆசிரியர் :- நீங்கள் கூறியது சரி கொட்வின், நான்காம் கட்டளையில் நீங்கள் கூறியவர்கள் அனைவரையும் மதித்து, கீழ்ப்படிய வேண்டும் என்று கூறப்படுகின்றது. அப்படியாயின் பிள்ளைகளே இன்று முதல் வீட்டில், பாடசாலையில், ஆலயத்தில், சமுதாயத்தில் பெற்றோருக்கும் பெரியவர்களுக்கும் மதிப்பளித்தலின் மூலம் இறை கட்டளையின்படி வாழ முயற்சி செய்யுங்கள்.

மேலே உள்ள உரையாடலின் மூலம் ''பெற்றோரை மதித்தல்'' என்னும் கட்டளை தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. எனினும் இன்று சமுதாயத்தில் இக்கட்டளையை நிறைவேற்றாத பல செயல்களைக் காணக்கூடியதாய் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில், அதைப் பற்றி விளக்கமளித்து இறைபிள்ளைகளாக வாழ, வழிகாட்ட வேண்டும். நான்காம் கட்டளைப்படி வாழ நீர் ஆற்ற வேண்டிய கடமைகள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அவற்றை உமது வாழ்வில் கடைப்பிடித்து வாழ முயற்சி செய்க.

| | |
|---|---|
| பெற்றோர் மட்டில் உள்ள கடமைகள் | ⋆ அவர்களை மதித்தல், கீழ்ப்படிதல்<br>⋆ வீட்டு வேலைகளின்போது உதவுதல்<br>⋆ வீட்டில் காணப்படும் குறைபாடு, பிரச்சினையை விளங்கிச் செயல்படுதல்.<br>⋆ பெற்றோரின் சுகயீனம் மற்றும் பிரச்சினைகளின்போது அவர்களுக்கு உதவுதல்.<br>⋆ பெற்றோரை அவர்களது வயோதிப காலத்தின்போது, மனவேதனை அடைய விடாமல் நன்கு கவனித்தல்.<br>⋆ பெற்றோருக்காகத் தினமும் செபித்தல். |

| | |
|---|---|
| அருட்பணியாளர், அருட் சகோதர, சகோதரிகள் மட்டில் எமது கடமைகள். | ★ அருட்பணியாளர், அருட்சகோதர, சகோதரிகளுக்கு மதிப்பளித்தல், கீழ்ப்படிதல்.<br>★ பங்குத் தந்தைக்குப் பங்கின் பணிகளில் உதவுதல்.<br>★ பொதுநிலையினரின் அப்போஸ்தலப் பணியில் இணைந்துப் பணிபுரிதல்.<br>★ திருவழிபாடுகளில் மறைக்கல்வி பணிகளில் உதவுதல். |
| பாடசாலை மட்டில் உள்ள கடமைகள் | ★ அதிபர், ஆசிரிய - ஆசிரியைகள், மாணவத் தலைவர் - தலைவி ஆகியோருக்கு மதிப்பளித்தல், கீழ்ப்படிதல்.<br>★ பாடசாலையில் தமது கடமை, பொறுப்புக்களை இயன்றளவு நிறைவேற்றல்.<br>★ பாடசாலை சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்தல்.<br>★ இலவசப் பாடநூல், நூல் நிலையம், புத்தகங்கள் மற்றும் வேறு பொருள்களைப் பாதுகாத்தல். |
| நாட்டின் மட்டில் உள்ள கடமைகள் | ★ நாட்டுத் தலைவர்களுக்கு மரியாதை செலுத்துதல், மதிப்பளித்தல்.<br>★ நாட்டு மக்களுக்காகவும் தலைவர்களுக்காகவும் செபித்தல்.<br>★ அரசாங்க, பொது உடமைகளைப் பாதுகாத்தல்.<br>★ இயற்கை வளங்களை வீண்விரயம் செய்யாமல் பயன்படுத்தல்.<br>★ நாட்டின் சட்டத்திட்டங்களைக் கடைப்பிடித்தல்.<br>★ நாட்டின் அபிவிருத்திகளில் ஆற்றலையும் திறமையையும் பயன்படுத்தல்.<br>★ நாட்டின் அமைதிக்காக அர்ப்பணித்தல். |

**நான்காம் கட்டளையின்படி வாழ**
**எனது உறுதிமொழி**

நான் எனது பெற்றோரையும் குருக்கள் துறவியரையும் ஆசிரிய - ஆசிரியைகளையும் நாட்டுத் தலைவர்கள் மற்றும் முதியோரையும் அன்பு செய்வேன்; கீழ்ப்படிவேன், மரியாதை செலுத்துவேன். இவர்கள் அனைவர் சார்பாகவும் நான், எனது பங்கு, எனது பாடசாலை, எனது தாய் நாடு மட்டில் எனது கடமைகளைச் சிறு வயது முதல் தவறாமல் நிறைவேற்றுவேன் என உறுதியளிக்கின்றேன்.

**செயற்பாடு**

1. நான்காம் கட்டளையைக் கடைப்பிடித்து வாழப் பின்பற்றக் கூடிய வழிகள் நான்கு தருக.
2. ''பெற்றோருக்கு மதிப்பளிப்போம்'' என்ற தலைப்பில், உமது வகுப்பில் சுவரொட்டி ஒன்றைத் தயாரிக்குக.



**வாழ்க்கைக்கு...**

- முதியோருடன் கதைப்போம், அவர்களுக்குச் செவிமடுப்போம்.
- தினமும் வீட்டிலிருந்து வெளியேசெல்வதற்கு முன் பெற்றோரை வணங்கிச் செல்வோம்.


இலவச விநியோகத்திற்காக

# 16 பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக

கிரான் தனது கல்விச் செயற்பாடுகளை இடைநடுவே நிறுத்திக் கொண்ட இருபது வயது இளைஞன். தனது பாடசாலை நாட்களில் பல்வேறுபட்ட துர்நடத்தைகளுக்கு அடிமையாகி இருந்தமையால் பணத் தேவை அவனுக்கு அதிகமாக ஏற்பட்டது. அதற்காக அவன் எதையுமே செய்யத் தயாராக இருந்தான்.

சிறுநீரக நோயாளர்கள் மற்றும் பலதரப்பட்ட நோய்களால் துன்புறு வோரை தூர இடங்களுக்கு வாகனங்களில் ஏற்றிச் சென்று அவர்களைக் காட்டி பணம் சம்பாதித்தான். சில நாட்களில் நோயாளர்கள் இல்லாத போதும் அவர்களின் வைத்தியப் பரிசோதனை அட்டைகளைக் நாட்கூலிக்கு எடுத்து பணம் தேட கிராமங்களுக்கு எடுத்துச் சென்றான். சில காலமாக இவ்வாறு பொய் சொல்லி, ஏமாற்றி, பணம் பறித்து வாழ்க்கையை நடாத்தி வந்தான். கிரானின் இந்தக் கபடச் செயலால் ஒரு நாள் பொலிசாரிடம் மாட்டிக் கொண்டான். மற்றவர்களை ஏமாற்றுவதில் கில்லாடியாக இருந்த கிரானால் பொலிசாரை ஏமாற்ற முடியவில்லை. (2014.12.21 லங்காதீப எனும் சிங்களப் பத்திரிகையில் இருந்து எடுக்கப் பட்ட உண்மைச் சம்பவம்.)

''வாய்மையே வெல்லும், உண்மையே உயர்வடையும், உயிர் போனாலும் உண்மை பேச வேண்டும்'' போன்ற கூற்றுக்கள் உண்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. அது மட்டுமல்ல உண்மையாக வாழ்பவர்களை சமூகம் மதிக்கின்றது. ஏமாற்றி வாழ்பவர்களை சமூகம் வெறுக்கின்றது. பத்துக் கட்டளைகளில் எட்டாம் கட்டளை உண்மை பேசுவதையும் உண்மையாக வாழ்வதையும் பற்றிக் கற்பிக்கின்றது. அத்து டன் திருமுழுக்கு அழைப்பின் மூலம், இறைபிள்ளைகளாக ''உண்மை'' இறைவனைப் பின்பற்றவும் உண்மைக்கு மதிப்பளித்து வாழவும் அழைக்கப்படுகின்றோம்.

திருவிவிலியத்திற்கேற்ப பொய் சொல்லுதல் மிகப் பெரும் பாவமாகும். ஆகவேதான் திருச்சபைக்குப் பொய் சான்று கூறிய அனனியா மற்றும் சப்பிரா ஆகியோர் உடனடியாக மரணித்தனர். (தி. பணி 5: 1-11) எனவே எட்டாம் கட்டளை பொய் பேசுவதை பாவம் என்கின்றது.

பிறருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லாதே
(வி. பயணம் 20:16)

பிறருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லாதே
(இ.சட்டம் 5:20)

இதனூடாக அயலவருக்கு எதிராகப் பொய்ச்சான்று உரைக்கக் கூடாது என்பது கூறப்படுகின்றது. அத்தோடு இறைவனுக்கு நாம் கொடுத்த உறுதி மொழிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

இயேசு கிறிஸ்துவின் கற்பித்தலின்படி பொய் பேசுதல் மனிதன் வீணாய்ப் போவதற்குக் காரணமாக அமைகின்றது.

இயேசு மக்கள் கூட்டத்தைத் தம்மிடம் வரவழைத்து அவர்களை நோக்கி, 'நான் சொல்வதைக் கேட்டுப் புரிந்து கொள்ளுங்கள். வாய்க்குள் செல்வது மனிதரைத் தீட்டுப்படுத்தாது; மாறாக வாயிலிருந்து வெளிவருவதே மனிதரைத் தீட்டுப்படுத்தும்' என்றார்.... ஏனெனில் கொலை, விபசாரம், பரத்தைமை, களவு, பொய்ச் சான்று, பழிப்புரை ஆகியவற்றை செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் உள்ளத்திலிருந்து வெளிவருகின்றன. இவையே மனிதரைத் தீட்டுப்படுத்துகின்றன.
(மத் 15: 10-20)

மேற்கூறப்பட்ட திருவிவிலியப் பகுதி பொய்ச்சான்று கூறத் தூண்டும் எண்ணங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. பொய்ச் சான்று கூறத் தூண்டுவது ''சாத்தான்'' என்று கூறப்படுகின்ற தீய சக்தி என்பது கீழ்க் காணப்படும் பகுதியால் தெளிவாகின்றது.

சாத்தானே உங்களுக்குத் தந்தை. உங்கள் தந்தையின் ஆசைப்படி நடப்பதே உங்கள் விருப்பம். தொடக்க முதல் அவன் ஒரு கொலையாளி. அவனிடம் உண்மை இல்லாததால் அவன் உண்மையை சார்ந்து நிற்கவில்லை. அவன் பொய் பேசும்போதும் அது அவனுக்கு இயல்பாக இருக்கின்றது. ஏனெனில் அவன் பொய்யன். பொய்மையின் பிறப்பிடம்.

(யோவா 8 : 44)

மேலும் புனித பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் பொய் பேசுவதை விட்டுவிட்டு உண்மை பேச வேண்டும் என்பதனைக் குறிப்பிடுகின்றார்.

பொய்யை விலக்கி ஒருவரோடு ஒருவர் உண்மை பேசுங்கள். ஏனெனில் நாம் யாவரும் ஒருடலில் உறுப்புகளாய் இருக்கிறோம்.

(எபே 4:25)

கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக் கல்விக்கு ஏற்ப, அயலவர்களுடனான எமது உறவில், உண்மையைத் திரிபுபடுத்துவது எட்டாவது கட்டளைக்கு எதிரான பாவம் என்று குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் முழு முதலும், உண்மையுமான இறைவனுக்கு சாட்சியாக வாழச் சொல்லிலும் செயலிலும் உண்மை இருக்க வேண்டும். அது மனசாட்சியின்படி நேர்மையாக வாழ உதவும்.

ஒவ்வொருவரும் சொல்லிலும் செயலிலும் நேர்மையோடும் உண்மையோடும் வாழ அழைக்கப்படுகின்றனர். உண்மையைத் தேடவும், அதைக் கடைப்பிடிக்கவும் அது வலியுறுத்துவதற்கேற்ப வாழ்வை நெறிப்படுத்தவும் கடமைப்பட்டிருக்கின்றனர். கடவுளின் முழு உண்மையும் இயேசு கிறிஸ்துவினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவரே ''உண்மை''. அவரைப் பின்பற்றுபவர் உண்மையின் ஆவியானவரில் வாழ்ந்து இரட்டை வேடம், பாசாங்கு, வெளிவேடம் ஆகியவற்றில் இருந்து தம்மைக் காத்து கொள்கின்றார்.

(க.தி.ம 2464)

மனச்சான்று இறைவனின் குரலாகும். எப்போதும் அதற்கு செவிமடுத்து வாழ்வோம்

உண்மை நிறைந்த ஓர் சமூகத்தைக் கட்டியெழுப்ப எம்மால் பலவற்றை செய்ய முடியும்.

என்னால் செய்யக் கூடியவை

- எப்போதும் உண்மை பேசுவது
- உண்மையுள்ளவனாக வாழ்தல்
- பொய்யான தகவல்களை வெளியிடாமல் இருப்பது
- நான் அறிந்திராத விடயங்கள் மற்றும் நபர்களைப் பற்றிப் பேசாமல் இருப்பது

## செயற்பாடு

குடும்பம், பாடசாலை, பங்கு மற்றும் சமூகத்தை உண்மைக்கு மதிப்பளிக்கும் சமூகமாக கட்டியெழுப்ப உம்மால் செய்யக்கூடிய வற்றை பெற்றோருடன் கலந்தாலோசித்து பின்வருவனவற்றை நிரப்புக.

| வீட்டில் செய்யக் கூடியவை | பாடசாலையில் செய்யக் கூடியவை | பங்கில் செய்யக் கூடியவை | சமூகத்தில் செய்யக் கூடியவை |
|---|---|---|---|
| 1. ................. | 1. ............... | 1. .............. | 1. ................ |
| 2. ................ | 2. .............. | 2. .............. | 2. ................ |
| 3. ............... | 3. .............. | 3. .............. | 3. ................ |
| 4. .............. | 4. .............. | 4. .............. | 4. ............... |
| 5. .............. | 5. ............. | 5. .............. | 5. ............... |



**வாழ்க்கைக்கு...**

எப்போதும் உண்மை பேசுவோம்.

அதற்கேற்ப வாழ்வோம்.

# 17 களவு செய்யாதிருப்பாயாக



மகனே மகளே நீங்கள் அதிகமாக அன்போடும் ஆசையோடும் பாதுகாத்த ஒரு பொருள் தொலைந்து விட்டால், உங்களுக்கு ஒரு சிறிய கவலை தோன்றுமல்லவா? சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் மற்றவர்களின் பொருள்களை களவெடுப்பின், அவர்களுக்கும் அதே கவலை ஏற்படுமல்லவா? ஆகையால் இறைவனுடைய பிள்ளைகளான நாமும் சிறு வயதிலிருந்தே ஏழாவது கட்டளையைப் பாதுகாக்கப் பழகிகொள்ள வேண்டும். ஏழாவது கட்டளையானது ''களவு செய்யாதிருப்பாயாக'' என்பதாகும். பிறருடைய சொத்துக்களை அபகரிப்பதை, வீண்விரயம் செய்வதை, இக்கட்டளை தடை செய்கின்றது. எனவே விளையாட்டாகவோ, பொழுது போக்காகவோ, கேலிக்காகவோ மற்றவர்களுடைய பொருள்களைக் களவெடுக்கக் கூடாதென்பதை மனதிற் கொள்ள வேண்டும்.

அன்றாட வாழ்க்கையில் எமக்குப் பலவிதமான பொருளாதார நெருக்கடிகள் வரக்கூடும். ஆனாலும் அவ்வாறான சந்தர்ப்பங்களில், நாங்கள் பிறருடைய சொத்துக்களைக் களவெடுக்கக் கூடாது. மனதைக் கட்டுப்படுத்தி, மன உறுதியுடன் இறைவனுடன் ஒன்றிப்போம். நீதி என்னும் நற்குணத்தினை வளர்த்துக் கொள்வதற்கும், பிறருடைய உடமைகளைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய சொத்துக்களைக் கொடுத்து விடவும் நாம் பழகிக் கொள்வோம். அப்பொழுது எம்மால் ஏழாவது கட்டளையை இலகுவாகக் கடைப்பிடிக்க முடியும்.

அவ்வாறே, பிறரிடம் நாம் பெற்றுக் கொண்டதை மிக விரைவில் மீண்டும் அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். பிறர் பொருளைக் கண்டெடுப்பின் அதனை எடுத்து அதிகாரமுள்ளவரிடம் (உதாரணம் : அதிபர், ஆசிரியர்) அல்லது உரியவரிடம் திருப்பிக் கொடுத்தல் வேண்டும். இயேசு கிறிஸ்து சக்கேயுவைப் போற்றியதற்குக் காரணம், அவர்



இலவச விநியோகத்திற்காக

களவை விட்டு, நல்ல நபராக மாறுவதற்கு இயேசுவிற்குக் கொடுத்த உறுதிமொழியாகும். ''நான் யாரிடமாவது அநீதியாக எதையாவது வாங்கியிருந்தால், நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுக்கின்றேன்''. (லூக் 19:8) அவர் செய்த தவறுகளுக்குச், சுய விருப்பத்தோடு நஷ்ட ஈட்டை வழங்கினார். எனவே நாமும் செய்த தவறை உணர்ந்து, திருந்தி வாழும்போது, இறைபிள்ளையாய் மாறலாம். அப்போது நாம் நஷ்ட ஈட்டை செலுத்தியவர்களாவோம்.

| | | |
|---|---|---|
| எனக்குரிய எல்லாவற்றையும் அன்பு செய்வேன், பாதுகாப்பேன். | அதேபோன்று → | பிறர் உடைமைகளை மதிப்பேன், பாதுகாப்பேன். |

நாம் சொத்துக்களை, உடைமைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய முறைகள்:


- ⋆ நேர்மையான வழியில் உழைத்தல்
- ⋆ அர்ப்பணத்தோடு கடினமாக உழைத்தல்
- ⋆ விலை கொடுத்து வாங்குதல்
- ⋆ பண்டமாற்றுச் செய்தல்
- ⋆ நன்கொடை
- ⋆ வாரிசுச் சொத்து

இவ்வாறு நேர்மையான, நீதியான வழியில் இன்றி வேறு வழிகளில் சொத்துக்களையும் உடைமைகளையும் சேர்த்தல் பெரும் பிழையாகும். இறை பிள்ளை என்பதை மறுக்கும் செயலாகும்.

**இக்கட்டளையால் விலக்கப்பட்டவை :-**

- ⋆ களவெடுத்தல்
- ⋆ பலாத்காரமாகப் பெறுதல்.
- ⋆ அநீதியான முறையில் பெறுதல்.
- ⋆ பிறர் சொத்துக்களை அழித்தல்

இன்று சமுதாயத்தில், கீழ்வரும் முறைகளில் களவு நடைபெறுகின்றது.




சொத்துக்கள் அனைத்திற்கும் உரிமையாளர் இறைவனாவார்.

இதன்படி ஏழாவது கட்டளையில் கூறப்படுவது இறைவனுடைய படைப்புகளைப் பாதுகாத்தல் வேண்டும் என்பதாகும். இறைவனுடைய பிள்ளைகளாவதற்கு இறை விருப்பத்தை ஏற்றுக் கொண்டு, தமக்குரிய சொத்துக்களை, உடைமைகளை முறையாகக் கையாள வேண்டும். வஞ்ச கச் செயல்களால் சொத்துக்களைச் சேமிக்காமல், பிறருடைய சொத்துக் களை வீணாக்காமல் செயல்பட வேண்டும்.

சிறுவரான உங்களுக்குள்ள பொறுப்புகள் இப்பொழுது நினைவிற்கு வருகின்றனவா?

## செயற்பாடு

1. நீதியான முறையில் சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் நான்கு வழிகள் தருக.
2. ஏழாம் கட்டளையால் விலக்கப்படும் செயல்கள் நான்கு தருக.
3. ஏழாம் கட்டளையைக் கடைப்பிடிக்க என்னால் செய்யக் கூடியவை என்ற தலைப்பில் 50 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

நாங்கள் எங்களுடைய வளங்களைப் பாதுகாக்க முயற்சிப்பது போல், பிறருடைய வளங்களைப் பாதுகாக்கவும் முயற்சி செய்வோம்.

# 18 பிறர் உடைமையை விரும்பாதிருப்பாயாக

மனிதனுள் இயற்கையாகவே மனதைக் கவரக்கூடியவற்றின்மீது ஆசை, விருப்பம் மற்றும் ஈர்ப்பு என்ற விடயங்கள் உள்ளன.

**உதாரணம்** :- சுவையான உணவுகள் மீதான விருப்பம்.
அழகான உடைகள் மீதான ஆசை.
பெரிய, அழகான மாளிகை வீடுகளில் வசிப்பதற்கான ஆசை.
ஆடம்பர வாகனங்களைத் தனதாக்கிக் கொள்வதற்கான ஆசை.

இவ்வகையான ஆசை, விருப்பம், ஈர்ப்புக் காரணமாக மனிதன் தனக்கென்று இவைகளை உரிமைப்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றான். இவ்வாறான ஆசை, விருப்பம் மற்றும் ஈர்ப்பு என்பன பிறர் உடைமைகளின் மீது ஏற்படும்போது, அவன் அந்த உடைமையைத் தனதாக்கிக் கொள்ள முற்படுகின்றான். அவ்வேளையில் அவன் உள்ளத்தில் பேராசை ஏற்படுகின்றது. ஆகவே இந்தப் பேராசை பத்தாம் கட்டளைக்கு எதிரான பாவமாகின்றது. மேலும் பேராசை, களவு செய்யத் தூண்டுமானால் அது ஏழாம் கட்டளையை மீறும் செயலாக மாறுகின்றது.

ஆகவே ஏழாவது மற்றும் பத்தாவது கட்டளைக்கு இடையே நெருங்கிய தொடர்புண்டு. ஏழாவது கட்டளையில் மனிதன் மேற்கொள்ளும் செயல்கள் (களவு) தடைசெய்யப்படுவதுடன், பத்தாவது கட்டளையில் அவ்வாறான தீய செயல்களைச் செய்யத்தூண்டும் பேராசைக்குக் கீழ்ப்படிதல் பாவச் செயலென்று கற்பிக்கப்படுகின்றது.

அமெரிக்க ஆதிவாசிகளான செவ்விந்தியரிடமிருந்து நிலங்களை அபகரிக்க பேராசை கொண்ட அமெரிக்க ஆட்சியாளர்களுக்கு சியடெல் அளித்த பதிலில் ''பேராசையை ஏற்படுத்திக் கொள்வதால் பத்தாவது கட்டளையும், அடுத்து ஏழாவது கட்டளையும் மீறப்படும் விதம் சுட்டிக் காட்டப்படுகின்றது.

வொஷிங்டன் நகராதிபதியே,
எமது நாட்டை விலைகொடுத்து வாங்குவதற்கு, நீங்கள் விருப்பத்துடன் இருப்பதாக அறிந்து கொண்டோம். தங்களது நட்புறவையும் எங்களுக்கு அறியப்படுத்தியிருக்கின்றீர்கள். எம் நாட்டை விற்க மறுத்தால் வெள்ளையர்கள் துப்பாக்கி ஏந்தி வந்து எங்கள் நாட்டைப் பிடித்துக் கொள்வார்கள் என்று நினைக்கின்றோம்.

சியடெல்

அதனால் பிறர் உடைமையில் பேராசை கொள்ளாமல் இருப்பதைக் கொண்டு திருப்தி கொள்ள இக்கட்டளை கற்பிக்கின்றது. இதைப்பற்றி பெரிய குறிப்பிடத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

பிறர் உடைமையை தவறான வழியில் பெற்றுக் கொள் வதையும், அவற்றை சொந்தமாக்கிக் கொள்வதையும், ஆசை கொள்வதையும் பிறர் நலனில் பொறாமை கொள்வதையும் அது தடுக்கின்றது.

(பெரிய குறிப்பிடம் 360)

தம்மிடம் உள்ளவற்றில் திருப்தி கொண்டு வாழப் பத்தாம் கட்டளை கற்பிக்கின்றது. பிறர் உடைமையைத் தவறான வழியில் பெற்றுக்கொள்ள அவற்றை சொந்தமாக்கிக்கொள்ள ஆசைப்படுவதையும் பிறர் முன்னேற்றத்தில் பொறாமை கொள்வதையும் அது தடுக்கின்றது. சிறிய குடிசையில் வாழும் ஒருவன் தனது குடிசைக்கு முன்னால் இருக்கும் அலங்கார மாளிகையைப் பார்த்து, அதில் பொறாமை கொள்ளாமல், அவர்களின் முன்னேற்றத்தில் மகிழ்ச்சி அடைவானாகில் அவன் உண்மையிலேயே மேலானவன்.

எனினும் பிறர் சொத்துக்களை நீதியான முறையில் பெற்றுக்கொள்வது இக்கட்டளைக்கு எதிரான பாவமல்ல. (க.தி.ம 2537) உதாரணம் :- பணங்கொடுத்து தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று வாங்குவதனைக் குறிப்பிடலாம்.

பாவத்திற்கு மனிதனைத் தூண்டும் முதற் சிந்தனை பேராசையாகும். இச்சிந்தனையைச் செயற்படுத்தும்போது, அது எம்மை இறைவனிட மிருந்தும் எம் அயலவர்களிடமிருந்தும் பிரிக்கின்றது என மீக்கா இறைவாக்கினர் குறிப்பிடுகின்றார்.

*தங்கள் படுக்கைகளின்மேல் சாய்ந்து தீச்செயல் புரியத் திட்ட மிட்டுக் கொடுமை செய்ய முயல்பவர்களுக்கு ஐயோ கேடு! பொழுது புலர்ந்தவுடன் தங்கள் கைவலிமையினால் அவர் கள் அதைச் செய்து முடிக்கின்றார்கள். வயல் வெளிகள்மீது ஆசை கொண்டு, அவற்றைப் பறித்துக் கொள்கின்றார்கள். வீடுகள்மீது இச்சை கொண்டு, அவற்றைக் கைப்பற்றிக் கொள்கின்றார்கள். ஆண்களை ஒடுக்கி அவர்கள் வீட்டையும் உரிமைச் சொத்தையும் பறிமுதல் செய்கின்றார்கள்.*

*மீக் 2 : 1 - 2*

இப்பிரபஞ்சம் இறைவனின் படைப்பாகும். அப்படைப்பின் உரிமையாளர் இறைவனே. படைப்புகளின் அதிபதி இறைவன் என உணர்ந்து அவர் படைப்பை வீண்விரயம் செய்யாமல் வாழ வேண்டுமென்பதை கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் வழிகாட்டுகின்றது.

பொறாமை தலையான பாவங்களில் ஒன்றாகும். இப்பொறாமை பிறர் உடைமையில் கொள்ளும் ஆசை மூலம் உருவாகின்றது. இதன் காரணமாக ஒருவனுள் கவலையும் விரக்தியும் உண்டாகின்றன. ஆகையால் எமக்கு கிடைப்பதில் திருப்தி கொள்வோமானால் இக்கவலையும் விரக்தியும் எமக்கு ஏற்படாது.

மனிதர்களாகிய எமக்கு ஏதாவது கிடைத்திருக்குமேயானால், அது கடவுளிடமிருந்து கிடைத்தது ஆகும். இவ்வுலகில் நிரந்தரமாக எம்மால் வாழ முடியாது. எனவே நாம் வாழும் குறுகிய காலத்தில் இறைவனிடமிருந்து நாம் பெற்றுக் கொண்ட அனைத்திற்கும் நன்றி யுணர்வுடன், என்றும் புகழ்ந்து வாழ இக்கட்டளை எமக்கு வழிகாட்டு கின்றது, எம்மை அழைத்து நிற்கின்றது.

நாம் எவ்வாறு எமது உடமைகளைப் பாதுகாக்கின்றோமோ, அதேபோல் பிறர் உடைமைகளையும் பாதுகாப்பதற்கு, இறைபிள்ளைகளாகிய எமக்கு பொறுப்புக்களை உணர்ந்து செயற்படுவது அவசியமாகும்.

**பத்தாம் கட்டளையின்படி வாழ்வதற்கு :-**

- ★ எமக்குக் கிடைப்பதில் திருப்தி கொள்ளல்.
- ★ பிறர் உடைமைகளை அபகரிக்காதிருத்தல்.
- ★ வியாபாரங்களில் நீதியாக நடத்தல்.
- ★ கிடைக்கும் வருமானத்திற்கேற்ப திருப்தியாக சேவை புரிதல்.
- ★ பிறரிடம் பெற்றுக் கொண்டதை மீண்டும் திருப்பிக் கொடுத்தல்.
- ★ பிறருக்கு சொந்தமானவை கண்டெடுக்கப்படும்போது, அவற்றை உரிமையாளருக்குக் கொடுத்தல்.
- ★ மற்றவர்களின் முன்னேற்றத்தில் பொறாமை கொள்ளாமல் அவர்களை யிட்டு மகிழ்ச்சி அடைதல்.

**செயற்பாடு**

1. ''பிறர் உடைமையை விரும்பாதிருப்பாயாக'' என்ற தலைப்பில் 75 சொற்களுக்கு குறையாமல் ஓர் கட்டுரை வரைக.



**வாழ்க்கைக்கு...**
இருப்பவற்றில் மகிழ்ச்சியடைவோம்.
கிடைப்பதில் திருப்தியடைவோம்.

# 19 செபமாலைப் பக்தி



19.1 செபமாலைப் படம்

திருத்தந்தை 5ஆம் பயஸ் அவர்களுடைய காலத்தில், கத்தோலிக்கர்களுக்கு துருக்கி நாட்டினரால் பல அச்சுறுதத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே திருச் சபையின் பாதுகாப்பிற்காகச் செயற்படும் படியாக திருத்தந்தை ஐரோப்பிய மக்க ளைக் கேட்டுக்கொண்டார். அவர்களும் திருத்தந்தையின் வேண்டுகோளுக் கிணங்க ஓர் இராணுவப் படையை ஏற்படுத்தினார்கள். இருப்பினும் யுத் தத்தில் ஈடுபடுவதற்கான பயிற்சி அவர்களிடம் காணப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட தினத்திலே செபமாலையைப் பக்தியுடன் செபித்துக் கொண்டே போர்க்களம் நுழைந்தார்கள். யுத்தம் நடைபெற்றுக் கொண் டிருக்கும்போது செபமாலையைச் செபிக்கும்படியாக ஐரோப்பிய மக்களை திருத்தந்தை 5ஆம் பயஸ் கேட்டுக்கொண்டார். உரோமையில் ஓர் செபமாலைப் பேரணியும் இடம்பெற்றது.

''லெபன்டோ'' எனுமிடத்தில் வைத்து ஐரோப்பியப் படையினர் துருக்கிய இராணுவத்தை வெற்றி கொண்டனர். இந்த யுத்தத்தில் எமது ஐரோப்பிய இராணுவம் தோற்கடிக்கப்பட்டிருந்தால், துருக்கிய இராணுவம் இத்தாலியைக் கைப்பற்றி உரோமையின் அதிகாரத்தைக் கைப்பற்றி இருக்கும். துருக்கியின் சுல்தான் உரோமையின் பேரரசனாகி இருக்கக் கூடும். கி.பி. 1571 ஆம் ஆண்டு ஐப்பசி 07 ஆம் நாள் பெற்றுக் கொண்ட இந்த வெற்றி செபமாலைப் பக்தியினூடாகவே பெறப்பட்டது என்று நம்பினார்கள்.

இதன் நிமித்தமாக திருத்தந்தை 5ஆம் பயஸ் அவர்கள் ஐப்பசி மாதம் 07 ஆம் திகதியினை ''வெற்றிமாதா திருவிழா'' என்று பெயரிட்டார். பின்னர் 1573 ஆம் ஆண்டு இவ்விழா ''செபமாலை அன்னை விழா'' என திருத்தந்தை 13ஆம் கிரகோரியினால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

மேலும் 1716 ஆம் ஆண்டு முழுத் திருச்சபையும் இவ்விழாவினைக் கொண்டாட வேண்டுமென திருத்தந்தை பதினோராம் கிளமன்ட் பணிப் புரை வழங்கினார்.

இக்கட்டான சூழ்நிலையிலும் பேதகங்களின்போதும் திருச்சபையானது செபமாலையை செபிப்பதன் பயனாக எதிர் கொண்ட பல சவால்களை வெற்றி கொண்டது. இதனால் செபமாலைப் பக்தியில் வளர்ந்து அதனைச் செபிக்கத் திருச்சபைத் தாய் அனைத்து மக்களையும் அழைக்கின்றாள்.

**செபமாலையின் வரலாறு**

கத்தோலிக்க வழிபாட்டு மரபிலே செபமாலை நீண்ட ஒரு வரலாற்றைக் கொண்ட பக்தி முயற்சியாக விளங்குகிறது.

★ கி.பி. 3 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்த கத்தோலிக்க துறவியர்கள் இப்பக்தி முயற்சியை ஆரம்பித்தார்கள்.

★ கி.பி. 1214 ஆம் ஆண்டளவில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த தூய டொமினிக் (சுவாமிநாதர்) செபமாலைப் பக்தி முயற்சியை அறிமுகப்படுத்தினார். அவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட செபமாலை பக்தியையே நாம் இன்றும் கடைப்பிடிக்கின்றோம்.

செபமாலையில் எமது மீட்பின் மறையுண்மைகளை நாம் தியானிக் கின்றோம். இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, பாடுகள், மரணம், உயிர்ப்பு மற்றும் விண்ணேற்பு இதில் உள்ளடங்குகின்றது. இம்மறையுண்மைகளில் இயேசுவின் இறையாட்சிப் பணி உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. எனவே திருத்தந்தை தூய இரண்டாம் ஜோண் பவுல் ஒளியின் மறையுண்மைகளை அறிமுகப்படுத்தி, இயேசுவின் இறையாட்சிப் பணியினைத் தியானிக்க அழைத்தார். இதனால் இன்று இருபது மறையுண்மைகளைத் தியானிக்கின்றோம்.

| தினம் | தியானிக்கும் நிகழ்வுகள் / இயேசுவின் வாழ்வின் நிகழ்வுகள் |
| --- | --- |
| திங்கள், சனி, திருவருகைக் கால ஞாயிறு கிறிஸ்து பிறப்பு காலத்தில் ஞாயிறு தினங்கள் | **மகிழ்ச்சி நிறை மறையுண்மைகள்**<br>1. கபிரியேல் தூதர் தேவதாய்க்கு மங்கள வார்த்தை சொன்னது.<br>2. தேவமாதா எலிசபெத்தம்மாளைச் சந்தித்தது.<br>3. இயேசு பிறந்தது.<br>4. இயேசுவை ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக் கொடுத்தது.<br>5. காணாமற்போன இயேசுவைக் கண்டடைந்தது. |
| செவ்வாய், வெள்ளி, தவக்கால ஞாயிறு | **துயர் நிறை மறையுண்மைகள்**<br>1. இயேசுவுக்கு பூங்காவனத்தில் இரத்த வியர்வை வியர்த்தது.<br>2. இயேசுவைக் கற்றூணில் கட்டியடித்தது.<br>3. இயேசுவுக்கு முள்முடி சூட்டியது.<br>4. இயேசு சிலுவை சுமந்து சென்றது.<br>5. இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்தது. |
| புதன், உயிர்ப்பு மற்றும் பொதுக்கால ஞாயிறு | **மகிமை நிறை மறையுண்மைகள்**<br>1. இயேசு உயிர்த்தெழுந்தது.<br>2. இயேசு விண்ணுலகிற்கு எழுந்தருளியது.<br>3. பரிசுத்த ஆவியின் வருகை.<br>4. தேவதாயின் விண்ணேற்பு.<br>5. தேவதாய் விண்ணுலக, மண்ணுலக அரசியாக முடி சூட்டப்பட்டது. |
| வியாழக் கிழமை | **ஒளி மறையுண்மைகள்**<br>1. இயேசு யோர்தான் ஆற்றில் திருமுழுக்குப் பெற்றது.<br>2. இயேசு கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரை இரசமாக்கியது.<br>3. கலிலேயாவில் இயேசு பணியைத் தொடங்கியது.<br>4. இயேசுவின் தோற்றம் மாறியது.<br>5. இயேசு திவ்விய நற்கருணையை ஏற்படுத்தியது. |

வழமையான செபமாலையையும் இறந்தோருக்கான செபமாலையையும் சந்தர்ப்பத்திற்கேற்பப் பயன்படுத்தலாம். செபமாலைக்கென ஒரு ஒழுங் கமைப்பும் சில சிறப்புச் செபங்களும் உள்ளன. இந்த ஒழுங்கு முறையைப் பயன்படுத்தி மறையுண்மைகளைப் பக்தியோடு தினமும் குடும்பமாக செபிப்பது முக்கியமாகும். இது குடும்பத்திற்குச் சிறந்த ஆசீர்வாதமுமாக அமையும். ''அன்னை மரியாவோடு உறவு கொள்ள விரும்புவோருக்கு செபமாலையைத் தவிர வேறு சிறந்த வழி எதுவுமில்லை'' எனத் தூய இரண்டாம் ஜோண் பவுல் திருத்தந்தை கூறுகின்றார். எனவே செபமாலையைக் குடும்பமாகத் தினமும் செபிப்போம்.

**வழமையான செபமாலை (அன்றாடம் செபிக்க)**

- திருச்சிலுவை அடையாளம்
- திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை (விசுவாசப் பிரமாணம்)
- இயேசு கற்பித்த செபம்
- அருள் நிறை மரியே - (3)
  (ஒவ்வொரு அருள் நிறை மரியே செபத்தைச் சொல்ல முன் பின்வரும் செபத்தைச் செபிக்கலாம்.)

1ஆம் **அருள் மரி முன்**
தந்தையாகிய இறைவனுக்கு மகளாயிருக்கின்ற தூய அன்னையே எங்களிடத்தில் இறைநம்பிக்கை என்ற புண்ணியம் வளரும்படி இயேசுவை மன்றாடும். (அருள் நிறை மரியே...)

2ஆம் **அருள் மரி முன்**
மகனான இறைவனின் தாயாய் இருக்கின்ற தூய அன்னையே எங்களிடத்தில் இறை எதிர்நோக்கு என்ற புண்ணியத்தில் வளரும்படி இயேசுவை மன்றாடும். (அருள் நிறை மரியே...)

3ஆம் **அருள் மரி முன்**
தூய ஆவியாகிய இறைவனுக்கு பிரியமுள்ளவராயிருக்கின்ற தூய அன்னையே இறைபக்தி என்ற புண்ணியத்தில் வளரும்படி இயேசுவை மன்றாடும். (அருள் நிறை மரியே...)

- திரித்துவப் புகழ் (தந்தைக்கும் மகனுக்கும்...)
- ஓ என் இயேசுவே (பாத்திமா செபம்)
- மறையுண்மைகளைத் தியானித்தல்
- அருள் நிறை மரியே
- இயேசு கற்பித்த செபம்
- திரித்துவப் புகழ்
- ஓ என் இயேசுவே

ஐந்து காரணிக்கங்களும் இவ்வொழுங்கு முறையிலே கூறப்படும்.

ஐந்து காரணிக்கங்களின் நிறைவில்

- காணிக்கைச் செபம் (அத்தியந்த மகிமையுள்ள)
- கிருபை தயாபரத்துக்குச் செபம்
- மன்றாட்டு மாலை (விரும்பியது)

செபமாலையின் நிறைவில் சொல்லக்கூடிய வேறுபல மன்றாட்டு மாலைகளில் சில வருமாறு :-

- இயேசுவின் திரு இருதய மன்றாட்டு மாலை
- தேவதாயின் மன்றாட்டு மாலை
- புனித அந்தோனியார் மன்றாட்டு மாலை
- புனித செபஸ்தியார் மன்றாட்டு மாலை
- புனித யூதா ததேயு மன்றாட்டு மாலை

**இறந்தோருக்கான செபமாலை :-**

(இறந்த ஆன்மாக்கள் மாதத்திலும் கத்தோலிக்கர் இறக்கின்ற பொழுதும் அவர்களின் நினைவு நாட்களின் போதும் இதனைச் செபிக்கலாம்.)

- விசுவாச அறிக்கை
- இயேசு கற்பித்த செபம்
- அருள்நிறை மரிக்குப் பதிலாக

ஓ நல்ல இயேசுவே

பதில் : உத்தரிக்கின்ற ஆன்மாக்கள் பேரில் இரக்கமாயிரும்.



இலவச விநியோகத்திற்காக

- திரித்துவப் புகழுக்குப் பதிலாக

  மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

பதில் : நித்திய இளைப்பாற்றினை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே

(துயர் நிறை அல்லது மகிமை நிறை மறையுண்மைகளை இச்செபமாலையின்போது தீர்மானிக்கலாம். இச்செபமாலை பிரதேச வாரியாக வேறுபடக்கூடும்.)

- இச்செபமாலையின் முடிவில்

  இச்செபமாலையின் முடிவில் இயேசு, மரி சூசையே எனது ஆன்மாவையும் உடலையும் உம் திருக்கரத்தில் ஒப்புக் கொடுக்கின்றேன். இயேசு மரி சூசையே எனது மரண நேரத்தில் எனக்கு உதவியருளும்.

**செயற்பாடு**

1. தற்போது நாம் பயன்படுத்தும் செபமாலைப் பக்தியை அறிமுகப்படுத்தியவர் யார்?
2. செபமாலையில் பயன்படுத்தும் 4 வித மறை உண்மைகளைத் தருக.
3. சாதாரணமாக செபமாலையில் நாம் பயன்படுத்தும்
   - காணிக்கைச் செபம்
   - கிருபை தயாபரத்துச் செபம்
   - ஓ என் இயேசுவே செபம்

ஆகிய செபங்களை மனனம் செய்து பாட ஆசிரியரிடம் கூறவும்.



**வாழ்க்கைக்கு...**

இறந்தோருக்கான செபமாலையில் பாவிக்கப்படுகின்ற செபங்களை மனனம் செய்வோம்.

## 20 நவநாட்களும் திருவிழாக்களும்

நிர்மலன் :அம்மா... பாற்சோறு நன்றாக மணக்கிறது! இன்று பகல் சாப்பாடு பாற்சோறு தானா?

அம்மா :மகனே! ஏன் மறந்துவிட்டீர்களா? இன்று எமது பங்கு ஆலயத்தின் கொடியேற்றம்? அதுதான் நான் பாற்சோறு சமைத்தேன்.

நிர்மலன் :ஆம் (பக்கத்திலுள்ள சகோதரியை பார்த்தவாறு) அக்கா, இன்று மாலை நிறைய பாற்சோறு சாப்பிடலாம் அல்லவா?

சாந்தி :தம்பிக்கு இனி சாப்பாடு மட்டும் இருந்தால் போதும். அம்மா இம்முறை எங்கள் நவநாளுக்கும் ஆலயத் திருவிழாவுக்கும் உடுத்துவதற்கு எனக்கு இரண்டு புதிய சட்டைகள் வேண்டும்.

அம்மா :பிள்ளைகளே ஆலயத் திருவிழா என்பது உணவுகள் உண்பதும், அலங்கார உடைகள் அணிவதும் அல்ல.

இருவரும் : அப்படியென்றால் அம்மா?

அம்மா : பிள்ளைகளே! இக்காலத்தில் தான் நாம் அதிகம் இறைவனோடு நெருங்க வேண்டும். அதே போன்று பங்கில் உள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து எமது ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதருக்கு நன்றி கூறவும் வேண்டும். நல்ல பிள்ளைகள் போல விரைவாக ஆலயத்துக்குச் செல்ல ஆயத்தமாகுங்கள்.

ஒவ்வொரு வருடத்திலும் எமது ஆலயங்களில் பல்வேறு திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. உதாரணமாக, உயிர்ப்பு விழாவையும் நத்தார் விழாவையும் கூறலாம். இவ்விழாக்களை உலகம் முழுவதும் திருச்சபை ஒரே நாளில் கொண்டாடுகின்றது. இதைத் தவிர ஒவ்வொரு ஆலயத்திற்குமே உரிய விசேட திருவிழா ஒன்றுண்டு. அதாவது அது எமது ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதரின் திருவிழாவாகும். பங்கில்


இலவச விநியோகத்திற்காக

பணியாற்றுகின்ற அருட்பணியாளர்களும் பங்கு மக்களும் ஒன்றாக இணைந்து பெரிய திருவிழாவாக இதனைக் கொண்டாடுவர்.

## ஆலயத் திருவிழா கொண்டாடுவதற்கான காரணங்கள்

- ஆன்மீக வாழ்வில் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும்.
- இறைவார்த்தையினால் வாழ்வை ஊட்டம் பெறச் செய்வதற்காகவும்.
- ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதரின் பரிந்துரையால் பெறப் படும் அனைத்துக் கொடைகளுக்கும் நன்றி கூறுவதற்காகவும்.
- அவர்களின் வாழ்க்கையின் முன்மாதிரிகைகளைத் தியானித்து, வாழ்க்கையைச் சீர்செய்து, பிறருக்கு முன்மாதிரிகையான கிறிஸ்தவர் களாகத் திகழ்வதற்காகவும்.
- தொடர்ந்து பங்கினதும் பங்கு மக்களினதும் நல்வாழ்வுக்காகப் புனிதரின் பரிந்துரையை வேண்டுவதற்காகவும் ஆலயத் திருவிழா கொண்டாடப்படுகின்றது.

## கொடிமரம் ஏற்றுவதன் அர்த்தம்

கொடிமரத்தை ஏற்றிவைப்பதோடு பங்கு ஆலயத் திருவிழா ஆரம் பமாகின்றது. மறைத் தூதுவர்கள் இந்நாட்டில் பணியில் ஈடுபட்டிருந்த காலத்தில் போதிய அளவு அருட்பணியாளர்கள் இல்லா திருந்தனர். பல கோவில்களுக்கு ஒருவரே பொறுப்பாய் இருப்பார். எனவே அடிக்கடி மக்களைச் சந்திக்க வாய்ப்புக் கிடைப்பதில்லை ஆகவே சில மாதங்களுக்கு அல்லது வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே அருட்பணியாளர் ஒருவர் பங்கிற்கு வருகை தருவர். அவ்வாறு வருகை தருகின்ற அருட்பணியாளர்கள் ஓரிரு வாரங்கள் தங்கியிருந்து பங்கு மக்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றுவர். அத்தோடு ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதரின் திருவிழாவை பக்தர்களோடு ஒருங்கிணைந்து கொண்டாடுவர். அங்கு பங்குக்குப் பொறுப்பான அருட்பணியாளர் ஆலயத்திற்கு வருகை தந்திருப்பதையும் மக்கள்



படம் 20.1 - கொடி மரம்

தமது ஆன்மீக ஊட்டத்திற்கான உதவிகளை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியுமென்பதையும் அயலில் உள்ள கிறிஸ்தவ மக்களுக்கு அறிவிப்பதற்காகவே கொடிமரம் ஏற்றப்பட்டது.

**நவநாட்கள்**

கொடிமரம் ஏற்றப்பட்ட பின்னர் நவநாட்கள் நடைபெறும். (Novem) என்னும் இலத்தீன் சொல்லில் இருந்து மருவி வந்த சொல்லே (Novena) நவநாள் எனப்படும். ஒன்பது என்பது இதன் அர்த்தமாகும். ஒன்பது நாட்களில் விசேட வேண்டுதலுக்காக நடைபெறுகின்ற ஆராதனை வழிபாடுகளை நவநாட்கள் எனக் கூறலாம். கொடிமரம் ஏற்றப்பட்ட பின் எட்டு நாட்கள் நவநாள் நடத்தப்பட்டு ஒன்பதாவது நாள் மாலை ஆராதனை (வெஸ்பஸ்) நடத்தப்படும். ஒன்பது நாட்கள் ஆராதனை வழிபாடுகள் முடிவுற்றதும் பத்தாவது நாள் ஆலயத்திருவிழா நடைபெறுவது கத்தோலிக்க மரபாகும். இதன் பின்னணியாக அமைவது தூய ஆவி (பெந்தகோஸ்து)யின் திருவிழாவாகும். அதாவது, இயேசுவின் விண்ணேற்றத்திலிருந்து ஒன்பது நாட்கள் மரியாவும் திருத்தூதர்களும் உட்பட 120 பேர் செபத்தில் ஈடுப்பட்டு தூய ஆவியைப் பெற்றனர். அந்த 120 பேரைப் போன்று நாமும் திருவிழாக் காலத்தில் ஆன்மீக வரங்களைப் பெற்றுக் கொள்வதற்குச் செயற்படுவோம். அதற்காக,

- ஒவ்வொரு நாளும் நவநாட்களில் பங்கு பற்றல் வேண்டும்.
- தினமும் திருப்பலியில் பங்கேற்று நற்கருணை பெற வேண்டும்.
- ஏனைய நாட்களை விட செபத்தில் அதிகமாக ஈடுபட வேண்டும்.
- நல்ல ஒப்புரவு செய்து ஆன்மீகப் புத்துணர்ச்சியைப் பெற வேண்டும்.
- மாலை ஆராதனையிலும் திருவிழாத் திருப்பலியிலும் பங்கு பற்ற வேண்டும்.
- திருவிழா தினத்தில் திருச்சுரூப பவனியில் பக்தியோடும் உற்சாகத் தோடும் பங்குபற்றல் வேண்டும்.
- பங்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதரின் வாழ்வின் முன்மாதிரிகை களைப் பின்பற்றுவதற்கு உறுதி கொள்ள வேண்டும்.

**திருவிழாக் காலங்களில் பங்கு அருட்பணியாளர்கள்**

- பங்கு மக்களின் ஆன்மீக ஊட்டத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயல்களுக்கு முதலிடம் கொடுத்தல்.
- நவநாட்களில் விசேட கருப்பொருளில் இறைவார்த்தையைத் தியானிப்பதற்குத் துணைபுரிதல்.
- பங்கின் பெயர் கொண்டுள்ள புனிதரின் வாழ்வைத் தியானிப்பதற்குப் பங்கு மக்களை ஈடுபடுத்தல்.
- தினமும் திருப்பலியிலும் ஏனைய பக்தி முயற்சிகளிலும் முழுமையாகப் பங்கேற்பதற்கு மக்களை ஊக்குவித்தல்.
- உண்மையான மனம் வருந்துதலினால் ஒப்புரவாதல் அருளடையாளத்தைப் பெறுவதற்கு மக்களைத் தூண்டுதல்.
- மக்களின் தேவைகளை அவதானித்து தான தருமம் ஒழுங்கு செய்தல்

ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கிராமத்திற்கு ஓர் ஆசீர்வாதமாகும். அவ்வாறே பெற்றுக் கொண்ட அனைத்து வரப்பிரசாதங்களுக்கும் நன்றி கூறுவதற்குக் கிடைத்த மாபெரும் சந்தர்ப்பமுமாகும். அவ்வாறே திருவிழாவோடு தொடர்புடைய வெளியரங்க செயற்பாடுகளிலிருந்து விலகி ஆன்மீகப் புத்துணர்ச்சியைப் பெற்று நம்மிடம் உள்ளதை பிறருடன் பகிர்ந்து இறைவன் விரும்பும்படியாக திருவிழாவை நடாத்துவதற்கு, நாம் அனைவரும் முயற்சித்தல் வேண்டும்.

**செயற்பாடு**

1. இலங்கையில் முன்னைய காலத்தில் கொடிமரம் ஏற்றியதன் பின்னணியை எழுதுக.
2. ''நவநாட்கள்'' என்பதன் அர்த்தத்தை எழுதுக.
3. ஆலயத் திருவிழாவை அர்த்தமுள்ள முறையில் கொண்டாடுவதற்கு நீங்கள் செய்யக்கூடிய மூன்று செயல்களை எழுதுக.

4. உங்கள் ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதர் பற்றிய கீழ்க் காணப்படும் கருத்துக்களை கவனத்தில் சுவர்ப் பத்திரிகை ஒன்றுக்கு கடிதம் ஒன்று எழுதுக.

- ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதரின் பெயர்
- அத்திருவிழாவைக் கத்தோலிக்க திருச்சபை கொண்டாடும் நாள்
- அத்திருவிழாவை உங்கள் பங்கில் கொண்டாடும் நாள்.
- அவருடைய வாழ்க்கை பற்றிய தகவல்கள்
- அவரிடமிருந்து நீங்கள் பெற்றுக் கொள்ளும் முன்மாதிரி கைகள்.

இக்கடிதத்திற்கு பொருத்தமான தலைப்பொன்றைத் தெரிவு செய்து 75 சொற்களில் எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்று ஆலய வருடாந்த திருவிழாவைக் கொண்டாடுவோம்.



இலவச விநியோகத்திற்காக

# 21 மாலை ஆராதனையும் நற்கருணை ஆசீரும்

**என் ஆன்மா இறைவனையே**

என் ஆன்மா இறைவனையே
ஏற்றிப் போற்றியே மகிழ்கின்றது
என் மீட்பராம் கடவுளை நினைக்கின்றது

ஏனெனில் வல்லமை மிகுந்தவரே
எனக்கரும் செயல் பல புரிந்துள்ளார்
அவர் தம் பெயரும் புனிதமாகும்
அவருக்கு அஞ்சுவோருக்கு இரக்கமாகும்

தாழ்நிலை இருந்த தம் அடியவரை
தயையுடன் கண்கள் நோக்கினார்
இந்நாள் முதலாம் தலைமுறைகள்
என்னைப் பேறுடையாள் என்றிடுமே

பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார்
செல்வரை வெறுங்கையராய் அனுப்புகிறார்
ஆபிரகாம் குலத்தை இரக்கத்தோடு
என்றென்றும் நினைவில் கொண்டுள்ளார்

(இறைவனைப் புகழ்வோம் 135 ஆம் பக்கம்)

புனித லூக்கா எழுதிய நற்செய்தியில் 1:46-55 என்பதனை அடிப்படையாகக் கொண்டு இப்பாடல் இயற்றப்பட்டுள்ளது. இது மரியாவின் (Magnificat) பாடல் என அழைக்கப்படுகின்றது. மரியாவின் பாடலை மாலைத் திருப்புகழ் ஆராதனையின்போது தியானிக்கின்றோம்.

## திருப்புகழ் மாலை



படம் 21.1 - மாலை ஆராதனை

''திருப்புகழ் மாலை'' என்பது ஒரு நாளில் குறிக்கப்பட்ட கால வேளையில் விசேடமாகத் திருப்பாடலை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்ற புகழ்ச்சிக்குரிய செப வழிபாடாகும். ஒரு நாளில் குறிக்கப்பட்ட வேளையில் இது இடம்பெறுவதால் ''திருப்புகழ் மாலை'' ("LITURGY OF THE HOURS") எனப் பெயர் பெற்றுள்ளது.

''திருப்புகழ் மாலை'' எனப்படுவது எமது செப மரபுகளில் மிகப் பழைமை வாய்ந்த திருவிவிலியச் செபமாகும். செபக்கூடங்களில் (SYNAGOGUEB) யூத மக்கள் செபிக்க ஒன்றுகூடிய வேளையில் திருப்பாடல்களைப் பயன்படுத்தினர். இந்த ஆராதனைகளில் திருப்பாடலின் பாடல்கள் கட்டாயமாகப் பயன்படுத்தப்பட்டன.

ஆரம்ப காலங்களில் இந்த வழிபாடு குருக்கள், துறவியர், பொதுநிலையினருக்கிடையில் பிரபல்யமாக இருந்தது. பிற்காலங்களில் இச்செபம் சிக்கலான தோற்றம் பல பெற்றமையால் பொதுநிலையினர் அதிலிருந்து தூரப்போயினர். குருக்களும் துறவிகளும் தினமும் கட்டாயமாக இந்தத் திருப்புகழ் மாலையைச் செபிக்க வேண்டும். இது முற்றிலும் திருவிவிலியச் செபமாகும்.

யூத மரபிற்கமைய ஒரு திருவிழாவை ஆரம்பிப்பது திருவிழா தினத்திற்கு முந்திய நாள் சூரிய அஸ்தமனத்தோடு ஆகும். எமது ஆலயத் திருவிழா நடைபெறுவதற்கு முதல் நாள் ''மாலை ஆராதனை'' அல்லது ''வெஸ்பர்'' ஆராதனை நடைபெறும். (''வெஸ்பர்'' எனப்படுவது ''மாலை ஆராதனை'' ஆகும்). தற்போது பொதுநிலையினர் திருப்புகழ்

மாலையுடன் தொடர்படும் சந்தர்ப்பமாக மாலை ஆராதனையைக் குறிப்பிடலாம். திருப்புகழ் மாலை செபிக்கப்படும் வேளைக்கேற்ப பின்வருமாறு அழைக்கலாம்.

1. காலைத் திருப்புகழ்
2. பகல் திருப்புகழ்
3. மாலைத் திருப்புகழ்
4. இரவுத் திருப்புகழ்

**மாலை ஆராதனை வழிபாட்டு ஒழுங்கமைப்பு**

- பாடல்கள் மூன்றைத் (திருப்பாடலில் இரண்டும் திருவிவிலியப் பாடல் ஒன்றும்) தியானித்தல்.
- இறைவார்த்தை (திருவிவிலியப் பகுதி)
- மறை உரை
- மரியாவின் பாடல்
- விசுவாசிகள் மன்றாட்டு
- இயேசு கற்பித்த செபம்
- நவநாள் செபம்
- நற்கருணை ஆசீர்வாதம்

மாலை ஆராதனை நற்கருணை ஆசீருடன் முடிவடைகின்றது. உயிருள்ள இயேசு கிறிஸ்துவிற்கு எமது மரியாதையைச் செலுத்தி எங்களுடைய தேவைகளை அவரிடம் ஒப்படைக்கும்போது அவருடைய ஆசீர் எமது வாழ்க்கையில் பெருக்கெடுத்து ஓடுகின்றது. ஆகவே இவ்வேளை கிறிஸ்தவர்களாகிய எமக்கு மிகவும் முக்கியமாகும். நற்கருணை ஆசீரைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் முழங்காலிலிருந்து இந்த உன்னதமான ஆசீரைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதேபோன்று நற்கருணை எழுந்தேற்றம் செய்துவைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இரு முழங்கால்களையும் மடித்து எமது ஆராதனையைச் செலுத்த வேண்டும். மாலை ஆராதனையைப் போன்று நற்கருணை ஆசீரைப் பெறும் வேறு சில சந்தர்ப்பங்களும் உள.

- ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற முதல் வியாழன் அல்லது முதல் வெள்ளி
- நற்கருணைத் திருவிழா
- ஞான ஒடுக்கத்தினங்கள் (தியான நாட்கள்)

திருப்புகழ் மாலை இவ்வுலகைப் படைத்த இறைதந்தைக்குப் புகழ்ச்சி கூறுகின்ற செபமாகும். ஆலயத்தின் மாலை ஆராதனை ஒழுங்கமைப்புக்கு உதவுதல், பங்குக்குப் பொறுப்பான அருட்பணியாளருடன் ஒன்றிணைந்து வழிபாட்டு செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், ஆலயத்தின் உள்ளேயும் வெளியேயும் அலங்கரிக்க உதவுதல், அதிக பக்தியோடு மாலை ஆராதனையில் இடம்பெறுகின்ற செபங்களில் பங்குபற்றுதல் போன்றவை வழியாக மாலை ஆராதனை மரபை எதிர்காலத்திலும் நடாத்துவதற்கு எம்மால் உதவ முடியும். இது கிறிஸ்தவர்களாகிய எமது கடமையுமாகும்.

### செயற்பாடு

1. ''திருப்புகழ் மாலை'' என்னும் செபம், இப்பெயரால் அழைக்கப்படுவதன் காரணம் என்ன?
2. திருப்புகழ் மாலை ஆராதனையில் அதிகமாக எந்த புத்தகத்திலுள்ள பாடல்கள் பாடப்படுகின்றன?
3. பொதுநிலையினரான நாம் திருப்புகழ் மாலை ஆராதனையில் பங்குபற்றும் சந்தர்ப்பங்கள் எவை?
4. நற்கருணை ஆசீர் நடைபெறுகின்ற மூன்று சந்தர்ப்பங்களை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

இறைதந்தையிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் சகல அருள் வரங்களுக்காக அவருக்கு நன்றி கூறுவோம்.

# 22 சிலுவைப் பாதை

பங்கு மக்களின் வருடாந்த தவக்காலத் திருயாத்திரை



வாருங்கள் ஒரே குடும்பத்தின்
பிள்ளைகளாய்
இயேசுவின் திருப்பாடுகளைத்
தியானிப்போம்.

| | | |
|---|---|---|
| இடம் | : | ஹினிதும கல்வாரித் திருத்தலம் |
| திகதி | : | மாசி மாதம் 25 |
| புறப்படல் | : | காலை 4.00 மணி |
| திரும்புதல் | : | மாலை 4.30 மணி |
| பயணக் கட்டணம் | : | 300/= |

**உங்கள் கவனத்திற்கு**

- ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் மாசி மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் பொருளாளரிடம் கட்டணத்தைச் செலுத்தி ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்வதோடு பயணத் தகவல் விபரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இப்பங்கு மக்கள் இந்தத் திருயாத்திரையை மேற்கொள்வதன் நோக்கம் சிலுவைப்பாதை செய்வதற்காகவே என்பது தெளிவாகிறது. சிலுவைப் பாதை எனப்படுவது கிறிஸ்துவின் திருப்பாடுகளையும் மரணத்தையும் நினைவுகூரும் ஒரு பக்தி முயற்சியாகும்.

## சிலுவைப்பாதையின் வரலாறு

திருச்சபையின் பாரம்பரியங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல கிறிஸ்துவின் சிலுவைப் பயணப் பாதையில் அன்னை மரியாவும் சென்

றிருக்கின்றாள். கொன்ஸ்டைன்டைன் பேரரசன் கிறிஸ்தவ மறையை அனுசரிக்கும் சுதந்திரத்தை கிறிஸ்தவர்களுக்கு வழங்கிய பின், கிறிஸ்து கல்வாரியை நோக்கிச் சென்ற பயணத்தின் முக்கிய நிலைகள் அடையாளம் இடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பாதையின் வழியாக கிறிஸ்தவர்கள் சிலுவைப் பாதை செய்தனர். இதற்காகப் புனித நாடு (பலஸ்தினா) செல்ல வேண்டியிருந்தது. எனினும் 5ஆம் நூற்றாண்டிலிருந்து உலகிலே பல்வேறு இடங்களில் சிலுவைப் பாதை தியானம் செய்வதற்காக பாடுகளின் நிலைகளை ஆயத்தம் செய்தனர்.

## சிலுவைப் பாதையின் நிலைகள்

பிலாத்து இயேசுவின் மரணத்துக்குத் தீர்ப்பு வழங்கிய சந்தர்ப்பத்திலிருந்து இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது வரையான விசேட நிகழ்வுகள் சிலுவைப் பாதையில் நினைவுபடுத்தப்படுகின்றன. இவை 14 நிலைகளில் அடங்கும்.

**முதலாம் நிலை**



இயேசு மரணத்திற்குத் தீர்ப்பிடப்படுகின்றார்.

**இரண்டாம் நிலை**



இயேசுவின் தோள்மேல் சிலுவையைச் சுமத்துகின்றனர்.

**மூன்றாம் நிலை**



இயேசு முதல் முறை
சிலுவையோடு கீழே
விழுகின்றார்.

**நான்காம் நிலை**



இயேசு தமது திருத்தாயாரை
சந்திக்கின்றார்.

**ஐந்தாம் நிலை**



சிரேன் ஊரானாகிய சீமோன்
இயேசுவின் சிலுவையை
சுமப்பதற்கு உதவுகின்றார்.

**ஆறாம் நிலை**



வெரோணிக்கா என்ற பக்தியுள்ள
பெண் இயேசுவின் திருமுகத்தைத்
துடைக்கின்றாள்.

**ஏழாம் நிலை**



இயேசு இரண்டாம் முறை
சிலுவையோடு கீழே
விழுகின்றார்.

**எட்டாம் நிலை**




இயேசு எருசலேம் பெண்களுக்கு
ஆறுதல் கூறுகின்றார்.

**ஒன்பதாம் நிலை**



இயேசு மூன்றாம் முறை
சிலுவையோடு கீழே
விழுகின்றார்.

**பத்தாம் நிலை**



இயேசுவின் ஆடைகளைக்
கழற்றுகின்றனர்.

**பதினோராம் நிலை**



இயேசு சிலுவையில்
அறையப்படுகின்றார்.

**பன்னிரண்டாம் நிலை**



இயேசு சிலுவையில்
மரிக்கின்றார்

**பதின்மூன்றாம் நிலை**



இயேசுவின் திரு உடல் சிலுவையிலிருந்து
இறக்கப்பட்டு அவரது திருத்தாயாரின்
மடியில் வைக்கப்படுகின்றது.

**பதினான்காம் நிலை**



இயேசுவின் திருவுடல்
கல்லறையில் அடக்கம்
செய்யப்படுகின்றது.



இலவச விநியோகத்திற்காக

இப்பக்தி முயற்சியைச் செய்வதற்கு ஓர் ஒழுங்கு முறை உண்டு. அத்தோடு இதற்கே உரித்தான செபங்களும் பாடல்களும் உள.

### சிலுவைப்பாதை செய்யும் ஒழுங்கு முறை

- *சிலுவைப்பாதையின் நிலைகளின் பெயர்களைச் சொல்லுதல்*
- *முதல்வர் : திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகின்றோம்.*
- *துணைவர் : அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*
- *தியானம்*

  *1 பர. 1 அருள், 1 திரி.*
- *செபம்*
- *முதல்வர் : எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி,*

  *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சருவேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.*
- *துணைவர் : ஆமென்.*
- *பாடல்*

  *எங்கே சுமந்து போறீர்*
  *சிலுவையை நீர் எங்கே சுமந்து போறீர்*
  *பொங்கும் பகைவராலே அங்கம் நடுநடுங்க*
  *எங்கே போறீர்*

இயேசுவின் திருப்பாடுகளை சிறப்பாக தவக்காலத்தில் சிலுவைப்பாதையின் வழியாக நாம் நினைவுகூருகின்றோம். ஆகவே மரியாதையுடனும் பக்தியுடனும் இப்பக்தி முயற்சியில் பங்கெடுப்போம். எனவே தவக்காலத்தில் வரும் அனைத்து வெள்ளிக்கிழமைகளில் அல்லது இயலுமான போதெல்லாம், தனியாக அல்லது பொதுவாக, இப்பக்தி முயற்சியில் பங்கு பற்றுதல் கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும். அதேபோன்று வாழ்க்கையில் எதிர்கொள்ளும் துன்பங்களையும் சவால்களையும் விருப்புடன் ஏற்று வாழ்வதன் வழியாகவும் ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுப்படுவதன் வழியாகவும் இக்காலத்தைச் செலவிடுதல் எமது கடமையாகும்.

## செயற்பாடு

1. சிலுவைப்பாதைத் தியானத்தின்போது நாம் எதனை நினைவு கூருகின்றோம்?
2. இப்பக்தி முயற்சி உருவாவதற்குக் காரணமான வரலாற்றுப் பின்னணியை எழுதவும்.
3. ஒவ்வொரு நிலையிலும் சிலுவைப்பாதை செய்யும் விதத்தினை எழுதவும்.



**வாழ்க்கைக்கு...**

தவக்காலத்தில் இயலுமான போதெல்லாம் தனியாகவோ பொதுவாகவோ சிலுவைப் பாதை செய்வோம்.

# 23 திருமணித்தியாலம்



படம் 23.1 - திருமணித்தியாலம்

கத்தோலிக்கத் திருச்சபையில் நிலவுகின்ற சம்பிரதாய பக்தி முயற்சிகளில் மற்றுமொரு விசேட அம்சமாகத் திகழ்வது திருமணித்தியாலமாகும். இது ஒரு மணித்தியாலமளவில் நற்கருணை நாதர் முன் அமர்ந்து தியானத்தில், செபத்தில் தூய்மையாக இருந்து அந்நேரத்தை செலவிடுவதாகும்.

## திருமணித்தியாலத்தின் வரலாறு

இயேசு கிறிஸ்து பெரிய வியாழனன்று கெத்சமனித் தோட்டத்தில் அனுபவித்த துன்பங்களை நினைவூட்டுவதோடு அதில் பங்காளி களாவதற்கு கி.பி. 1673 இல் இயேசு மார்க்கரீத் மரியம்மாளுக்குத் தோன்றிக் கொடுத்த அழைப்பிற்கு பதிலளிக்கும் முகமாக இந்த பக்தி முயற்சி ஆரம்பமானது. அதற்கமைய இது இயேசுவினாலேயே மார்க்கரீத் மரியம்மாளின் வழியாக ஆரம்பமான பக்தி முயற்சியாகும்.

இயேசு தமது திருத்தூதர்களிடம் கூறிய ''ஒரு மணி நேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா?'' (மத்தேயு 26 : 40) என்ற உருக்கமான வேண்டுகோளை இப்பக்தி முயற்சியினை நாம் இப்போது நிறைவேற்றி வருகின்றோம்.

## திருமணித்தியாலம் நடாத்த வேண்டிய சந்தர்ப்பங்கள் :

- பெரிய வியாழக்கிழமை
- ஒவ்வொரு வாரத்திலும் வரும் வியாழக்கிழமை அல்லது வெள்ளிக் கிழமை

- நற்கருணைத் திருவிழா நடாத்தும் நாள்
- ஞான ஒடுக்கத் தினங்கள்
- பங்கு மக்கள் குழுவாகவோ, குடும்பமாகவோ விசேட தேவைகளின் போதும் தினமும் செய்யக்கூடிய பெறுமதி வாய்ந்த பக்தி முயற்சியாகும்.
- தூய அன்னை திரேசா தினமும் திருமணித்தியாலத்தில் ஈடுபட்டதோடு தமது துறவற சபையினரிடமும் இவ்வாறு செய்யும்படி அறிவுரை வழங்கியுள்ளார்.

இப்பக்தி முயற்சியைக் குழுவாகவோ தனியாகவோ செய்யலாம். இவ்வாறு செய்யக்கூடிய சில இடங்கள்.

- ஆலயத்திலோ அல்லது சிற்றாலயங்களிலோ நற்கருணை ஆண்டவர் முன்னிலையில்
- குடும்பமாக ஒன்று கூடி இல்லத்தில்
- சமய நிறுவனங்களில்

**திருமணித்தியாலயம் நடத்துவதன் நோக்கம் :**

- கிறிஸ்துவின் கெத்சமனித் தோட்டச் செபத்தில் பங்கு பெறுதல்.
- எமது விசேட தேவைகளுக்காகச் செபித்தல்.
- நாம் பிரச்சினைகளைச் சந்திக்கும்போது இயேசுவின் துணையை நாடுதல்.
- கிறிஸ்துவின் சீடனாக ஆன்மீகத்தில் வளர்ச்சியடைதல்.

## தொடக்க காலத் திருமணித்தியாலத்தின் ஒழுங்குமுறை

இந்தப் பக்தி முயற்சியானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபு ஒழுங்கு முறைக்கமைய நிறைவேற்றப்படும். அதற்கமைய,

- ஆரம்பப் பாடல்
- ஆரம்பச் செபம்

- முதலாம் கால்மணி
- இரண்டாம் கால்மணி
- பாடல்
- மூன்றாம் கால்மணி
- நான்காம் கால்மணி
- பாடல்
- முடிவுச் செபம்
- பாடல்

குடும்பமாகவோ அல்லது குழுவாகவோ இப்பக்தி முயற்சியை நடாத்தும் எல்லா வேளைகளிலும் அதிக பக்தியோடு அதில் பங்குபற்ற வேண்டியது கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும்.

**செயற்பாடு**

1. புனித மார்க்கரீத் மரியம்மாள் பெற்ற காட்சியில் கிடைத்த அழைப்பு யாது?
2. திருமணித்தியாலம் செய்யக்கூடிய இரண்டு சந்தர்ப்பங்களை எழுதுக.
3. திருமணித்தியாலம் செய்வதன் இரண்டு நோக்கங்களை எழுதுக.
4. திருமணித்தியாலத்தில் நாம் எதனைத் தியானிக்கின்றோம்?



**வாழ்க்கைக்கு...**

திருமணித்தியாலத்தில் சொல்லப்படுகின்ற செபங்களைச் சரியாகவும் பாடல்களை தாளத்துக்கேற்பவும் பாடுவதற்குப் பழகுவோம்.

# 24 நற்கருணை ஆண்டவரைச் சந்தித்தலும் நற்கருணைப் பவனியும்



படம் 24-1 நற்கருணை கதிர் பாத்திரம்

இயேசு கிறிஸ்து நற்கருணையில் உயிருடன் எழுந்தருளி இருக்கிறார் என்பது கத்தோலிக்கராகிய எமது நம்பிக்கையாகும். இது நற்கருணைப் புதுமைகளின் வழியாக உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே எமது உன்னத ஆராதனையை நற்கருணை ஆண்டவருக்கு அளிக்க வேண்டும். இயலுமான போதெல்லாம் ஆலயத்திற்குச் சென்று நற்கருணை ஆண்டவரை சந்தித்து எமது ஆராதனையைச் செலுத்த வேண்டும். நற்கருணை ஆண்டவரை சந்திப்பதற்கு மேலும் பல நோக்கங்கள் உள்ளன.

- நற்கருணையில் பிரசன்னமாயிருக்கும் உயிருள்ள இயேசுவுக்கு எமது ஆராதனையையும் அன்பையும் செலுத்துதல்.
- செபத்தின் வழியாக இயேசுவோடு ஆழமான உறவை வளர்த்துக் கொள்ளுதல்.
- எமது ஆன்மீக, இவ்வுலக தேவைகளைக் கேட்டல்.
- எமது வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களை இயேசுவைச் சந்தித்து அவருடைய பாதத்தில் வைத்தல்.
- எமக்குக் கிடைத்துள்ள எல்லாவிதமான இறை அருளுக்கும் நன்றி கூறுதல்.



இலவச விநியோகத்திற்காக

**நற்கருணை ஆண்டவரைச் சந்திக்கக்கூடிய சந்தர்ப்பங்கள்**

- இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களின்போது.
- ஆலயத்தில் நற்கருணை ஆண்டவர் எழுந்தேற்றம் செய்யப் பட்டிருக்கும்போது.
- நற்கருணை ஆராதனை நடைபெறும்போது.
- ஆலயமொன்றைக் கடந்து செல்லும் எல்லா சந்தர்ப்பங்களின்போது.
- எமது தேவைகளை இயேசுவிடம் ஒப்புக் கொடுக்கும்போது.

நற்கருணைக்கு எமது உன்னத ஆராதனையையும் அன்பையும் செலுத்துவ தற்கு செல்லும்போது எம்மால் இயலுமானபோதெல்லாம் நற்கருணை ஆண்டவரைச் சந்தித்து அவரின் வழியாக எமது ஆன்மாவில் புத்துணர்வை பெற்றுக் கொள்ள முயற்சித்தல் வேண்டும்.

ஆலயத்தில் நற்கருணை ஆண்டவர் வீற்றிருக்கும் நற்கருணை பேழையின் முன் இரு முழங்கால்களையும் மடித்து தலைவணங்கி ஆராதிக்க வேண்டும்.

**நற்கருணைப் பவனி**

நற்கருணை ஆண்டவரை மகிமைப்படுத்தி எமது ஆராதனையைச் செலுத்து வதற்காகவும் அவருடைய ஆசீரைப் பெறுவதற்காகவும் நற்கருணைப் பவனி நடைபெறுகின்றது. பவனி நடைபெறுவதன் இன்னுமொரு நோக்கம் எமது கிராமத்துக்கும் அங்கு வசிக்கும் மக்களுக்கும் அவருடைய ஆசீரைப் பெற்றுக் கொள்ளுவதுமாகும். இவ்வாறான உன்னத நோக்கங்களை முன்வைத்து நடத்தப்படுகின்ற நற்கருணைப் பவனியை ஒழுங்கு செய்வதற்கும் நாம் ஒத்துழைக்க வேண்டும். அதற்காக கீழ்க் காணப்படுவனவற்றைச் செய்யலாம்.

- நற்கருணை ஆண்டவரை ஏற்றிச் செல்லும் இரதத்தை அலங்கரித்தல் வேண்டும்.
- குறிக்கப்பட்ட செபங்கள், பாடல்களில் பங்கு பற்றல் வேண்டும்.
- ஆலயத்தையும் பவனி செல்லும் வீதியையும் அலங்கரித்தல் வேண்டும்.

**நற்கருணைப் பவனியில் பங்குபற்றும் நாம்,**

- பவனிக்கு முன் நடைபெறுகின்ற திருப்பலியிலும் திருமணித் தியாலத்திலும் பங்குபற்றல் வேண்டும்.
- பவனியில் பாடப்படும் பாடல்கள் செபங்களில் பங்குபற்றுதல்.
- தேவையற்ற கதைகளைத் தவிர்த்தல் வேண்டும்.
- ஒழுங்காக நடந்து செல்லல் வேண்டும். (இருவராக அல்லது மூவராக)
- எளிமையான ஆடைகள் அணிந்து செல்ல வேண்டும்.

எமது ஆலயத்தில் நற்கருணை ஆண்டவர் எழுந்தேற்றம் செய்யப் பட்டுள்ளதால் மரியாதையின்றி நடந்து கொள்ளக்கூடாது. ஆகவே,

- ஆலயத்துக்குள் அமைதியைப் பேண வேண்டும்.
- நற்கருணை ஆண்டவரை முழங்கால்களை மடித்து ஆராதித்தல் வேண்டும்.
- நற்கருணை ஆண்டவரிடம் மிக நெருக்கமாகச் செபித்தலும் தியானத் தில் ஈடுபடுதலும் வேண்டும்.
- ஆலயத்தில் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும்.

**செயற்பாடு**

1. கத்தோலிக்கராகிய நாம் நற்கருணை ஆண்டவரைச் சந்திக்கும் மூன்று சந்தர்ப்பங்களை எழுதுக.
2. நற்கருணைப் பவனி ஒழுங்கமைப்பின்போது நீங்கள் உதவி செய்யக்கூடிய மூன்று விதங்களை எழுதுக.
3. ஆலயத்தில் நற்கருணைப் பேழையின் முன் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் மூன்றை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

ஆலயமொன்றைக் கடந்து செல்லும் ஒவ்வொரு முறையும் நற்கருணை ஆண்டவரைச் சந்திப்போம்.



இலவச விநியோகத்திற்காக

# 25 திருயாத்திரை

அன்பான இறைமக்களே,

ஆன்மீகத்தில் ஒரு புத்தெழுச்சியை ஏற்படுத்திக் கொள்வதற்காக நீங்கள் இத்திருத்தலத்திற்கு வந்துள்ளீர்கள் எனவே,

- ★ குடும்பத்தில் அனைவரும் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ★ திருப்பலியில் முழுமையாகப் பங்கு பற்றி நற்கருணையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ★ பக்தி முயற்சிகளில் தவறாது பங்கு கொள்ளுங்கள்
- ★ ஒழுக்கமாக நடந்து கொள்ளுங்கள்.
- ★ இத்திருத்தலத்தின் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படியுங்கள்.
- ★ மரியாதையான ஆடை அணியுங்கள்.
- ★ பொது வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்.
- ★ குடிவெறி, களியாட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- ★ மற்றவர்களுடன் ஒற்றுமையாக செயல்படுங்கள்.
- ★ புதிய மனிதராக உங்கள் குடும்பத்தில், பங்கில், கிராமத்தில் அடியெடுத்து வையுங்கள்.

உங்கள் அனைவருக்கும் இறை ஆசீர்

திருத்தலத்திற்குப் பொறுப்பான அருட்பணியாளர்

இந்த அறிவித்தல் பலகையானது, திருத்தலத்தின் புனித நிலையை பாதுகாத்து நடந்து கொள்ள வேண்டிய விதத்தை இறை மக்களுக்கு அறிவுறுத்துகின்றது.

அன்றாட வாழ்விலே தமது தேவைகள், பொறுப்புகள், கடமைகள், சவால்கள், துன்பங்கள் போன்றவற்றால் உழன்று கொண்டிருக்கும் மக்கள் ஆன்மீக நலனை நாடித் திருயாத்திரைகளை மேற்கொள்கின்றனர். இத்தகைய திருயாத்திரைப் பயணங்கள், இவ்வுலகிலிருந்து விண்ணக வாழ்வை நோக்கிப் பயணிப்பதை நினைவுப்படுத்துகின்றது. அவ்வாறே வாழ்வில் ஒரு புத்தெழுச்சியை விரும்புகின்ற யாவருக்கும் செபத்தினால் அந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இது ஒரு சிறப்பான சந்தர்ப்பமாகவும் இருக்கின்றது.

**திருயாத்திரைகளின் நோக்கங்கள்.**

- ★ உண்மையான ஒரே இறைவனைக் குடும்பமாகவோ, குழுவாகவோ, பங்காகவோ இணைந்து ஆராதனை செய்தல்.
- ★ இறைவனிடமிருந்து பெற்றுக் கொண்ட அனைத்து வரங்களுக்காகவும் நன்றி கூறுதல்.
- ★ தமது ஆன்மீக, லௌகீகத் தேவைகளை இறைவனிடம் சமர்ப்பித்தல்.
- ★ திருத்தலங்களைத் தரிசித்தல்
- ★ அந்த திருத்தலத்தில் இறைதந்தை செய்த அளப்பரிய செயல்களைத் தமது அனுபவமாக்குதல்.
- ★ செபத்தினாலும் ஆன்மீக எழுச்சியினாலும் புதிய வாழ்வொன்றினை ஆரம்பித்தல்.

## மருதமடு தேவ அன்னை திருத்தலம்




படம் 25.1 மருதமடு திருத்தலம்



படம் 25.2 மருதமடு தேவ அன்னை

ஒல்லாந்தர் கால துன்புறுத்தலின்போது மன்னார் கத்தோலிக்கர் பல துன்பங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. தமது விசுவாசத்தில் உறுதியாக வாழ்ந்த ஏறக்குறைய 20 குடும்பங்கள் அளவில் கி.பி 1670 இல் தமக்குரிய அனைத்தையும் கைவிட்டுக் கண்டி இராச்சிய அரசனின் ஆட்சிக்குட்பட்ட பிராந்தியத்திற்குச் சென்றனர். அவ்வாறு செல்லும்போது அவர்கள் ''மாந்தை'' என்ற ஊரின் ஆலயத்திலிருந்த புதுமைமிக்க தேவ அன்னையின் திருச்சொரூபத்தையும் எடுத்துச் சென்றனர். ''மருதமடு'' ஊருக்கு வந்த அவர்கள் உறுதியான நம்பிக்கையுடன் செபித்தார்கள். அந்த ஊருக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தப்பித்து வந்திருந்த 700 பேர்களில் ஹெலேனா என்ற ஒரு இளம் பெண்ணும் இருந்தார். அவர் மருதமடு சுங்கச்சாவடியில் பணியாற்றிய, கண்டி அரசனின் பிரதான அதிகாரியைத் திருமணம் செய்தார். அவரின் உதவியுடன் ''மடுமாதா'' வுக்காக மருதமடு ஊரிலே ஒரு ஆலயத்தை அமைத்தார்.

அத்துடன் புனித யோசேப் வாஸ் அடிகளாரினதும் அருட்பணியாளர்களினதும் ஆயர்களினதும் தலைமையில் ''மருதமடு தேவ அன்னை'' திருத்தலம் வளர்ச்சி பெற்று அதன் இன்றைய நிலையை அடைந்துள்ளது.

## தலைவில் புனித ஆனாள் (அன்னம்மாள்) திருத்தலம்



படம் 25.3 தலைவில் புனித ஆனாள் திருத்தலம்



படம் 25.4 புனித ஆனாள்

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பிய வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான கப்பல் ஒன்று தலைவில் கரையோரத்திற்கு அண்மையில் நீரில் மூழ்கும் தருவாயிலிருந்தது. புனித ஆனாளின் திருச்சொரூபம் ஒன்றும் கப்பலில் இருந்தது. எதிர்பாராத இந்த ஆபத்திலிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு கப்பலில் இருந்தவர்கள் புனித ஆனாளை வேண்டினர். அவர்கள் பாதுகாப்பாகக் கரையை அடைந்ததோடு அங்கு அவர்களுக்கு நிழலைத் தருவதற்கு ஒரேயொரு ஆலமரம் மட்டுமே இருந்தது. அந்த மரப்பொந்தில் புனித ஆனாள் திருச்சொரூபத்தை வைத்தனர். வர்த்தகர்கள் அங்கிருந்து செல்லும் முன்னர் மேலும் ஒரு நேர்த்தி வைத்தனர். அதாவது, அவர்களின் வியாபாரம் வெற்றியளித்தால் மீண்டும் வந்து அவரின் பெயரில் ஒரு ஆலயத்தை அமைப்பதாக வேண்டினர். பின்னர் காலிக்குச் சென்றனர். அவர்களின் வியாபாரம் வெற்றியாக அமைந்தது. அவர்கள் மீண்டும் வந்து தமது நேர்த்தியை நிறைவேற்றி அமைத்த ஆலயமானது, இன்றுள்ள நிலைவரை வளர்ச்சி பெற்று தற்போதைய நிலையை அடைந்துள்ளது. இதற்குக் காரணம், புனித ஆனாளின் பரிந்துரையால் இதுவரை நிகழ்ந்துள்ள அருங்குறிகளே (புதுமைகளால்) ஆகும்.

## தேவத்தை ''இலங்கை மாதா'' பசிலிக்கா (பேராலயம்)



படம் 25.5 தேவத்தை இலங்கை மாதா பசிலிக்கா



படம் 25.6 இலங்கை மாதா



இலவச விநியோகத்திற்காக

இரண்டாம் உலக யுத்தத்தின்போது கொழும்பிலும் திருகோணமலையிலும் ஜப்பானியரால் குண்டு வீசப்பட்டது. அவ்வேளையில், இந்தப் பயங்கர நிலையிலிருந்து எமது தாய் நாட்டைக் காப்பாற்றினால் ''இலங்கை மாதா'' என்ற பெயரில் ஒரு பெசிலிக்காவை அமைப்பதாக தேவத்தை பழைய ஆலயத்திற்கு அண்மையில் இருந்த பழைய லூர்து குகைக்கு முன்னால் அக்கால பேராயரான மேதகு ஜோன் மேரி மசோன் ஆண்டகை (அ.ம.தி) ஒரு நேர்த்தி வைத்தார். அவரது விசேட பிரார்த்தனை நிறைவேறியதால் அவரின் பின் பொறுப்பேற்ற பேராயர் மேதகு தோமஸ் கர்தினால் குரே ஆண்டகையினால் இந்த பெசிலிக்கா கட்டப்பட்டது.

### மாத்தறை வெற்றி மாதா திருத்தலம்



படம் 25.7 மாத்தறை அன்னையின் திருத்தலம்



படம் 25.8 மாத்தறை அன்னையின் சொரூபம்

வெலிகம பிராந்திய மீனவர் குழுவுக்குக் கிடைக்கப்பெற்ற ''மாத்தறை வெற்றி மாதா'' திருச்சொரூபம், எஸ் வுட் லீ என்பவரின் வடிவமைப்பாகும். இது 26 அங்குல உயரமுடையது. விண்ணக அரசியின் உருவத்தைக் காட்டும் இந்த திருச்சொரூபத்தை அவர் மாத்தறை ஆலயப் பங்குத் தந்தைக்குக் கையளித்தார். இந்த திருச்சொரூபம் 400 ஆண்டுகளுக்கும் மேலாக பழமை வாய்ந்ததெனக் கருதப்படுகின்றது. 2004 ஆம் ஆண்டிலே சுனாமி அலைகளினால் அடித்துச் செல்லப்பட்ட இத்திருச் சொரூபம் எவ்வித பாதிப்பும் இல்லாமல் மீளவும் கிடைக்கப்பெற்றது. புதுமைகள் பல நிறைந்த அனுபவங்களை எமக்குத் தரும் மாத்தறை மாதா ஆலயத்தின் வருடாந்த திருநாள் தேவ அன்னையின் பிறந்த நாளையொட்டிக் கொண்டாடப்படுகின்றது.

இத்திருத்தலம் 1907 ஆம் ஆண்டில் அருட்தந்தை எ- க்லொசெட் (யே.ச.) என்பவரின் தலைமையில் கட்டியெழுப்பப்பட்டது.

### புனித நாடு

கிறிஸ்துவின் பிறப்பு, இறை யாட்சிப்பணி, துன்பம், பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு ஆகிய நிகழ்வுகள் இந்த நிலப் பரப்பில் நிகழ்ந்தமையால் இப்புனித நாடு கத்தோலிக்கரின் திருயாத்திரைத் தலமாக மாறியுள்ளது.



படம் 25.9 புனித நாடு

### பாதுவா

இத்தாலியிலுள்ள பாதுவா நகரில், பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த புனித அந்தோனியாரின் திருப்பண்டம் வைக்கப்பட்டுள்ள பெசிலிக்கா ஒன்று உள்ளது. இறைவார்த்தையை மற்றவர் களுடன் பகிர்ந்து கொண்ட உண்மையாளராக விளங்கியதன் பயனாக புனிதஅந்தோனியாரின் நா இன்னும் அழியாமல் உள்ளது. அழிந்து போகாத இந்த நாவானது திருப்பண்டப் பேழையில் வைக்கப்பட்டு இந்த பெசிலிக்காவின் பீடத்தின் பின்னால் உள்ள மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அவரது தாடை, கீழ் பற்கள், அவர் அணிந்த தபசு உடைகள், திரு உடல் வைக்கப்பட்டிருந்த சவப் பெட்டியும் திருப்பண்டங்களும் மக்களின் மரியாதைக்காக இந்த பெசிலிக்காவில் வைக்கப்பட்டுள்ளன. இந்த திருப்பண்டங்களைப் பார்வையிடுவதற்கும் அவரது பரிந்துரையால் நம்பிக்கை அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏராளமான மக்கள் இந்த பெசிலிக்காவுக்கு அடிக்கடி வருகின்றார்கள்.



படம் 25.10 பாதுவா நகரில் திருப்பண்டம் வைக்கப்பட்டுள்ள பெசிலிக்கா

### கோவா



படம் 25.11 கோவா நகரின் பொன் ஜீசஸ் பெசிலிக்கா

பழைய கோவா நகரிலே உள்ள பொன் ஜீசஸ் என்ற பெசிலிக் காவில் புனித பிரான்சிஸ் சவேரி யாரின் அழியாத உடல் வைக் கப்பட்டுள்ளது. இதனைப் பார்வை யிடவும் ஆன்மீகப் புத்தெழுச் சியை ஏற்படுத்திக் கொள்ளவும் விசுவாசிகள் இத்திருத்தலத்திற்குச் செல்கின்றார்கள்.

கோவா நகரம் விசுவாசிகளிடையே பிரசித்தி பெறுவதற்கான மேலுமொரு காரணம் அது எமது நாட்டின் மறைத்தூதரான புனித யோசேப்வாஸ் அடிக ளாரின் சொந்த ஊர் ஆகும்.

இவ்வாறு கிறிஸ்தவர்களாகிய நாம் பயணம் செய்யும் திருத்தலங்கள் பல எமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ளன. எமது ஆன்ம நலனுக்காக வேண்டுதல் செய்யவும் ஆண்டவரின் வல்லமைமிகு செயல்களை அனுபவிக்கவும் நாம் பயணம் செல்கின்ற இந்தத் திருத்தலங்களின் மதிப்பு, மாண்பைப் பாதுகாக்கும் விதத்தில் நாம் செயற்படுவதற்கு முயற் சிக்க வேண்டும். அது எமது கடமையுமாகும்.

### செயற்பாடு

1. திருத்தலங்களுக்குச் செல்வதன் நோக்கங்கள் மூன்றை எழுதுக.
2. திருத்தலங்களின் மேன்மையைப் பாதுகாப்பதற்கு நாம் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் நான்கு எழுதுக.
3. புனித நாடு, பாதுவா, கோவா ஆகிய நகரங்கள் கிறிஸ்தவர் களாகிய எமது வணக்கத்திற்கு ஏதுவாக இருப்பதற்கான காரணங்கள் ஒவ்வொன்று எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

களியாட்டங்களுக்காக அல்ல ஆன்மாவின் புத்தெழுச்சிக்காக திருத்தலங்களுக்குச் செல்லுங்கள்.